# திட்டம்

## மாத இதழ்

மலர் 50

இதழ் 13

செப்டம்பர் 2018

பாத்ரபத - அஸ்வின் 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

இணை ஆசிரியர்

**ஆ. இளங்கோவன்**

துணை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**



கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி இயக்குநர்

**திட்டம்**

வெளியீட்டுப்பிரிவு

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர்

சென்னை -600 090

தொலைபேசி : 044-2446 5382


## உள்ளடக்கம்


- தலையங்கம்
- இந்தியாவின் உடனடித்தேவை: நம்பத்தகுந்த வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்கள் - ராஜீவ் குமார்
- ஊதியப் பட்டியலைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பைக் கணக்கிடுதல் - டி.வி.மோகன்தாஸ் பாய், யாஷ் பெய்த்
- இந்தியாவில் வேலைவாய்ப்பு மேம்படும் சூழல் - சுர்ஜித் பல்லா
- புதுமையும் தொழில் முனைவும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மிகவும் முக்கியம் - அமிதாப்காந்த்
- இந்தியப் பொருளாதாரம்: வேலைவாய்ப்பை அதிகரித்தல் - பிபெக் டெப்ராய்
- வாழ்வாதார மேம்பாடும் பன்முகத்தன்மையும் - அமர்ஜீத் சின்ஹா
- நகரப்பகுதிகளில் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் - துர்கா சங்கர் மிஸ்ரா
- தரமான வேலை வாய்ப்பை உருவாக்குதல் வேலை தேடுபவர்நடையை விரைவுபடுத்துதல் - ஹெச்.எல்.சமாரியா
- கல்வி, வேலைவாய்ப்பு, வேலைத்திறன் - மனிஷ் சபர்வால்
- இளைஞர் திறன் வளர்ப்பு மக்கள்தொகை, வயது சாதக நிலையை பயன்படுத்துதல் - கே.பி. கிருஷ்ணன்
- முத்ரா திட்டம் தொழில், வேலைவாய்ப்பு ஊக்கி - ராஜீவ்குமார்
- சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்: - அருண்குமார் பாண்டா
- சாலைகள் மேம்பாடு: மறைமுக வேலைவாய்ப்புகள் - யுதிர் சிங் மாலிக்
- இந்தியத் தொழிலாளர் சந்தை: கொள்கை முடிவுகள் - பிரவின் ஸ்ரீவஸ்தவா
- தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விரிவாக்கப்படும் வேலைவாய்ப்பு சூழல் மற்றும் வாய்ப்புகள் - ஆர்.வி.சஞ்சீவனா



Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

# வேலைவாய்ப்பு நிலவரம்

சர்வதேச அரங்கில் பெருமிதமான ஒரு இடத்தை இந்தியா இன்று பெற்றுள்ளது. வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரம், மிக அதிகமான சக்திமிக்க மனிதவளம் ஆகியவை இதற்குக் காரணம். பெருபாலான வளர்ந்த நாடுகளில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இந்தியாவோ 2022இல் உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் இளைஞர்களைக் கொண்டிருக்கும் இளைய பாரதமாக இருக்கப்போகிறது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 40 சதவீதம் அளவிற்கு இளைஞர்களாக இருக்கும் இந்திய தேசம் மிகவும் துடிப்புமிக்க, சக்தி கொண்ட, மதிப்புமிக்க பிரிவினரை அதிகமாகக் கொண்டிருக்கும் தேசம். புதியனவற்றைப் படைக்கும் திறன் கொண்ட இந்த இளைய சமூகம் வேலைக்குத் தேவைப்படும் உகந்த திறன்களைக்கொண்டதாக இருக்கவேண்டும் என்பது அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கவலையாக இருந்துவந்திருக்கிறது.

விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவில் பெரும்பாலான மக்கள் விவசாயத்திலேயே ஈடுபட்டுவந்தனர். இந்தியப்பொருளாதாரம் வேளாண் பொருளாதாரமாக இருந்தது. காலப்போக்கில், நவீனமயம், தொழில்மயம் போன்றவை பெருகி உத்வேகத்தைப் பெற்றுள்ளன. மிக அண்மைக்காலமாக சுய வேலைவாய்ப்பைப் பெருக்குவது பற்றி கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. தொழில் முனைவுகளுக்கு மிக அதிகமான வாய்ப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. பிரதமரும் கூட தேசிய இளைஞர் தினத்தன்று உரையாற்றிய போது இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக இருக்கக்கூடாது, வேலைகளை உருவாக்குபவர்களாக இருக்கவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார்.

முறைசார்ந்தது - முறைசாராதது, கிராமப்புறம் - நகர்ப்புறம், விவசாயம் சார்ந்தது - விவசாயம் சாராதது, திறன்கள் தேவைப்படுவது - திறன்களின் தேவை இல்லாதது ஆகிய சிறப்பியல்புகளைக் கொண்டதாக இந்தியப் பொருளாதாரம் திகழ்கிறது. இத்தகைய கூறுகள் ஒவ்வொன்றிலும் உள்ள பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்தி அவற்றைக் களையும் போதுதான் வேலைவாய்ப்பைப் பெருகுவதற்கு நாம் முயற்சிக்க முடியும். ஒரு பக்கம் குறைவான திறன்கள் உள்ள தொழிலாளர்களைத் திறன் படைத்தவர்களாக்கும் தேவை இருக்கிறது. அதே நேரத்தில் முறை சாராத தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை முறை சார்ந்த தொழில் அமைப்புகளுக்குள் கொண்டுவரவேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தியாவில் அதிகம் பேருக்கு வேலை அளிக்கும் துறையாக விவசாயம் இன்னமும் இருந்துவருகிறது. விவசாயத்தைத்



தவிர்த்து சிறிய அளவில் உற்பத்தி, பதனிடல், பழுது நீக்குதல், கட்டுமானம் போன்ற பல சேவைகள் கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் கணிசமான வருவாய் கிடைப்பதற்கு உதவுகின்றன. வேளாண் மையங்கள், வேளாண் தொழில் மையங்கள், தேசிய உணவுப்பாதுகாப்புத்திட்டம் போன்ற முயற்சிகள் கிராமப்புறப் பகுதிகளில் விவசாயம் சாராத வேலைவாய்ப்புகளுக்கு மிகுந்த உத்வேகம் அளித்திருக்கின்றன.

சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி, அதனையும் தாண்டி கைத்தறி, கைவினைப் பொருள்கள் போன்ற தொழில்களில் அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுவதால் அங்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் படைத்ததாக MSME இருக்கிறது. சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 2022 வாக்கில் 100 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் என்று தேசிய உற்பத்திக்கொள்கை மதிப்பிட்டுள்ளது. எனவே தொழில் முனைவோர் திறன் பயிற்சி மேம்பாட்டுத்திட்டம், பிரதம மந்திரியின் வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம் (Prime Minister Employment Generation Programme - PMEGP), பாரம்பரியத் தொழில்கள் புனரமைப்பு நிதிக்கான திட்டம் (Scheme for Fund for regeneration of Traditional Industries - SFURTI), தொகுப்புகள் மேம்பாட்டுத்திட்டம் (Cluster development programmes) ஆகிய திட்டங்களின் மூலம் இந்தத் துறைக்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கம் சிறப்பான கவனத்தை செலுத்தி வருகிறது.

நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பு நிலைமை மாற்றங்களைக் கண்டு வருகிறது. இங்கு, இணைய வணிகம், தகவல் தொழில்நுட்பம், தரவுகள் பகுப்பாய்வு, நிதி, சேவைத்துறைகள் போன்றவற்றில் புதிய தொழில் முனைவு வாய்ப்புகள் அதிகரித்துவருகின்றன. முத்ரா, அடல் புதுமையாக்கத்திட்டம், திறன் இந்தியா (Skill India), தொழில் தொடங்கிடும் இந்தியா - நிமிர்ந்து நிற்கும் இந்தியா (Start up India-Stand up India), தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத்திட்டம் (National Urban Livelihood Mission) போன்ற திட்டங்கள் இளைஞர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் திறன், நிதி, அனுமதி ஆகியவை தொடர்பான தேவைகளின் மீது கவனம் செலுத்தி வருகின்றன.

சுயதொழில்களைத் தொடங்குவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கும் அதே நேரத்தில், வேலைவாய்ப்பளிப்பவர்களுக்கு மானியம், தொழிலாளர் நல நிதிக்கும், தொழிலாளர் காப்புறுதிக்கும் பங்களிப்பு ஆகியவற்றை அளிப்பதன் மூலம் வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு வேலை அளிப்பதை அரசாங்கம் ஊக்கப்படுத்துகிறது. பிரதமமந்திரி வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம் (Pradhan Mantri Rojgar Protsahan Yojana - PMRPY) மூலம் பணியாளர் ஓய்வூதியத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை வேலை தருபவரின் சார்பாக அரசாங்கம் செலுத்திவிடுகிறது. இது தவிர, வேலையில்லாத எண்ணற்ற நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. பிரதம மந்திரியின் கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்டம் (Pradhan Mantri Gram Sadak Yojana), சீர்மிகு நகரங்கள் திட்டம், (Smart cities), அம்ருத் திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation - AMRUT), சுற்றுலாத்தலங்களில் விருந்தோம்பல் தொழில்கள் தொடங்குதல் (Hunar Se Rojgar Tak) போன்றவை பயன் தரும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கும் திட்டங்களாகும். இத்தகைய வேலைவாய்ப்பு உருவாக்கங்களின் எண்ணிக்கை முறைசார்ந்த வேலைவாய்ப்புகள் பற்றிய தரவுகளில் இடம்பெறுவதில்லை என்றபோதிலும் ஏராளமான வேலைவாய்ப்புகள் இவற்றின் மூலம் உருவாகியிருப்பதை மறுக்கமுடியாது. வீட்டுக்கு வீடு சென்று விவரங்களைத் துல்லியமாக சேகரித்து வேலைவாய்ப்பு பற்றிய நம்பகமான தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பணி நிறைவடையும் போது இத்தகைய முயற்சிகளின் பலன்கள் தெளிவாகத் தெரியவரும்.

நவீனப் பொருளாதாரத்தின் வெற்றி, நாட்டின் வேலைவாய்ப்புடன் நேரடித் தொடர்பு கொண்டது ஆகும். அனைவருக்கும் வேலை அளிப்பது என்பதே முழுமையான வேலைவாய்ப்பை எட்டும் நிலையாகும். அண்மைக்காலங்களில் இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலவரத்தில் ஏற்பட்டிருக்கும் எழுச்சி, இந்தியா இதில் பின்தங்கிவிடவில்லை என்பதையே காட்டுகிறது.

**- ஆசிரியர்**

# இந்தியாவின் உடனடித்தேவை: நம்பத்தகுந்த வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்கள்

- ராஜீவ் குமார்

இந்தியாவில் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும், மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. நிறைவான ஊதியம் கொண்ட தரமான வேலைவாய்ப்புகள்தான் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் என்பதால், அத்தகைய வேலை வாய்ப்புகள்தான் இப்போது தேவைப்படுகின்றன. எனவே, வேலைவாய்ப்பு நிலைமை அல்லது வேலையில்லாத் திண்டாட்டம் இந்தியாவில் பரபரப்பாக விவாதிக்கப்படும் பொருளாக இருப்பது இயல்புதான். எனினும், இந்த விவாதம் மூன்று எதார்த்தங்களுக்கு உட்பட்டே இருக்கிறது. முதலாவதாக இந்தியாவில் 80 சதவீத வேலைவாய்ப்புகள் அமைப்புசாரா தொழில் துறைகளில்தான் உள்ளன. எனவே இந்த வேலைவாய்ப்புகளை அளவிடுவது மிகவும் கடினமானது. இரண்டாவதாக புதிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான இப்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் நடவடிக்கைகள் அமைப்புசாரா தொழில்துறையில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கின்றன. இவை எந்தவொரு அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளிலும் பதிவு செய்யப்படவில்லை. மூன்றாவதாக, அமைப்புசாராத் துறையில் புதிதாக உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளின் தரமும், அதற்காக வழங்கப்படும் ஊதியமும் வேலைதேடும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதாக இல்லை. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன வேலைவாய்ப்புகளுக்கு அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் குவிவது இதையே எதிரொலிக்கிறது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன வேலைகளுக்கு அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் குவிவதை, இளைஞர்களுக்கு அவர்கள் இப்போது பார்க்கும் வேலை மனநிறைவளிக்கும் வகையில் இல்லை என்பதைத்தான் காட்டுகிறதே தவிர, இந்த எண்ணிக்கையை இந்தியாவில் வேலை இல்லாமல் தவிப்பவர்களின் எண்ணிக்கையாக கருதி குழப்பிக்கொள்ளக்கூடாது.

இந்தியப்பொருளாதாரம் சமநிலையான வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதிகரித்து வரும் இளைஞர்களுக்கு வரும் ஆண்டுகளில் வேலை வழங்குவதன் மூலமே இந்த நிலை தொடர்வது உறுதி செய்யப்படும். இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தைக் கணக்கிடும்போது நாட்டின் வேலைவாய்ப்புச் சந்தையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி முதல் ஒரு கோடியே 20 இலட்சம் பேர் வரை வேலை தேடி நுழைகின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை 27 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை என்ற கவலை அளிக்கும் அளவில் இருப்பதை கணக்கில் கொண்டால், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வேலை தேடத்தொடங்குவோரின் எண்ணிக்கை சுமார் 80 இலட்சம் என்ற அளவில் உள்ளது. இந்த அளவுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே மிக மிகக் கடினமான இலக்காகும். புதிதாக வேலை தேடி வருவோர் அனைவருக்கும் வேலை வழங்கும் அளவுக்கு புதிய வேலைவாய்ப்புகள் ஒவ்வொரு ஆண்டும் உருவாக்கப் படுகின்றன என்பதுதான் நம்மிடம் உள்ள புதிய புள்ளிவிவரங்களின் அடிப்படையிலான உண்மையாகும். எனினும், கடந்த காலங்களில் வேலைதேடத் தொடங்கி, வேலை இல்லாமல் தவிப்பவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

### நம்பத்தகுந்த வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்கள்

இந்தியாவில் வேலைவாய்ப்பு அதிகரித்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்பது குறித்த இப்போதைய விவாதம் நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் இல்லாமல் குழப்பத்திற்குள்ளாகியுள்ளது. இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்புகள்தான் வேலைவாய்ப்பு குறித்த புள்ளிவிவரங்களின் நம்பத்தகுந்த ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் கீழ் செயல்படும் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தால் (NSSO) நடத்தப்படும் வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பின்மை கணக்கெடுப்பு தான் இந்தியாவின்

வேளாண்மை, உற்பத்தித்துறை, சேவைத்துறை உள்ளிட்ட துறைகளில் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வேலைவாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை குறித்த மிகவும் விரிவான கணக்கெடுப்பாகும். இந்தியாவில் இத்தகைய கணக்கெடுப்பு கடைசியாக 2011-12ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. எனவே, இந்தியாவில் உள்ள வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்புகள் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்டவையாகும்.

அதேபோல், 2015-16ஆம் ஆண்டில் தொழிலாளர் அமைப்பால் நடத்தப்பட்ட ஆண்டு வாரியான தொழிலாளர்கள் கணக்கெடுப்பும் சில ஆண்டுகள் பழமையானவைதான். எனவே, கடந்த 3-4 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு நிலைமை குறித்த நம்பத்தகுந்த தகவல்கள் எதுவும் இல்லை. தொழிலாளர் அமைப்பின் சார்பில் 2017ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் நடத்தப்பட்ட காலாண்டு வேலைவாய்ப்புக் கணக்கெடுப்புதான் நம்மிடம் உள்ள சமீபத்திய கணக்கெடுப்பு ஆகும். இதுவும் எட்டு துறைகளில் உள்ள வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்பு மட்டுமே ஆகும். இந்த எட்டு துறைகளும் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பில் வெறும் 15 சதவீதத்திற்கு மட்டுமே பங்களிப்பு செய்வதால், இதுவும் நாட்டின் வேலைவாய்ப்பு நிலைமை குறித்து துல்லியமாக பிரதிபலிக்கவில்லை.

### வேலைவாய்ப்புத் தகவல்கள்

இந்தியாவில் அரசு வேலைவாய்ப்புகள் குறித்த தகவல் இல்லாத நிலைமை கடந்த இரு ஆண்டுகளாக நீடித்தது. இந்த இடைவெளியை இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையமும், மும்பை பங்குச்சந்தை (CMIE - BSE) தயாரித்த மூன்றாண்டு வேலைவாய்ப்பு அறிக்கைகள் நிரப்பியுள்ளன. இதற்கான இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் கணக்கெடுப்பு உத்தி குறித்து எழுதியுள்ள விரிவான விளக்கத்தில் சுர்ஜித் பல்லா, தீர்த்தா தாஸ் (தொகுப்பு நூலின் தலைப்பு: Bhalla and Das, 'All You Wanted to Know About Jobs in India But Were Afraid to Ask' July 2018) ஆகியோர் கூறியிருப்பதைப்போல இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் புள்ளிவிவரங்கள் ஏராளமான பிரச்சினைகளைக் கொண்டிருப்ப தால், அவற்றை முழுமையாக நம்பமுடியாத நிலை உள்ளது. உதாரணமாக, இந்தியாவில் பெண் தொழிலாளர்களின் அளவு 2014ஆம் ஆண்டில் 26.40 சதவீதம் இருந்ததாகவும், 2017ஆம் ஆண்டில் அது 11.7 சதவீதமாக குறைந்து விட்டதாகவும் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாக சுர்ஜித் பல்லா, தீர்த்தா தாஸ் ஆகியோர் கூறியுள்ளனர். வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை இந்த அளவுக்குக் குறைந்திருப்பதாகக் கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இத்தகைய குளறுபடிகள் காரணமாக இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் புள்ளிவிவரங்களும், அவை சார்ந்த வேலைவாய்ப்பு / வேலைவாய்ப்பின்மை குறித்த புள்ளிவிவரங்களும் நம்பமுடியாதவையாக உள்ளன. வேலைவாய்ப்பு குறித்த புள்ளிவிவரங்களில் மிகப்பெரிய அளவில் இடைவெளி இருப்பதால் இந்தியாவில் வேலைவாய்ப்பு குறித்த புள்ளிவிவரங்களை ஆய்வு செய்வதற்காக நிதிஆயோக் அமைப்பின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அர்விந்த் பனகாரியா தலைமையில் ஒரு பணிக்குழு 2017ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அக்குழு 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் அளித்த அறிக்கையில் இந்தியாவில் வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்காக ஆண்டுதோறும் கணக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. இத்தகைய கணக்கெடுப்பு வீடு வீடாகச் சென்று நடத்தப்படவேண்டும் என்று அக்குழு பரிந்துரைத்திருந்தது. அதன்படி, இப்போது கணக்கெடுப்பு நடத்தப்பட்டுவருகிறது. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தின் மூலம் நடத்தப்படும் இந்தக் கணக்கெடுப்பின் முதல் அறிக்கை 2019ஆம் ஆண்டின் முதல் பகுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் புள்ளி விவர அறிக்கை வெளியிடப்பட்டால் இந்தியாவின் இன்றைய வேலைவாய்ப்புச் சூழல் குறித்த தேவை இல்லாத விவாதங்களுக்கும், குழப்பங்களுக்கும் இடமில்லாமல் போய்விடும்.

### வேலைவாய்ப்பு உருவாக்கம்: ஊதியப்பட்டியல் கணக்கீடு

இந்தியாவில் முதன்முறையாக ஊதியப்பட்டியல் மூலம் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் முறைசார்ந்த வேலைகளில் இருப்பவர்களின் எண்ணிக்கையையும், மாதந்தோறும் அது எந்த அளவுக்கு உயருகிறது என்பது குறித்த புள்ளி விவரங்களையும் அறியமுடியும். இந்தியாவில் அமைப்புசார்ந்த தொழில்துறைகள் குறித்த தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பின் சம்பளப்பட்டியல் மூலம் 2017ஆம்

ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 41 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இதற்கு முன்பு புலாக் கோஷ், சௌமியா காந்தி கோஷ் ஆகியோர் இதுகுறித்த ஆய்வை இணைந்து மேற்கொண்டனர். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் சம்பளப்பட்டியல் விவரங்களை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகம், தேசிய ஓய்வூதியத்திட்டம் ஆகியவற்றின் புள்ளிவிவரங்களுடன் இணைத்த அவர்கள், 2016-17ஆம் ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் 70 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருப்பதாகக் கண்டறிந்து அறிவித்தனர். இந்த ஆய்வை நிதிஆயோக் அமைப்புடன் இணைந்து அவர்கள் மேற் கொண்டனர். வேலைவாய்ப்புப் பெற்றவர்களில் இளம் வயதுப் பிரிவினரை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்ட அவர்கள் எந்த வகையிலும் ஒருவரின் பெயர் இருமுறை கணக்கிடப்படாமல் இருக்கும் வகையில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். வருங்கால வைப்புநிதி அலுவலக அமைப்பின் சம்பளப்பட்டியல் கணக்கீட்டின் அடிப்படையில் மட்டும் 2017-18ஆம் ஆண்டில் 55 இலட்சம் பேர் வேலை பெற்றுள்ளனர். இதே கணக்கீட்டின் அடிப்படையில் 2016-17ஆம் ஆண்டில் 45 இலட்சம் பேர் வேலை பெற்றுள்ளனர். தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தின் சம்பளப்பட்டியல் விவரங்கள், அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகு முதல் முறையாக அண்மைக்காலங்களில் குறிப்பிட்ட இடைவெளியில் வெளியிடப்பட்டு வருகின்றன. 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 41 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றிருப்பதாக அந்தக் கணக்கீடுகள் தெரிவிக் கின்றன. இந்தப் புள்ளிவிவரங்கள் புலாக் கோஷ், சௌமியா காந்தி கோஷ் ஆகியோர் வெளியிட்ட புள்ளிவிவரங்களை உறுதிசெய்யும் வகையில் அமைந்துள்ளன.

அமைப்பு சார்ந்த தொழில் துறையில் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை சம்பளப்பட்டியல் கணக்கீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் நிலையில், அமைப்பு சாராத் தொழில்துறையில் புதிதாக உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளைக் கணக்கிடுவதற்கும் பல வெற்றிகரமான வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன. அமைப்பு சாராத் தொழில்துறையில் வேலைவாய்ப்புகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. அதுகுறித்து பின்வரும் பத்திகளில் பார்ப்போம்.

### அமைப்புசாராத் தொழில்துறை

இந்தியத் தொழிலாளர்களில் 80 சதவீதத்தினர் அமைப்புசாராத் தொழில்துறையில்தான் உள்ளனர். இத்துறைகளில் வேலைவாய்ப்பைப் பெருக்க இப்போதைய அரசும், புதிய பொருளாதாரமும் பல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. ஓலா / ஊபர் டேக்ஸி நிறுவனங்களில் ஓட்டுநர் பங்குதாரர்கள், ஃபிலிப் கார்ட் / அமேசான் / ஸ்னாப் டீல் அல்லது தொழில்முறை சார்ந்த வீட்டு சேவை வழங்கும் நிறுவனங்களான அர்பன் கிளாப் / குயிக்கர் சர்வீசஸ் போன்ற நிறுவனங்களில் உறுப்பினர் அடிப்படையிலான வேலை வாய்ப்புகளை புதிய பொருளாதாரம் உருவாக்கியுள்ளது. மேற்கண்ட வேலைகளைச் செய்பவர்கள், சாதாரண நிறுவனங்களில் பணியாற்றும் முறை சார்ந்த பணியாளர்களில் இருந்து மாறுபட்டவர்களாவர். அதனால் இவர்கள் அதிகாரப்பூர்வ வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்புகளிலோ அல்லது முறை சாரா வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்புகளிலோ சேர்க்கப் பட்டிருக்க மாட்டார்கள்.

உறுப்பினர் அடிப்படையிலான வேலை வாய்ப்புகள் அதிகரித்து வருவதற்கு நாம் ஏராளமான உதாரணங்களைக் கூறமுடியும். எடுத்துக்காட்டாக, இந்தியா சார்ந்த ஓலா நிறுவனத்தில் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மொத்தம் 20 நகரங்களில் 37,000 ஓட்டுநர்கள் மட்டுமே பதிவு செய்து கொண்டிருந்தனர். இந்த எண்ணிக்கை 2018ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 110 இந்திய நகரங்களில் 10 இலட்சம் ஓட்டுநர் பங்குதாரர்கள் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் பன்னாட்டு நிறுவனமாக ஊபர் டாக்ஸி நிறுவனம் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் 12 இலட்சம் பதிவு செய்யப்பட்ட ஓட்டுநர் பங்குதாரர்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் டாக்ஸி நிறுவனங்களின் மூலமாக மட்டும் கடந்த 4 ஆண்டுகளில் 22 இலட்சத்திற்கும் கூடுதலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. அர்பன் கிளாப், குயிக்கர் சேவைகள் ஆகியவை இந்தியாவின் பெருநகரங்களில் மொத்தம் 25 இலட்சம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்றன. பட்டயக் கணக்காளர்கள், கம்பெனி செயலாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற தொழில் பிரிவினர்

ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கில் பணி செய்யத் தொடங்கு கின்றனர். அவர்கள் தங்களின் உதவியாளர்களாக பல ஆயிரம் பேரை நியமித்துக்கொள்கின்றனர். அவர்கள் மூலம் வேறு வகையான சேவை வழங்குவோருக்கும் வேலை கிடைக்கிறது. இவர்கள் குறித்த விவரங்களும் வேலைவாய்ப்புப் புள்ளி விவரங்களில் சேர்க்கப்படுவ தில்லை. இவர்களும், இவர்கள் மூலம் வேலை பெற்றவர்களும் புதிதாக வேலை பெற்றவர் எண்ணிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

2013ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் சரக்குப் போக்கு வரத்துத் துறையில் 81 இலட்சம் சரக்குந்துகள் இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 7 இலட்சம் புதிய சரக்குந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, இந்தியாவில் இப்போதைய நிலையில் ஒரு கோடியே 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட சரக்குந்துகள் இந்திய சாலைகளில் இயங்கிக் கொண்டிருக் கின்றன. நமக்குத் தெரிந்தவரை சரக்குந்து ஓட்டுநர்கள், உதவி யாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் எவரும் வேலைவாய்ப்பு குறித்த கணக்கீடுகளில் சேர்க்கப் படுவதில்லை. அதேபோல், புற நகரங்கள் மற்றும் ஊரகப்பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்களும், பிற போக்குவரத்துப்பணிகளைச் செய்பவர்களும் இந்தக்கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இவ்வாறாக அனைத்து வகையான முறைசாரா பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களையும் கணக்கில் கொண்டால், முறைசாரா பணிகளில் மேற்கண்ட துறைகளின் மூலமாக மட்டும் 1.2 கோடி முதல் 1.5 கோடி பேர் வரை வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.



சாலையோர உணவகங்கள், சுற்றுலா சார்ந்த தொழிலாளர்கள், ஊரகக் கடைகளில் பணி செய் பவர்கள், சந்தைகள் மற்றும் அவை சார்ந்த பணிகளிலும் முன்பு கூறியதைப்போலவே இலட்சக் கணக்கானோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், மேற்கண்ட முறைசாரா தொழில்கள் அல்லது இதுவரை வேலைவாய்ப்பு விவரம் கண்டுபிடிக்கப்படாத தொழில்களில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை குறித்து துல்லியமான மதிப்பீடு செய்யப்படும் வரை இந்தியாவில் வேலைவாய்ப்பு சூழ்நிலை குறித்தோ, கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வேலை வாய்ப்பு உருவாக்கங்கள் குறித்தோ நாம் எந்த முடிவுக்கும் வரமுடியாது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆதாரங் களின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் 70 இலட்சம் முதல் 85 இலட்சம் புதிய வேலைகள் உருவாக்கப் பட்டிருக்கலாம் என்பது நம்முடைய மதிப்பீடு ஆகும். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்புச் சந்தைக்கு வருவோருக்கு வேலைவாய்ப்பு வழங்க இவை போதுமானவை ஆகும்.

**சுயவேலைவாய்ப்பு**

அமைப்புசாரா தொழில் துறைகள் தவிர சுயதொழில் துறையும் வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. சுயதொழில் செய்வோரின் எண்ணிக்கையும் கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருக்கிறது. இப்போதைய அரசால் தொடங்கப்பட்ட முத்ரா கடன் நாடு முழுவதும் சுயவேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கு வதற்கும் தொழில் முனைவோருக்கு உதவக்கூடிய திட்டமாகத் திகழ்கிறது. முத்ரா மூன்று வகையான கடன்களை வழங்குகிறது. 1. சிஷு என்ற பெயரில் 50 ஆயிரம் வரை கடன் வழங்கப்படுகிறது. 2. கிஷோர் என்ற பெயரில் 50 ஆயிரம் முதல் 5 இலட்சம் வரை கடன் வழங்கப் படுகிறது. 3. 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை கடன் வழங்கும் திட்டத்திற்கு தருண் என்று பெயரிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று

ஆண்டுகளில் 12.27 கோடி பேருக்கு 6 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள கடன் வழங்கப்பட்டிருக்கிறது. கடன் பெற்றவர்களில் 74 சதவீதத்தினர் அதாவது ஒன்பது கோடி பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் புதிதாகக் கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை மட்டும் 3.25 கோடி அல்லது 26 சதவீதம் ஆகும். இவ்வாறு வழங்கப்பட்ட ஒவ்வொரு கடன் மூலமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. முத்ரா கடன் மூலம் ஒவ்வொரு துறையிலும் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வேறுபடும் என்பதை நம்மிடம் உள்ள உதாரணங்களின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. எனினும், ஒவ்வொரு முத்ரா கடன் மூலமாகவும் குறைந்தது ஒரு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கப் பட்டிருக்கக் கூடும் என்று நாம் உறுதியாக நம்பமுடியும். கிஷோர் மற்றும் தருண் ஆகிய பெயர்களிலான முத்ரா கடன்கள் மூலம் ஒன்றுக்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனாலும் ஒவ்வொரு முத்ரா கடன் மூலமாகவும் ஒருவர் மட்டுமே வேலைவாய்ப்பு பெற்றிருப்பதாகவும், மீண்டும் மீண்டும் பெறப்பட்ட முத்ரா கடன்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்காது என்றும் கணக்கில் கொண்டால்கூட, முத்ரா திட்டத்தின் மூலமாக மட்டும் இதுவரை 6 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே கணக்கிடப்பட்ட வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை யுடன் இதையும் சேர்த்தால் கடந்த நான்கு ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், வேலையில் சேர்வதற்கு தகுதி பெற்றவர்களைவிட, அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் கருதலாம். இன்னும் கேட்டால், புதிய பொருளாதாரத்தின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் புதிதாக வேலையில் சேரத் தகுதி பெற்றவர்களுக்கு வேலை வழங்கப்பட்டது மட்டுமின்றி, ஏற்கெனவே வேலைவாய்ப்புச் சந்தைக்கு வந்து வேலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தவர்களில் குறிப்பிட்ட அளவினருக்கும் வேலை வழங்கப் பட்டுள்ளது.

இந்தியத் தொழிலாளர் சந்தையில் தேவைப்படும் வேலை களுக்கும், வழங்கப்படும் வேலை களுக்கும் இடையே நிலவும் சமநிலை என்பது ஊதிய உயர்விலும் எதிரொலிக்கிறது. உருவாக்கப்படும் வேலைகளின் எண்ணிக்கையைவிட, வேலை தேடுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் கடந்த சில ஆண்டுகளில் ஊதிய விகிதம் கணிசமாகக் குறைந்திருக்கும். அதைக்கொண்டு வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த போக்கை நாம் அறிந்து கொண்டிருக்க முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக நகர்ப்புறங்களில் தொழிலாளர் களுக்கு வழங்கப்படும் ஊதியம் உயர்ந்துள்ளதா? குறைந்துள்ளதா? என்பது குறித்த புள்ளிவிவரங்கள் நம்மிடம் இல்லை. அதே நேரத்தில், வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத தொழில்களில் தினசரி ஊதியத்தின் ஆண்டு சராசரி குறித்த விவரங்களை 2014 முதல் 2018 வரையிலான 4 ஆண்டுகளுக்கு தொழிலாளர் அமைப்பு வெளியிட்டுள்ளது. வேளாண்மை சாராத தொழில்களைப் பொறுத்த வரை தச்சர்கள், பொற்கொல்லர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட கிராமப் புறங்களைச் சேர்ந்த அனைத்து வகை ஆண் தொழிலாளர்களின் ஊதியமும், கடந்த நான்கு ஆண்டுகளில் அதிகரித்திருப்பதாகக் கிடைத்திருக்கும் புள்ளி விவரங்கள் நமக்கு மிகுந்த மனநிறைவை அளிக்கின்றன. பிளம்பர்களுக்கான ஊதியம் மட்டும் ஓரளவு குறைந் துள்ளது. கொத்தனார்கள், இரும்புக் கொல்லர்கள், தச்சர்கள், தூய்மைப் பணியாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கான ஊதியம் ஒன்பது சதவீதம் முதல் பத்து சதவீதம் அளவுக்கு அதிகரித்திருக்கிறது. எந்த வகையில் பார்த்தாலும் எதிர்மறைவாதிகள் நம்மை நம்ப வைக்கமுயல்வது போன்று ஊரக இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கவில்லை என்பதுதான் உண்மை.

கிராமப்புறங்களைப் போலவே நகர்ப்புறங்களிலும் வேலைவாய்ப்பும், ஊதியமும் அதிகரித்திருக்கும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்தியாவின் வளர்ச்சி வேலையில்லாத வளர்ச்சி அல்லது திருப்தி அளிக்காத வளர்ச்சி என்று கூறுபவர்கள் தாங்கள் அவ்வாறு கூறுவதற்கான காரண காரியங்களை மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து பார்க்கவேண்டும். இல்லாவிட்டால், தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகம், வீடு வீடாக நடத்தி வரும் வேலைவாய்ப்பு குறித்த கணக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை கருத்து தெரிவிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

---

- **ராஜீவ் குமார்**, துணைத்தலைவர், நிதிஆயோக், இந்தியஅரசு.

●

# ஊதியப் பட்டியலைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பைக் கணக்கிடுதல்

- டி.வி.மோகன்தாஸ் பாய்
- யாஷ் பெய்த்

இந்தியாவில் புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்து விரிவான அறிக்கைகள் எதுவும் தயாரித்து வெளியிடப்பட வில்லை. எனினும் அமைப்பு சார்ந்த தொழில் துறைகளில் உருவாக்கப் படும் வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள் மட்டும் பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் பேராசிரியர் புலாக் கோஷ், பாரத ஸ்டேட் வங்கி குழுமத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் முனைவர் சௌமியா காந்தி கோஷ் ஆகியோர் இணைந்து தயாரித்து வெளியிட்ட "இந்தியாவில் ஊதியப்பட்டியல் அடிப்படையிலான வேலைவாய்ப்புக் கணக்கீட்டை நோக்கி" என்ற தலைப்பிலான அறிக்கையில் முதன் முறையாக வெளியிடப் பட்டிருக்கின்றன. கோஷ் இணையருக்கு முன் இத்தகைய கணக்கெடுப்புகளை நடத்திய தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தின் அறிக்கைகளில் இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலைமை குறித்து போதிய அளவில் விவரங்கள் இல்லை. இதன் மூலம் இந்தியாவில் வேலைவாய்ப்பு நிலைமையை ஆய்வு செய்து புள்ளி விவரங்களை வெளியிட சிறந்த முறையை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்பது உறுதியாகிறது.

இந்தியாவின் வேலைவாய்ப்புச் சந்தைக்கு மனித சக்தி வழங்கப் படுவது குறித்து ஆய்வு செய்வது தான், நாம் நமது பணியை தொடங்குவதற்கான சரியான இடமாகும். 1991, 2001, 2011 ஆகிய ஆண்டுகளின் மக்கள் தொகை விவரங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்ட கோஷ் இணையர், ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக இரண்டரை கோடி குழந்தைகள் பிறப்பதாக தெரிவித்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக இன்றைய நிலையில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டரை கோடி பேர் 21 வயதை எட்டுவார்கள். குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய மக்கள்தொகைத் தகவல்களின் அடிப்படையில் பார்த்தால், வேலை வேண்டாம் என்று கூறி வேலை வாய்ப்புச் சந்தைக்கு வராமல் செல்வோரின் அளவு உத்தேசமாக 25 சதவீதம் இருக்கலாம். அதைக்கொண்டு பார்க்கும்போது ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்புச் சந்தையில் நுழைவோரின் எண்ணிக்கை 66 இலட்சமாக

### ஆண்டுதோறும் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை குறித்த மதிப்பீடு

| கணக்கெடுப்பு ஆண்டு | ஆண்டுதோறும் மக்கள் தொகையுடன் புதிதாகச் சேர்ந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1991ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு | 253 இலட்சம் |
| 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு | 248 இலட்சம் |
| 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு | 252 இலட்சம் |

அடுத்த 20 ஆண்டுகளுக்கு இதே நிலை தொடரும்.

ஒவ்வொரு ஆண்டும் 21 வயதை அடைபவர்களில் தொழிலாளர்களாகவும், பணியாளர்களாகவும் செல்பவர்களின் எண்ணிக்கை ஒன்றரைகோடி, அதாவது 60 விழுக்காடாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2016 - 17ஆம் ஆண்டின் அகில இந்திய உயர்கல்வி ஆய்வு அறிக்கையில், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் பட்டம் பெற்று கல்லூரிகளில் இருந்து வெளியேறுவோரின் எண்ணிக்கை 88 இலட்சம் என்று இருக்கலாம் என்று மதிப்பிட முடிகிறது. பட்டம் பெறாதவர்களையும் இந்தக் கணக்கில் சேர்த்துக் கொண்டால், ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்புச் சந்தைக்கு புதிதாக வருபவர்களின் எண்ணிக்கை 84 இலட்சமாக இருக்கும் என்று கணக்கிடமுடிகிறது.

இந்தியாவில் வேலைகள் அவற்றின் தன்மையைப் பொறுத்து அமைப்பு சார்ந்த வேலைகள், அமைப்பு சாரா வேலைகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. சமூகப்பாதுகாப்பு கொண்ட வேலைகள் அனைத்தும்

முறைசார்ந்த வேலைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம், தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதிக் கழகம், புதிய ஓய்வூதியத்திட்டம் ஆகியவைதான் தொழிலாளர்களுக்கு சமூகப்பாதுகாப்பு வழங்குகின்றன. அமைப்பு சார்ந்த தொழில் துறைகளில் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த தகவல்களைத் திரட்ட சிறந்த ஆதாரங்கள் தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி அலுவலகம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகம் ஆகியவற்றின் புள்ளி விவரங்கள்தான். இந்தியாவில் 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் 190 வகையான தொழிற்சாலைகள், 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் 90 வகையான தொழிற்சாலைகள் குறித்த விவரங்கள் மேற்கண்ட அமைப்பு களிடம் உள்ளன. அந்த அமைப்புகள் வெளியிட்ட கடந்த 6 மாதங்களுக்கான புள்ளிவிவரங்கள் கோஷ் அறிக்கையில் விரிவாக ஆராயப் பட்டுள்ளன. அந்த அறிக்கையில், 2018ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகப் புள்ளிவிவரங்களின் மூலமாக 55 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக புள்ளிவிவரங்களின் மூலமாக 9 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள், புதிய ஓய்வூதியத்திட்டம் குறித்த புள்ளிவிவரங்கள் மூலமாக 7 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் என ஒட்டுமொத்தமாக 71 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரம் சிறப்பான முறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது. 2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த கணக்கெடுப்பு அறிக்கை வெளியிடப்படும்போது, அதற்கும் இதற்கும் இடையிலான வித்தியாசம் மிகவும் குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. எனினும், ஊதியப்பட்டியலில் உள்ளவர்களின் விவரங்கள் அடிப்படையில்தான் இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது என்பதால், ஆண்டுக்கு 70 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் அமைப்பு சார்ந்த தொழில் துறைகளில் உருவாக்கப் படுகின்றன என்று கணக்கில் கொள்வது சரியானதாக இருக்கும்.

| திட்டம் | மொத்த வேலைகள் |
|---|---|
| தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு | 6,00,00,000 |
| அரசு நிறுவனங்கள் | 2,50,00,000 |
| தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் | 1,00,00,000 |
| அமைப்பு சார்ந்த துறைகளில் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்புகள் | 9,50,00,000 |

சமூகப்பாதுகாப்பு வாய்ப்பு களுக்கு வெளியில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக் கையையும் நாம் பார்க்கவேண்டும். பட்டயக்கணக்காளர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் ஆகியோர் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களில் முக்கிய மானவர்கள் ஆவர். இவர்களால் உருவாக்கப்படும் வேலைகளையும் நமது கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்திய பட்டயக்கணக்காளர்கள் நிறுவனம் வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி, 2017ஆம் ஆண்டில் 16,970 புதிய பட்டயக்கணக்காளர்கள் பணி செய்யத்தொடங்கியுள்ளனர். அவர்களில் 5,624 பேர் தனியாகத் தொழில் செய்யத் தொடங்கியுள்ளனர். புதிதாகத் தொழில் செய்யத் தொடங்கியுள்ளவர்கள் எத்தனை பேருக்கு வேலை வழங்கியுள்ளனர் என்பதுதான் இத்துறையில் புதிதாக உருவாக்கப்படும் வேலைகளைக் கணக்கிடு வதற்கான முக்கிய அம்சமாகும்.

| தொழில்பிரிவு | | மொத்த வேலைகள் |
|---|---|---|
| அமைப்பு சாராத்துறைகளில் உருவாக்கப்பட்ட மொத்த புதிய வேலைவாய்ப்புகள் (EPFO, NPS, ESIC) | | 9,50,00,000 |
| தொழில்முறை வல்லுநர்கள் | 1,08,37,531 | |
| போக்குவரத்துத்துறை | 3,59,65,995 | |
| அமைப்புசாராத் துறைகளில் மொத்த வேலைவாய்ப்புகள் | | 4,68,03,526 |
| மொத்த வேலைவாய்ப்புகள் | | 14,18,03,526 |

இது மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கும் பொருந்தும். 2017ஆம் ஆண்டில் இந்த இரு பிரிவையும் சேர்ந்த 80 ஆயிரம் பேர் பணி செய்யத் தொடங்கியுள்ளனர். இவர்களின் கீழ் பணியாற்றும் எழுத்தர்கள், துணை சட்டப் பணியாளர்கள், செவிலியர்கள் ஆகியோரையும் கணக்கில் கொண்டால், இந்த 3 வகையான பணிகளின் மூலமாக மட்டும் 2017ஆம் ஆண்டில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக யூகிக்கலாம். இதேபோன்ற மற்ற பணிகள் மற்றும் ஆலோசனை வழங்குதல் மூலம் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் கணக்கில் கொள்ளப்படவில்லை.

ஒரு பட்டயக்கணக்காளர் 20 பேருக்கும், ஒரு மருத்துவர் 5 பேருக்கும், ஒரு வழக்கறிஞர் 3 பேருக்கும் வேலை வழங்குவதாக வைத்துக்கொண்டால் மேற்குறிப்பிட்ட 3 வகையான பணிகளின் மூலமாக மட்டும் ஒரு கோடியே 8 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருப்பதாக கருதலாம்.

இந்த முயற்சிகள் மூலம் கடந்த ஆண்டில் 5 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா துறைகளில் உள்ள மற்ற தொழில்களிலும் இதன் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.

போக்குவரத்து தொழில்துறை மிகப்பெரிய அளவில் அமைப்புசாரா வேலைவாய்ப்புகளை உருவாக்கி யுள்ளது. வாகனம் வாங்கி இயக்கும் தனிநபர்கள், சிறிய அளவிலான போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர் சங்கத்திடம் உள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் வணிகப் பயன்பாட்டு வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் ஆகிய வற்றின் விற்பனை, ஏற்றுமதி உள்ளிட்ட விவரங்கள் பிரித்து வகைபடுத்தப்பட்டுள்ளன. வணிகப்பயன்பாட்டு வாகனங்களின் மூலம் சராசரியாக இருவருக்கு வேலைகிடைக்கும் என்று கருதலாம். 3 சக்கர வாகனங்கள் மூலம் 1.5 பேருக்கும், பயணிகள் வாகனங்கள் மூலம் தலா 0.25 பேருக்கும் (4 மகிழுந்துகள் (கார்கள்) மூலம் ஒருவருக்கு வேலை கிடைக்கும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால், போக்கு வரத்துத்துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் 20 இலட்சம் பேருக்கு வேலைகிடைப்பதாக வைத்துக் கொள்ளலாம். மோட்டார் வாகனங்கள் பெரும்பாலும் தனிநபர்களிடம்தான் இருக்கும்; பெரிய நிறுவனங்களில் இருக்காது என்பதால் இந்த வேலைவாய்ப்புகள் அனைத்தும் அமைப்புசாராத் துறையில் உருவாக்கப் படுபவையாகும். போக்கு வரத்துத்துறை வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்களை தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலக மோ, அல்லது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகமோ பெரிய அளவில் வெளியிடவில்லை என்பதிலிருந்தே இவை அமைப்பு சாராத் தொழில் சார்ந்தவை என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும்.

இந்தியாவைப் பொறுத்தவரை லாரிகள், சிறிய லாரிகள், மகிழுந்துகள், பேருந்துகள், டாக்சிகள் ஆகியவை ஒவ்வொன்றும் தலா இருவருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகின்றனர். 2016 - 17ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கை 2.25 கோடியாகும். அதன்படி பார்த்தால் இந்தியாவில்

**பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத்திட்டம், தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படும் திறன் மேம்பாட்டு முயற்சிகள்**

| பிரதமரின் திறன் மேம்பாட்டுத்திட்டம் மற்றும் தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் | நிதியாண்டு 2017 | ஓராண்டில் உருவாக்கப் பட்ட பணி எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதமரின் திறன் மேம்பாட்டுத்திட்டம், தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | 10,18,572 | |
| வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை (49%) | 4,99,100 | |
| பிரதமரின் திறன்மேம்பாட்டுத்திட்டம் மூலம் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை | | 4,99,100 |

போக்குவரத்துத் துறையில் மட்டும் சுமார் 3.6 கோடி வேலைவாய்ப்புகள் இன்றைய நிலையில் உருவாக்கப் பட்டிருப்பதை அறியலாம்.

அமைப்புசாராத் தொழில் துறைகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் செய்யும் பங்களிப்பு குறித்த விவரங்கள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்படாமல் போயிருக்கலாம். எனினும், எதார்த்தங்களை கருத்தில்கொண்டு மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள், வழக்கறிஞர்கள் போன்ற தொழில்முறை வல்லுநர்கள், போக்குவரத்துத்துறை ஆகியவற்றில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வராத வேலைவாய்ப்புகளின் இந்தியாவின் முழுமையான வேலைவாய்ப்புச் சூழல் குறித்த விவரங்களை மேம்படுத்தப்பட்ட தரத்திலான பகுப்பாய்வின் மூலமாக வே கண்டறியமுடியும். ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்காகவே சிறிய அளவிலான தொழில்முறை வல்லுநர்கள் மற்றும் போக்கு வரத்துத்துறை சார்ந்த புள்ளி விவரங்களை மட்டுமே இந்தக் கட்டுரையில் நாங்கள் ஆய்வு செய்திருக்கிறோம்.

இந்தியாவில் தற்போது பணி செய்து கொண்டிருக்கும் சதவீத வேலை வாய்ப்புகள் தொழில்துறை மற்றும் சேவைத்துறை மூலம் கிடைக்கின்றன. இந்த வேலைவாய்ப்புகளில் 9.5 கோடி வேலைவாய்ப்புகள் முறை சார்ந்த துறைகள் மூலம் கிடைப்பவை. சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலக அளவில் அதிக எண்ணிக் கையில் முறைசார்ந்த வேலை வாய்ப்புகள் உருவாக்கும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

தொழில்முறை வல்லுநர்கள் மூலமும், போக்குவரத்துத்துறை மூலமும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளையும் கருத்தில்

| | சரக்குந்துகள் | சிறிய சரக்குந்துகள் | பேருந்துகள் | டாக்ஸிகள் | சிறிய பயணியர் வாகனங்கள் | மொத்த வாகனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வாகனம் மூலம் உருவாக்கப்படும் வேலைகளின் எண்ணிக்கை | 2 | 2 | 2 | 2 | 2 | |
| வாகனவகை வாரியான பணிகள் | 1,41,10,484 | 1,00,49,456 | 28,56,706 | 51,94,580 | 1,27,46,268 | 4,49,57,494 |
| 20% வாகனங்கள் இயங்காமல் இருப்பதாக வைத்துக்கொண்டால் | 28,22,097 | 20,09,891 | 5,71,341 | 10,38,916 | 25,49,254 | 89,91,499 |
| 2016 - 17ம் ஆண்டில் போக்குவரத்துத் துறையில் மொத்தப்பணிகள் | 1,12,88,387 | 80,39,565 | 22,85,365 | 41,55,664 | 1,01,97,014 | 3,59,65,995 |

எண்ணிக்கை ஆண்டுக்கு 29 இலட்சம் என்று நாங்கள் கணக் கிட்டிருக்கிறோம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாராத தொழில்துறைகள் மூலம் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இந்த மதிப்பீட்டில் பல அமைப்புசாரா தொழில்துறைகளும், சிறு, குறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்களும் கணக்கில் கொள்ளப்படவில்லை என்பதால், இது குறைந்தபட்ச மதிப்பீடாகவே இருக்கும். தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 50 கோடி என்ற அளவில் இருக்கும் (2012ஆம் ஆண்டில் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் நடத்திய கணக் கெடுப்பில் தெரியவந்த தகவல்கள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப் பட்டதாகும்) என்று பல்வேறு ஆய்வுகளில் மதிப்பிடப்பட்டிருக்கிறது. உலக வங்கி வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி பார்த்தால் இந்த வேலைவாய்ப்புகளில் 43 சதவீதத்தை வேளாண்துறை வழங்குகிறது. மீதமுள்ளவர்களில் 28 புள்ளி 5 கொண்டால், இந்தியாவில் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை 4.7 கோடி என்ற அளவில் இருக்கும். இதன் மூலம் அமைப்புசாராத் தொழில்துறையில் உள்ள இதுவரை பதிவு செய்யப்படாத தொழில்கள் மூலம் 14.3 கோடி பேருக்கு வேலை கிடைக்கிறது என்பதை அறியமுடியும். இவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பின்மை குறித்த புள்ளிவிவரங்கள் முறையான ஆய்வுகளின் மூலம் சரிசெய்யப்பட வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஒரு பிரச்சினை அல்ல, போதிய ஊதியம் கிடைக்காததுதான் பிரச்சினை என்பதை இந்த ஆய்வு உறுதி செய்திருக்கிறது. மாதத்திற்கு ரூ.15,000 முதல் ரூ.20,000 என்ற குறைவான ஊதியத்தை வைத்துக் கொண்டு, குறிப்பாக அமைப்புசாரா பொருளாதாரத்தில் இந்தியக் குடிமக்களால் வசதியான, பயனுள்ள வாழ்க்கையை வாழ இயலாது. இந்தியாவில் பணியாளர்களுக்கு சமூகப்பாதுகாப்பு வழங்குவதுடன், பணிகளை அமைப்பு சார்ந்ததாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுமட்டுமின்றி, தொழிலாளர்களின் நலனுக்கான கொள்கைகளை வகுப்பதற்கு வசதியாக அவர்களின் நிலை குறித்த தகவல்கள் துல்லியமாக சேகரிக்கப்படவேண்டும்.

இந்தியாவின் வேலை வாய்ப்புக் கட்டமைப்பை இயக்குவதற்குத் தேவையான விவரங்கள் இல்லை என்ற பிரச்சினையை இந்தியா எதிர் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். வேலைவாய்ப்பு குறித்த சரியான தகவல்கள் அரசிடம் உள்ளன. இந்தியாவில் வேலைவாய்ப்பு நிலைமை குறித்த துல்லியமான தகவல்களை வெளிக் கொண்டு வரமுடியும் என்பதை ஊதியப்பட்டியல் மூலமான கணக்கீடு என்ற கொள்கையைப் பயன்படுத்தி, கோஷ் இணையர் நிரூபித்திருக்கின்றனர்.

ஊதியப்பட்டியல் மூலமான வேலைவாய்ப்புக் கணக்கீடு குறித்த ஆய்வு முடிவுகள் இந்தியா வேலை வாய்ப்பை உருவாக்காத வளர்ச்சியை எதிர்கொண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டு அடிப்படை ஆதார மற்றது, முற்றிலும் தவறானது என்பதை நிரூபித்திருக்கிறது. 1991ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இந்தியப்பொருளாதாரம் சராசரியாக 8.7 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சியடைந் திருக்கிறது. 1991ஆம் ஆண்டில் 27,500 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்த இந்தியப் பொருளாதாரத்தின் மதிப்பு, தற்போது 2,60,000 அமெரிக்க டாலர் என்ற அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. இத்தகைய வளர்ச்சி என்பது வேலை வாய்ப்புகளை உருவாக்காத வளர்ச்சியாக இருக்க முடியாது. இந்தியாவின் தற்போதைய பொருளாதார வளர்ச்சிவிகிதம் ஆண்டுக்கு 7.5 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இது குறைந்த பட்சம் ஆண்டுக்கு 2.5 சதவீதம் முதல் 3சதவீதம் வரையிலான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும். நமது இந்தியப் பிரதமர் கூறியதைப் போல, இந்தியா வேலைவாய்ப்பு இல்லாத வளர்ச்சியை எதிர்கொண்டு வருகிறது என்ற வெற்று முழக்கத்தை எழுப்புவதற்கு பதிலாக அமைப்பு சார்ந்த வேலைவாய்ப்புகளை அதிக எண்ணிக்கையில் உருவாக்குவதற்கான சிறந்த கொள்கையை வகுப்பதில் கவனம் செலுத்துவதற்கு வசதியாக, சரியான வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்களை உருவாக்க வேண்டும். அதுதான் இந்தியாவின் இன்றைய உடனடித்தேவையாகும்.

| தொழில் பிரிவுகள் | | ஓராண்டில் உருவாக்கப்படும் பணிகள் |
|---|---|---|
| அமைப்பு சார்ந்த துறைகளில் உருவாக்கப்பட்ட மொத்த புதிய வேலைவாய்ப்புகள் (EPFO, NPS, ESIC) | | 71,00,000 |
| பட்டயக்கணக்காளர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் | 6,09,116 | |
| பிற தொழில்முறை வல்லுநர்கள் | 3,00,000 | |
| போக்குவரத்துத்துறை | 19,91,354 | |
| அமைப்புசாரா துறைகளில் உருவாக்கப்பட்ட மொத்த புதிய வேலைவாய்ப்புகள் | | 29,00,470 |
| ஓராண்டில் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்புகள் | | 1,00,00,470 |

- **டி.வி.மோகன்தாஸ் பாய்**, தலைவர், மணிப்பால் உலகளாவிய கல்வி சேவை
- **யாஷ் பெய்த்**, தலைமை ஆராய்ச்சியாளர், 3 ஒன் 4 கேபிட்டல்

•

# இந்தியாவில் வேலைவாய்ப்பு - மேம்படும் சூழல்

- சுர்ஜித் பல்லா




இந்திய வேலைவாய்ப்புச் சூழல் குறித்து நானும் சக பொருளாதார ஆய்வாளர் தீர்த்தா தாஸும் அண்மையில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் சுருக்கம்தான் இந்தக் கட்டுரையாகும். 2017-18ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு வளர்ச்சி வலிமையாக உள்ளது என்றும், ஒரு கோடியே 30 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன என்றும் நாங்கள் நடத்திய ஆராய்ச்சியில் தெரியவந் துள்ளது. வேலைவாய்ப்பு இந்த அளவுக்கு அதிகரித்ததற்கு காரணமான சில கொள்கைகள் குறித்து இந்தக் கட்டுரையில் உங்களுடன் விவாதிக்க விரும்புகிறேன். 2017-18ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உருவாக்கம் அதிகரித்தற்கு சில முக்கியமான காரணங்கள் உள்ளன. கடந்த ஆண்டு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம் மிகவும் குறைவாக இருந்தது. அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகள் கடுமையான வறட்சி ஏற்பட்டது. பணமதிப்பிழத்தல் நடவடிக்கை, சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகம் செய்யப்பட்டது ஆகிய இரு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது ஆகியவை முக்கியமானவை யாகும்.

### வேலைவாய்ப்பு குறித்த மதிப்பீடு

இந்தியாவில் கடந்த நான்கு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு உருவாக்க நிலைமை குறித்து நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. இதற்குக் காரணம் இந்திய வேலைவாய்ப்புகள் தொடர்பாக தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தால் அண்மைக் காலங்களில் பெரிய அளவிலான கணக்கெடுப்புகள் எதுவும் நடத்தப் படாததுதான். இந்த அமைப்பின் கடைசிக் கணக்கெடுப்பு கடந்த 2011-12ஆம் ஆண்டில்தான் நடத்தப்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனத்தின் கணக்கெடுப்புகள் தான் உயர்தர மானவையாகும்.

வேலைவாய்ப்பு என்ற முக்கிய பிரச்சினை தொடர்பான புள்ளி விவரங்கள் போதிய அளவில் இல்லாதது துரதிருஷ்டவச மானதாகும். இந்தப் பிரச்சினையை உணர்ந்துகொண்ட மத்திய அரசு, 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நாட்டின் வேலைவாய்ப்பு குறித்து நகர்ப்புறப்பகுதிகளில் காலாண்டு கணக்கெடுப்பையும், கிராமப்பகுதிகளில் ஆண்டுக் கணக்கெடுப்பையும் நடத்த முடிவு செய்திருக்கிறது.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தின் கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுவது வழக்கம். 2017-18ஆம் ஆண்டிற்கான (2017 ஜூலை முதல் 2018 ஜூன் வரையிலான ஓராண்டு காலம்) இத்தகைய வீடு வாரியான கணக்கெடுப்பு அண்மையில்தான் நடத்தி முடிக்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பின் முதல்கட்ட முடிவுகள் 2018ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிடப்படக்கூடும். அதுவரை வேலைவாய்ப்பு குறித்த விவாதங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு சீர்திருத்தம், பெரு நிலைப் பொருளாதார செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான தனிநபர் மதிப்பீடுகளின் அடிப் படையில் மட்டும் தான் நடைபெற வேண்டும்.

### இந்தியாவில் வேலைவாய்ப்பு வளர்ச்சி ஒரு வரலாற்றுச் சாதனை

இந்தியாவில் 2004-05ஆம் ஆண்டுக்குப் பிறகு வேலைவாய்ப்பு உருவாக்கம் மிகப்பெரிய அளவில் நடைபெறவில்லை. 1999-2000ஆவது ஆண்டில் தொடங்கி, 2004 - 05ஆம் ஆண்டு வரை இந்தியாவில் வேலைவாய்ப்பு வளர்ச்சி ஆண்டுக்கு 2.4 விழுக்காடு அல்லது ஆண்டுக்கு 97 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் என்ற அளவில் இருந்தது. இந்தக் காலத்தில் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி 5.6% என்ற அளவில் இருந்தது.

2004-05ஆம் ஆண்டு முதல் 2011-12ஆம் ஆண்டு வரையிலான 7 ஆண்டுகாலத்தில் தேசிய மாதிரிக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங் களுக்கு இணையாக இந்தக் காலத்தில் ஆண்டு சராசரி பொருளாதார வளர்ச்சி இதுவரை இல்லாத வகையில் 7.8% என்ற அளவில் இருந்தது. அதேபோல், பணவீக்கமும் ஆண்டுக்கு சராசரியாக 7.4 விழுக்காடு என்ற அளவில் இருந்தது. எனினும், இந்த 7 ஆண்டு காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை வெறும் ஒரு கோடியே 10 இலட்சம் மட்டும் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2011-12ஆம் ஆண்டிற்குப் பிறகு வலிமையான வேலைவாய்ப்பு வளர்ச்சியை எட்டுவதற்கு எதிரான பல சூழல்கள் நிலவின. 2014-15, 2015-16 ஆகிய இரு ஆண்டுகளும் மிகக்கடுமையான வறட்சி ஆண்டுகளாக அமைந்திருந்தன. கடந்த 150 ஆண்டுகளில் இப்போதுதான் 5ஆவது முறையாக அடுத்தடுத்த இரு ஆண்டுகள் வறட்சி ஆண்டுகளாக அமைந்தன. பொருளாதார வளர்ச்சிக்கும், ஊரகப்பகுதிகளில் வேளாண் துறை வேலைவாய்ப்பு வளர்ச்சிக்கும் வறட்சி சாதகமாக இருக்காது.

அடுத்த இரு ஆண்டுகளில் பருவநிலை இயல்பாக இருந்தது. ஆனால், பணமதிப்பிழப்பு, பொருட்கள் மற்றும் சேவை வரி ஆகிய இரு முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இரு சீர்திருத்தங்களுக்கும் ஏராளமான நோக்கங்கள் இருக்கலாம். அவற்றில் மிகவும் முக்கியமானது நேரடி வரி வசூல் மற்றும் மறைமுக வரி வசூல் மீது இத்தகைய நடவடிக்கைகள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுதான். இந்த இரு சீர்திருத்தங்களும் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தின. அதன் காரணமாக குறுகிய காலத்திற்கு வேலைவாய்ப்பு உருவாக்கமும், பொருளாதார வளர்ச்சியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மத்தியில் தற்போதுள்ள ஆட்சி அமையும்போதே வங்கித்துறை நலிவடைந்த நிலையில்தான் இருந்தது. பொதுத்துறை வங்கிகளின் வாராக்காடன் அளவு கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 8 விழுக்காடு என்ற அளவில் மிக அதிகமாக இருந்தது. அதுமட்டுமின்றி, வங்கித்துறையில் செய்யப்பட்ட சீர்திருத்தங்களும் குறுகிய காலங்களில் அதன் வளர்ச்சியை பாதித்தது.

நிறைவாக, வளர்ச்சியை சீர்குலைக்கும் அம்சங்கள் பெரிய அளவில் இல்லாததால், இந்தியப் பொருளாதாரம் 2014ஆம் ஆண்டிற்குப் பிறகு அதிக வளர்ச்சியை எட்டியது. 2014ஆம் ஆண்டு மே மாதத்தில் ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கான வட்டியின் அளவு 8% ஆகவும், சில்லரை விலை பணவீக்க விகிதம் 8.3% ஆகவும் இருந்தன. அதாவது பண வீக்கத்தைவிட, இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் வட்டி விகிதம் 0.3% குறைவாக இருந்தது. ஆனால், 2017-18ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் விகிதம் பணவீக்க விகிதத்தை விட 2.5 விழுக்காடு அதிகமாகும். 2004-05ஆம் ஆண்டில் இந்த விகிதம் 2.1 விழுக்காடாக இருந்தது. அதன் பின், இந்த விகிதம் இப்போதுதான் முதன்முறையாக மிக அதிக அளவை எட்டியிருக்கிறது. அதுமட்டுமின்றி, 2017-18ஆம் ஆண்டில் பிரேசில், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் இந்த விகிதம் அதிகமாக உள்ளது.

### தேவைப்படும் வேலைவாய்ப்புகள்

இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால், ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி முதல் 1.20 கோடி வரையிலான வேலைகள் உருவாக்கப்படவேண்டும். ஆனால் 2004-05ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புகளின் தேவை 1.20 கோடி என்ற அளவில் இருந்ததைத்தவிர, அதற்குப் பிறகு வந்த ஆண்டுகளில் இது அந்த அளவுக்கு இல்லை. 2011ஆம் ஆண்டில் தேவைப்படும் வேலைகளின் எண்ணிக்கை 83 இலட்சமாகக் குறைந்துவிட்டது. 2017ஆம் ஆண்டில் இதன் அளவு



75 இலட்சமாகிவிட்டது. 2022ஆம் ஆண்டில் இது மேலும் குறைந்து 69 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு விரிவாக்கக் கொள்கைகள்**

மத்தியில் இப்போதுள்ள அரசு சில சீர்திருத்தங்களை, அதிலும் குறிப்பாக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சீர்திருத்தங்களை மேற் கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் அதிகம் தேவைப்படும் சாலையமைக்கும் நடவடிக்கைகள்; சிறுதொழில் தொடங்க நினைப் பவர்களுக்கு கடன் வழங்குவதற்கான முத்ரா திட்டம்; புதிய பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் (புதிய தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதியை அரசே செலுத்தும்) ஆகியவை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் முக்கிய மானவையாகும்.

கட்டுமானத்துறையில் எட்டப்பட்ட ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சிதான் 2017-18ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கியக் காரணமாகும். கட்டுமானத்துறையில் 2017-18ஆம் ஆண்டில் 5.8% வளர்ச்சி எட்டப்பட்டது. இது கடந்த 6 ஆண்டுகளில் எட்டப்படாத பெரிய வளர்ச்சியாகும். 2017-18ஆம் ஆண்டில் கட்டுமானத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் கடந்த 20 ஆண்டுகளில் மிக அதிகமாகும். இதனால், 2017-18ஆம் ஆண்டில் கட்டுமானத்துறையில் மட்டும் 17 இலட்சம் முதல் 30 இலட்சம் வரையிலான வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்று மதிப்பிடப் பட்டுள்ளது.



**வேலைவாய்ப்பு வளர்ச்சி குறித்த தனியார் மதிப்பீடுகள்**

வேலைவாய்ப்பு வளர்ச்சி குறித்து 3 தனிநபர் மதிப்பீடுகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. முதலாவது மதிப்பீடு தனியார் தகவல் நிறுவனத்தால் செய்யப் பட்டதாகும். இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் என்ற அந்த நிறுவனம், மும்பை பங்குச் சந்தையுடன் இணைந்து மாதந் தோறும் அனைத்திந்திய அளவிலான வேலைவாய்ப்பு மதிப்பீடுகளை கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வெளியிட்டு வருகிறது. 2017ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான ஓராண்டில், வேலை வாய்ப்பு 30 இலட்சம் அளவுக்கு குறைந்திருப்பதாக இந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வேலைவாய்ப்பு குறித்த 2ஆவது மதிப்பீடு பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் பேராசிரியர் புலக்கோஷ், பாரத ஸ்டேட் வங்கிக்குழுமங்களின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் சௌமியா கோஷ் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வறிக்கையில் இடம்பெற்றுள்ளது. "இந்தியாவில் சம்பளப்பட்டியல் அடிப்படையிலான வேலைவாய்ப்பு வளர்ச்சிக் கணக்கீட்டை நோக்கி" என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் இந்திய வேலைவாய்ப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை முதன் முறையாக சம்பளப்பட்டியல் அடிப்படையில் இவர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். ஒவ்வொரு நிறுவனமும் அவர்களிடம் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு அல்லது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகம் போன்ற சமூகப்பாதுகாப்புத் திட்டங்களுக்காக செலுத்தும் பிரீமியங்களின் எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு வளர்ச்சி விகிதத்தை இவர்கள் கணக்கிட்டுள்ளனர். இவர்களது முதல் மதிப்பீடு 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் செய்யப்பட்டது. அப்போது விவசாயம் சாராத துறைகளில் 70 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அவர்களின் சமீபத்திய மதிப்பீடு 2018ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதி வெளியிடப்பட்டது. அதில், 2017-18ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ஒரு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வேலைவாய்ப்பு குறித்த 3ஆவது மதிப்பீட்டை நானும்,



தீர்த்தா தாசும் இணைந்து வழங்கியிருக்கிறோம். 2017-18ஆம் ஆண்டில் 1.28 கோடி புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டதாக நாங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளோம். எங்களின் மதிப்பீடுகள் கட்டுமானத்துறையின் பொருளாதார வளர்ச்சி போன்ற பெருநிலை புள்ளி விவரத்தகவல்கள், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தகவல்கள் (18-21 வயது பிரிவினருக்கு மட்டும்), 2014, 2015ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் சக்தி கணக்கெடுப்புகள், இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் 2016, 2017ஆம் ஆண்டுக்கான வேலை வாய்ப்பின்மை குறித்த விவரங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப் பட்டுள்ளன.

**இந்தியாவுக்குச் சாதகமான இளைஞர் சக்தி**

இளைஞர் சக்தியின் பயன்களும் அதிக மக்கள் தொகை வளர்ச்சியும் இப்போது இந்திய வரலாற்றின் அங்கமாகிவிட்டன. இந்தியாவில் குழந்தைப்பேறு விகிதம் ஒவ்வொரு பெண்ணுக்கும் 2.1 குழந்தைகள் என்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. அதேபோல், ஆண்டு மக்கள் தொகை வளர்ச்சிவிகிதம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த 1.8 விழுக்காடு என்ற அளவிலிருந்து, 1.1 விழுக்காடு என்ற அளவுக்கு குறைந்துவிட்டது.

இந்தியாவில் 2017ஆம் ஆண்டில் 23.62 கோடியாக இருக்கும் 15 முதல் 24 வயது வரையுள்ள இளைஞர்களின் எண்ணிக்கை அடுத்த 5 ஆண்டுகளில் 25 இலட்சம் மட்டுமே அதிகரித்து 23.87 கோடி என்ற அளவில் தான் இருக்கும். இளைஞர்கள் என்பதற்கான வயது வரம்பை 15 முதல் 34 வயது வரை என்று வைத்துக் கொண்டாலும் கூட அந்த வயது பிரிவினரின் எண்ணிக்கை 1.17 என்ற அளவுக்கு மட்டுமே அதிகரிக்கும். இது கடந்த 2012 முதல் 2017 ஆண்டு வரையிலான காலத்தில் இளைஞர்களின் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகரித்ததோ, அதில் பாதி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

2004-05 ஆம் ஆண்டு முதல் 2011-12 ஆம் ஆண்டு வரையிலான 7 ஆண்டுகளில் கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மிகப்பெரிய அளவில் அதிகரித்தது. இந்த காலத்தில் 15 அல்லது அதற்கும் அதிக வயதுடைய மாணவர்களில் சுமார் 4 கோடி பேர் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் சேர்ந்தனர். அடுத்த 6 ஆண்டுகளில், அதாவது 2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆண்டு வரையிலான காலத்தில் கல்வி மாணவர் சேர்க்கை 10.10 இலட்சம் என்ற அளவிலிருந்து 11.20 கோடியாக அதிகரித்தது.

இந்தியாவில் பெண்கள் வேலைக்கு செல்லும் விகிதம் குறைந்திருக்கிறது. ஆனால், இதற்கான காரணம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை குறைந்ததற்கு இரு காரணங்களைக் கூறலாம். அவற்றில் முதலாவது அதிக எண்ணிக் கையிலான பெண்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். இரண்டாவது பெண் தொழிலாளர் களின் எண்ணிக்கை குறைந்துள்ள அதே நேரத்தில், அதே அளவில் ஆண் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. 24 வயதுக்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலைத்ததாகி விட்டது. பெண்கள் கல்வி கற்கும் விகிதம் அதிகரித் திருப்பதால் இனி வரும் காலங்களில் வேலைக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

- **சுர்ஜித் பல்லா**, பகுதிநேர உறுப்பினர், பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு, புதுதில்லி

# புதுமையும் தொழில் முனைவும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மிகவும் முக்கியம்

- அமிதாப்காந்த்
யோஜனா இதழிற்கு அளித்த நேர்காணல்

**கேள்வி:** இந்திய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கு வதில் உள்ள சவால்கள் என்ன?

**பதில்:** உலகிலேயே இந்தியாவில்தான் அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் உள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 27 விழுக்காட்டினர் 15 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள். இந்த இளைஞர்களின் சக்தியை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் உலகின் திறன்மிக்கத் தலைநகரமாக இந்தியா உருவெடுக்க முடியும். ஆனால் குறைந்த அளவு கல்வி மற்றும் திறமை, அதிக அளவிலான இடைநிற்றல் விகிதம், கல்வியை பாதியில் நிறுத்துதல் ஆகியவை இந்திய இளைஞர்களின் வேலை வாய்ப்புத் திறனையும், இந்தியாவில் பல்வேறு மண்டலங்களில் பொருளாதாரப் பகிர்வின் பன்முகத் தன்மையையும் கடுமையாக பாதிக்கின்றன.

15 முதல் 17 வயது வரை உள்ள இளைஞர்கள் அதிக அளவில் விவசாயப் பணிகளிலும், அதற்கு அடுத்தபடியாக கட்டுமானம் மற்றும் உற்பத்தித் துறையிலும் ஈடுபடுகிறார்கள். அதன் பின்னர் அவர்கள் வணிகம், பழுதுபார்த்தல் / போக்குவரத்துத் துறைகளிலும் ஈடுபடுகிறார்கள். அதைத் தொடர்ந்து, 18 முதல் 29 வயது வரையிலான காலத்தில் கட்டுமானம் மற்றும் உற்பத்தித் துறைக்கு இடம்பெயர்கின்றனர். இருந்தபோதிலும், வேளாண் துறைதான் இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வழங்கும் துறையாக உள்ளது. இதிலிருந்தே இந்திய இளைஞர்கள் குறைவான திறமைகள் தேவைப்படும் பணிகளைத்தான் தேர்வு செய்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

இந்தியாவில் கல்வித்தகுதி அதிகரித்து வருவதால், வேலையின்மை விகிதமும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. ஆரம்ப நிலைக் கல்வி வரை படித்தவர்களிடையே குறைந்த அளவாக மூன்று சதவீத அளவுக்கும், பட்டப்படிப்பு மற்றும் அதற்குக் கூடுதலாக படித்தவர்களிலேயே அதிக அளவாக 18.40 சதவீத அளவுக்கும் வேலைவாய்ப்பின்மை நிலவுகிறது. இந்திய இளைஞர்களிடையே வேலை வாய்ப்புத்திறன் மிகவும் குறைவாக இருப்பதற்கான காரணங்களில் மிகவும் முக்கியமானது 15 முதல் 29 வயது வரை உள்ளவர்களில் பெரும்பான்மையான இளைஞர்கள் (85 சதவீதம்) பொதுப்பிரிவு கல்வியை மட்டுமே பயில்வதாகும். 12.6 சதவீத இளைஞர்கள் மட்டும்தான் தொழில்நுட்ப / தொழில்முறைக் கல்வியைப் பயில்கின்றனர். தொழில் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 2.4 சதவீதம் மட்டுமே.

இந்தியாவில் ஒட்டுமொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கையில் 8 சதவீதம் மட்டுமே அமைப்புசார்ந்த தொழில்துறைகளில் பணியாற்றுகின்றனர். அதனால்தான் பெரும்பான்மையான இளைஞர்கள் குறைந்த ஊதியம் கிடைக்கும் தொழில்களில் சேர்கின்றனர். மீதமுள்ளவர்கள் ஏழைத் தொழிலாளர்களாக உள்ளனர். இந்த நிலையை மாற்ற அமைப்பு சார்ந்த தொழில்துறை வேலை வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

கல்வியில் மீது மாணவர்கள், இளைஞர் களிடையே ஆர்வமின்மை ஏற்படுவதைத் தடுக்கவும், வேலை வாய்ப்புக்கான திறன்களைக் கற்றுக் கொள்வதில் அவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தவும், ஆறாம் வகுப்பிலிருந்தே தொழில் திறன்களை கற்றுத்தரும் வகையிலான பாடத் திட்டங்கள் கொண்டவையாக பள்ளிகள் மாற்றப்படவேண்டும்.

இளைஞர்கள் பள்ளிகளிலிருந்து வேலைக்குச் செல்லவேண்டுமானால், அவர்கள் பொதுப்பிரிவு கல்விக்குப் பதிலாக தொழில்நுட்ப அல்லது தொழில் கல்வியைத் தேர்ந்தெடுக்குமாறு ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமின்றி, பெரும்பான்மையான தொழில்கல்வி நிறுவனங்கள் தனியார் துறையில் இருப்பதால், அங்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனால் குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களால் தொழிற்கல்வி பயிலமுடிவதில்லை. இந்த நிலையை மாற்ற தொழில்கல்வி / தொழில் நுட்பக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கட்டணச் சலுகைகள் வழங்கப்படவேண்டும்.

**கேள்வி:** இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 60 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் புதிய வழிமுறைகள் தோன்றியுள்ளவா?



**பதில்:** இன்றைய நிலையில் மக்கள்தொகையில் உலகிலேயே மிக அதிகமான பெரிய அளவில் உள்ள, வலிமை கொண்ட, வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் இந்தியாவாகும். இந்திய இளைஞர்களின் திறன், முறையான வேலைவாய்ப்புப் பயிற்சிகளின் மூலமாக பயனளிக்கும் சக்தியாக மாற்றப்படுவது இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும். 2013-14ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் குறித்த ஆண்டு ஆய்வில் கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருள்கள், அடிப்படை உலோகங்கள், உணவுப் பொருள்கள், ரசாயனம் மற்றும் ரசாயனப் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், டிரைலர் வண்டிகள், அரை டிரைலர் வண்டிகள் ஆகியவைதான் இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தியில் குறைந்தது 80சதவீதத்தை வழங்குகின்றன என்பதும், அதிக மூலதனம் கொண்ட தொழிற்சாலைகளின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 50 விழுக்காட்டுக்கும் கூடுதலான உற்பத்தி இந்தத்துறைகளின் மூலம்தான் செய்யப்படுகிறது என்பதும் தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு துறையில் மூலமும் எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்ற புள்ளி விவரம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது. சில மாநிலங்களில் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் விவசாயத்தின் பங்களிப்பு தேசிய சராசரியைவிட குறைவாக உள்ளது. வேறுசில மாநிலங்களில் வேலை வாய்ப்பை வழங்குவதில் உற்பத்தித் துறையின் பங்கு அகில இந்திய சராசரியைவிட அதிகமாக உள்ளது. கட்டுமானத்துறை, மொத்த வணிகம், சில்லரை வணிகம் மற்றும் பிற சேவைத் துறைகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது.

அதேநேரத்தில், இந்தியாவின் ஒட்டுமொத்த வேலைவாய்ப்புச் சூழலமைப்பு வேகமாக மாறி வருகிறது. இந்தியாவில் ஏற்கெனவே உள்ள பழைய வேலைவாய்ப்புகளுக்குப் பதிலாகத்தான் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படுகின்றன என்பதாலும், தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தி நடைமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகத்தான் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகின்றன என்பதாலும், தொழில்நுட்பம் சார்ந்த துறைகளின் வளர்ச்சியால் வேலைவாய்ப்பும், அதன் மூலமான வாழ்வாதார வாய்ப்புகளும் பாதிக்கப் படுகின்றன. சாலைகள், கப்பல் போக்குவரத்துத்துறை, சீர்மிகு நகரங்கள், புதுப்பிக்கவல்ல எரிசக்தி, போக்குவரத்து மற்றும் ரயில்வே துறை, விமான நிலையங்கள் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட சரக்குப் போக்குவரத்துப்பாதைகள் ஆகியவற்றில் செய்யப்படும் முதலீடுகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன. அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம், பெண்களை தொழில் முனைவோராக்குவதில் செலுத்தப்படும் கவனம், முத்ரா, ஸ்டார்ட்அப் இந்தியா மற்றும் ஸ்டேன்ட்அப் இந்தியா ஆகியவை கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள குறைந்த திறன் கொண்ட கோடிக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கி அவர்களின் வாழ்வில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவைதவிர, தகவல் தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு, வங்கிகள் மற்றும் நிதிச்சேவைகள், மருத்துவம், சில்லரை வணிகம், மோட்டார் வாகனம், சுற்றுலா மற்றும் உபசரிப்பு சேவைத்துறை ஆகியவையும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான திறன்களைக் கொண்டுள்ளன.

இத்தகைய சூழலில், இந்தியாவில் காணப்படும் மூன்று வகை வேலைவாய்ப்புப் பற்றாக் குறைகளான 1. ஒட்டுமொத்த வேலை எண்ணிக்கைப் பற்றாக்குறை, 2. அமைப்பு சார்ந்த வேலை எண்ணிக்கைப் பற்றாக்குறை, 3. பெண்களுக்கான வேலை எண்ணிக்கைப் பற்றாக்குறை ஆகியவற்றைக் களைய ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசங்களின் கல்வி, திறன், மக்கள்தொகைத் தன்மைக்கு ஏற்றவகையில் அவற்றின் உற்பத்தி மற்றும் சேவைத்துறை மீது அதிக கவனம் செலுத்தக்கூடிய வேலைவாய்ப்பு உத்தியைக் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. இதுதான் இன்றைய சூழலில் நாம் கடைபிடிக்க வேண்டிய சிறப்பான உத்தியாகும்.

**கேள்வி:** வெறும் பட்டம் வழங்கும் முறையாக இல்லாமல் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்தியக் கல்விமுறை மாற்றியமைக்கப் படவேண்டும் என்று முன்பு ஒருமுறை நீங்கள் கூறியிருந்தீர்கள். அது பற்றி சற்று விரிவாக விளக்க முடியுமா?

**பதில்:** இந்தியத் தொழிலாளர் சந்தை இப்போது முரண்பாடான சூழலை எதிர்

கொண்டு வருகிறது. ஏதேனும் ஒரு வேலைவாய்ப்பு அறிவிக்கப் பட்டால், அதற்கு அதிக எண்ணிக் கையிலான விண்ணப்பங்கள் குவிகின்றன. ஆனால், அந்தப் பணிக்குத் தேவையான திறன்கள் விண்ணப்பதாரர்களிடம் முழுமையாக இருப்பதில்லை. நவீன உற்பத்தித் துறைப் பணிகளுக்கான திறன் தேவைகள் காலம் காலமாக உள்ள பணிகளுக்குத் தேவைப்படும் கருவிகளைப் பொருத்தும் வழக்கமான திறனைவிட மிகவும் சிக்கலானவையாகவும் உள்ளன. தொழில்நுட்பம் சார்ந்த பொருளா தாரத்தில் எந்த வகையான வேலை வாய்ப்புகள் பெருகும், எந்த வகையான வேலைவாய்ப்புகள் குறையும் என்பதைக் கணிப்பது அவ்வளவு எளிதல்ல. நமது கல்வி அமைப்பு இன்று எதிர்கொண்டு வரும் முக்கியமான சவால்களில் ஒன்று பல்வேறு வேலை வாய்ப்பு களுக்குத் தேவைப்படும் திறன்களுக்கு ஏற்பவும், அதே நேரத்தில் குறிப்பிட்ட தொழில் துறைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலும் தங்களை மாற்றிக்கொள்ளும் வகையிலான பயிற்சியை மாணவர் களுக்கு வழங்குவது ஆகும். இந்தச் சவாலை இருமுனை கொண்ட அணுகுமுறையால்தான் சமாளிக்க முடியும். முதலாவதாக பல்வேறு பணிகளுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளக்கூடிய வகையிலான திறன்களை மாணவர்களுக்குக் கற்றுத்தருதல். இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட தொழில்துறை அல்லது வேலைவாய்ப்புக்குத் தேவைப்படும் திறனை தொழில்துறைகள் சார்ந்த தொழில் பழகுநர் திட்டங்களின் மூலம் கற்றுத்தருதல்.

பள்ளிகளில் கற்றுக்கொண்ட திறன்களை பணிக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வதற்கு தொடக்கநிலை கல்வியிலும், இடைநிலைக் கல்வியிலும் வளர்த்தெடுக்கப்படும் புரிந்துகொள்ளும் திறன் மிகவும் முக்கியமாகும். தொடக்கநிலை மற்றும் இடைநிலை வகுப்புகளில் சிறப்பாகப் படித்த மாணவர்கள், தொழில்நுட்பத்திறன் உள்ளிட்ட பல்வேறு வகையான திறன்களைக் கற்றுக்கொள்வது எளிதாக இருக்கும். பள்ளி செல்லும் மாணவர்களுக்கு வழங்கப்படும் தொழில் பயிற்சிகளை வலுப்படுத்துவதுதான் உயர்நிலைப் பள்ளி அளவில் பெற்ற பயிற்சியைக் கொண்டு வேலைவாய்ப்புச் சந்தைக்குள் நுழையவிருக்கும் இளைஞர்களுக்கு ஏற்ற மாற்று வழியாக இருக்கும். சில கல்வி முறைகளில் பள்ளி சார்ந்த கற்றல் என்பது, பணி சார்ந்த கற்றலுடன் இணைந்ததாகவே உள்ளது. ஆஸ்திரியா, செக்குடியரசு, டென்மார்க், ஹங்கேரி, ஹாலந்து, ஸ்லோவாக் குடியரசு, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் கல்வியும், தொழில்பயிற்சியும் இணைந்த கல்வி முறையைக் காணமுடிகிறது. பணிசார்ந்த கற்றலின் மூலம் பணிசெய்யும் இடத்தில் மிகவும் அவசியமானதாகப் போற்றப்படும் திறமைகளை மாணவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். பொதுத் துறை, தனியார்துறை கூட்டாண்மை களை ஏற்படுத்தவும், சமூகப் பங்குதாரர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை உருவாக்க அனுமதிக்கவும், பணி சார்ந்த கற்றல்தான் சிறந்த வழியாகும்.

மேல்நிலைப் பள்ளி நிலையிலும், கல்லூரி நிலையிலும் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்த ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியவை யாகும். மாணவர்கள் பொதுக் கல்வியைப் படித்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் பட்டம்பெறும்போது, வேலை வாய்ப்புச் சந்தைக்குத் தேவைப்படும் திறன்களைப் பெற்றவர்களாக மாறுவதற்கு இத்தகைய கல்வி முறைகள்தான் உதவுகின்றன, இது நிச்சயமாக ஊக்குவிக்கப்படவேண்டும். பட்டப்படிப்பின்போது குறைந்தபட்சம் ஆயிரம் மணிநேரம் தொழிற்பயிற்சி பெறுவதைக் கட்டாயமாக்கு வதற்கான வழிமுறைகளை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆராய்ந்து வருகிறது. இளங்கலைப் படிப்பு, இளம் அறிவியல் படிப்பு, இளம் வணிகவியல் படிப்பு ஆகியவற்றை வேலைவாய்ப்பு சார்ந்ததாக மாற்றுவதற்கு வசதியாக அப்படிப்புகளில் மென்திறன்கள், தகவல் தொழில்நுட்பம், தொழில் சார்ந்த திறன்கள் ஆகியவற்றையும் இணைப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு வகுத்திருக்கிறது. தேசிய கல்விக் கொள்கையை தேசிய திறன் மேம்பாட்டுக் கொள்கையுடனும், பள்ளிகளில் கற்பிக்கப்படும் தொழில் படிப்புகளை தேசிய திறன் தகுதி செயல் திட்டத்துடனும் இணைக்க வேண்டிய அவசரத்தேவை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களிடையே புதுமையாக சிந்திக்கும் வழக்கத்தையும், ஒருவருக்கொருவர் கற்றுதரக்கூடிய செயல்முறை திறன்களையும் அடல் புதுமையாக்க ஆய்வகங்கள் ஊக்குவிக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் சிந்திக்கும் திறனை சோதிக்கும் வசதி ஏற்படுத்தப்படுவதுடன், மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க ஆலோசகர் ஒருவரும் நியமிக்கப்படவேண்டும். மாணவர் களுக்கு உள்ளூர் தேவைக்கு ஏற்றவகையிலும், வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்வதற் காக குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்துடன் இணைக்கவேண்டிய அவசரத் தேவையும் ஏற்பட்டிருக்கிறது.

**கேள்வி**: எந்தெந்தத் துறைகளுக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் உள்ளது?

**பதில்**: இந்தியா போன்ற தொழிலாளர் சக்தி அதிகம் மிகுந்த நாடுகளில் ஏற்படும் அமைப்புசார்ந்த மாற்றம் என்பது மற்ற வளர்ச்சி யடைந்த நாடுகளின் பயணத்தில் கடைபிடிக்கப்படும் பாதையை கடைபிடிக்கவில்லை. தொழில்நுட்பப் பயிற்சி மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே நாம் வேளாண்மை சார்ந்த வளர்ச்சியி லிருந்து சேவைத்துறை சார்ந்த வளர்ச்சிமுறைக்கு மாறிவிட்டோம். சேவைத்துறை டிஜிட்டல் தொழில் நுட்பத்திற்கு மாறியிருக்கிறது. இதனால், ஏராளமான இளைஞர்கள் சேவைத்துறையில் வேலை வாய்ப்புகளை எதிர் நோக்கியுள்ளனர். இத்தகைய மாணவர்களுக்கு திறன்களை / புதிய திறன்களை கற்றுத்தருவது ஒருபுறம் இருக்க, இந்தியா எதிர்கொள்ளும் மற்றொரு மிகப்பெரிய சவால் என்னவென்றால், நான்காவது தொழில்புரட்சி என்று அழைக்கப்படும் இன்றைய டிஜிட்டல் உலகத்தில் புதிய பணி வகைகளுக்குத் தேவைப்படும் திறன்கள், ஏற்கெனவே உள்ள பணி வகைகளுக்கான திறன்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றுக்கு ஏற்றவகையில் இந்திய இளைஞர் சக்திக்கு பயிற்சி அளித்து பயன்படுத்திக் கொள்வதுதான். அனைத்து வகையான பணிகளும், டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் ஒருங் கிணைக்கப்பட்டு வருவதால், இனி வரும் காலங்களில் துறை சார்ந்த பணிகள் என்று பிரிக்க முடியாத நிலை ஏற்படும். அனைத்துப் பணிகளுமே தகவல் தொழில் நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகளாகவே இருக்கும். ஏற்கெனவே உற்பத்தித்துறை பணிகள் எனப்படுபவை, மைய உற்பத்தி சார்ந்த பணிகள் மட்டுமே என்ற அளவுக்கு சுருக்கப்பட்டுவிட்டது. மற்ற பணிகள் அனைத்தும் அவுட்சோர்சிங் முறையில் செய்யப்படுகின்றன. அதாவது, அந்தப் பணிகள் அனைத்தும் சேவைத்துறைக்கு மாற்றப்பட்டு விட்டன.

பெருந்தரவுப் பகுப்பாய்வுகள், செயற்கை அறிவுத்திறன், ரோபோடிக் தானியங்கி நடைமுறை, இணைய உலகம், மேகக்கணினி மற்றும் மெய்நிகர் எதார்த்தம், மறைகுறியீட்டு தகவல் சங்கிலி (பிளாக் செயின்), மின்சார வாகனங்கள் ஆகியவை சார்ந்த துறைகள்தான் இனி வரும் காலங்களில் அதிகத் திறன் தேவைப்படும், அதிக ஊதியம் வழங்கும் வேலைவாய்ப்புகளைத் தரும். அதே நேரத்தில், குறைவான கல்வியும், குறைந்த அளவு பயிற்சியும் கொண்ட பணியாளர் களுக்கு ஆயத்தஆடை உற்பத்தி, ஜவுளித்துறை மற்றும் தோல்துறை, சுற்றுலா மற்றும் உபசரிப்புத் துறை, கட்டுமானத்துறை, ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அதிவேக வளர்ச்சியை அடைந்து வரும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முனைவு ஆகியவற்றில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன.

ஸ்டார்ட்அப் இந்தியா, முத்ரா, ஸ்டேன்ட்அப் இந்தியா, தூய்மை இந்தியா திட்டம் ஆகிய மத்திய அரசின் திட்டங்கள் குறைந்த பயிற்சி கொண்ட பணியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன. அதுமட்டுமின்றி, வேளாண்மை, உள்கட்டமைப்பு வசதிகள், மோட்டார் வாகனங்கள், ஜவுளி மற்றும் தோல்துறை போன்ற மத்திய அரசின் முதலீடும் தலையீடும் அதிகம் உள்ள தொழில் துறைகளிலும் தொழிலாளர் துறைக்கு புதிதாக வரும் இளைஞர் களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. ஏற்கெனவே தொழிலாளர்களாக உள்ளவர் களுக்கு புதிய திறன்களைக் கற்றுத் தருவதன் மூலம், இந்தத் துறைகளில் சிறப்பான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

**கேள்வி**: புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற் காகவும், சுயதொழில் செய்யும் உணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவை இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்**: புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் விரைவான வளர்ச்சியை உருவாக்கு வதற்கான முக்கிய சக்தி தொழில் முனைவு ஆகும். இந்தியச் சூழலில் பார்க்கும்போது அதிக அளவில் உள்ள இளைஞர் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளவும், குறைந்த அளவு கல்வியும், பயிற்சியும் பெற்ற பணியாளர்களுக்கு வாழ்வாதாரங்கள் கிடைப்பதை உறுதிசெய்யவும் தொழில்முனைவு மிகவும் அவசியமாகும். இதனைக் கருத்தில்கொண்டுதான் 2014ஆம் ஆண்டு முதல் இந்திய அரசு ஏராளமான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் பயனாக, தொழில் முனைவு செய்யவேண்டும் என்ற மனமாற்றம் மக்களிடையே ஏற்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் தொழில் தொடங்குவதற்கான கடன் பெறுதல், சந்தைகளில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், தொழில் சார்ந்த தொடர்புகள், ஆலோசனை வழங்குவதற்கான வழிகாட்டிகள் போன்றவற்றை அணுகுவது சவாலானதாக இருந்தது. ஆனால், இப்போது ஸ்டார்ட்அப் இந்தியா, எளிதாக வணிகம் செய்தல்,

ஸ்டேன்ட்அப் இந்தியா, முத்ரா, அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் போன்ற மத்திய அரசுத் திட்டங்களின் மூலம் மேற்கண்ட வசதிகள் சுயதொழில் செய்ய முனைவோருக்கு எளிதாக கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வி, மின்னணு வணிகம் / மொபைல் வணிகம், நிதிச்சேவைகள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகியவை சார்ந்த தொழில் நுட்பத்தின் அடிப் படையிலான புதிய நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் தொடங்கப் பட்டு வருகின்றன. இதன் பயனாக, உலகின் மூன்றாவது மிகப்பெரிய புதிய தொழில் தொடங்குவதற்கான சூழல்அமைப்பாக இந்தியா மாறி வருகிறது. உதாரணமாக, பைஜூஸ் கற்றல் செயலி என்ற நிறுவனம் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் அந்த நிறுவனம் அத்துறையில் முன்னணி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

தொலைவழி மருத்துவ ஆலோசனை என்பது கிராமப் புறங்களிலும், மலைப் பகுதிகளிலும் சாத்தியமான ஒன்றாக மாறியிருக்கிறது. இதன் காரணமாக, மூன்றாம் நிலை மருத்துவச்சேவை வழங்கும் மருத்துவமனைகளில் கூட்டம் குறைந்திருக்கிறது. அது மட்டுமின்றி, கிராமப்பகுதிகளிலும், சிறிய நகரங்களிலும் மருத்துவர்கள் / சிறப்பு மருத்துவர்கள் பற்றாக் குறைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தொலைவழி மருத்துவ ஆலோசனை வழங்கும் இணையதளங்களின் சார்பில் கிராமப்பகுதிகளில் சேவை வழங்க டிஜிட்டல் அறிவுகொண்ட ஆய்வகத் தொழில்நுட்பர்கள், எக்ஸ்ரே தொழில்நுட்பர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள் ஆகியோர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இதன் மூலம் அத்தகைய பணியாளர்களுக்கு கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இத்தகைய சுயதொழில் முனைவோர் ஊரகப்பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

**கேள்வி:** இந்தியாவில் சிறப்பான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் எந்த வகையில் உதவுகிறது?

**பதில்:** அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் என்பது இந்திய இளைஞர்களை வேலை தேடுபவர்களாக மட்டும் இல்லாமல், வேலை வழங்குபவர்களாக மாற்றுவதற்குத் தேவையான புதுமை கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவுச் சூழலமைப்பை உருவாக்கும் நோக்குடன் மத்திய அரசால் தொடங்கப்பட்ட, நிதி ஆயோக் அமைப்பின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்படும் முன்னணித் திட்டமாகும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், முழுமையான அணுகுமுறை மூலம் பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், சிறுகுறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றில் மாணவர்களின் கண்டுபிடிப்புத் திறனை ஊக்குவிக்கும் வகையில், அடல் டிங்கரிங் ஆய்வகங்களை அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் உருவாக்கி வருகிறது. அதேபோல், ஆயிரக்கணக்கான ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உருவாக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் அடல் இன்குபேட்டர் களையும் இந்த இயக்கம் உருவாக்கி யுள்ளது. அதுமட்டுமின்றி, தேசிய அளவில் சமூகப் பொருளாதாரத்தின் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலான புதுமைப் பொருள்கள் கண்டுபிடிப்பை ஊக்குவிக்கவும், நாடு முழுவதும் புதிய வேலைவாய்ப்பு களை உருவாக்கவும் அடல் புதிய இந்தியா சவால்கள் என்ற திட்டத் தையும் இந்த இயக்கம் தொடங்கி யுள்ளது. இந்தியாவின் 650க்கும் அதிகமான மாவட்டங்களில் இதுவரை 5,441 அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர, ஒவ்வொரு 18 மாதத்திற்கும் 25 முதல் 30 புதுமை தொழில்நுட்ப அடிப்படையிலான நிறுவனங்களைத் தொடங்கி வெற்றிகரமாக செயல்படவைக்கும் வகையில் 101 அடல் இன்குபேட்டர்கள் உருவாக்கப் பட்டுள்ளன. வேளாண்மை, நகர்ப்புற வீட்டுவசதி, குடிநீர்வசதி, துப்புரவு, ரயில் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் 24க்கும் மேற்பட்ட அடல் புதிய இந்தியா சவால்கள் தொடங்கப் பட்டுள்ளன. அடுத்ததாக சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களும், சிறிய அளவிலான வணிக நிறுவனங்களும் புதுமையான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், மேக் இன் இந்தியா முன்முயற்சியை ஊக்குவித்தல், இறக்குமதிகளைச் சார்ந்திருக்கும் நிலையை மாற்றி, ஏற்றுமதியை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு உதவும் நோக்குடன் சிறுவணிக புதுமைக் கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி முன் முயற்சி என்ற திட்டத்தை அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் தொடங்கவுள்ளது. நகர்ப்புறங் களிலும், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் புதிய தொழில்நுட்பங்கள், செயற்கை அறிவுத்திறன், புதிய வணிகமாதிரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அனைத்து வகையான வேலை வாய்ப்பு உருவாக்கத்தை அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கத்தின் முன் முயற்சிகள் ஊக்குவிக்கின்றன.

---

- **அமிதாப்காந்த்**, நிதி ஆயோக் அமைப்பின் முதன்மை செயல் அதிகாரி. ●

# இந்தியப் பொருளாதாரம்: வேலைவாய்ப்பை அதிகரித்தல்

- பிபெக் டெப்ராய்



நாட்டின் வளர்ச்சி என்பது புதிய வேலைவாய்ப்பை உருவாக்குவதாக இருக்க வேண்டும். ஆகையால், அரசுகள் (மத்திய அரசு அல்லது மாநில அரசு) வேலை வாய்ப்பை உருவாக்குவதற்குச் செய்ய வேண்டிய சிறந்த விஷயம் எதுவென்றால் வளர்ச்சிக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவதே ஆகும்.

இந்தியாவில் இப்போதும், வருங்காலத்திலும் குறிப்பிடத்தக்க அளவு முறைசாரா பொருளாதாரமே தொடரும். முறைசாரா பொருளா தாரத்தில் பலவிதமான மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்புறத்துக்கு, விவசாயத்தில் இருந்து விவசாயம் அல்லாத வற்றுக்கு, முறைசாரா நிலையில் இருந்து முறைசார் நிலைக்கு, பிழைப்புக்குத் தொழில் என்பதில் இருந்து தினக்கூலி வேலைக்கு, வாழ்நாள் முழுவதும் வேலை என்பதில் இருந்து குறுகிய கால ஒப்பந்தங்களுக்கு, வேலை அளிப்பவர் - வேலை செய்பவர் என்ற உறவு நிலையில் இருந்து சுயவேலைக்கு எனப் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்கள் ஒன்றன்பின் ஒன்று எனத் தொடர்ச்சியாக நடைபெறவில்லை. மாறாக ஒரே நேரத்தில் இந்த மாற்றங்கள் நடைபெறுகின்றன. சில சமயங்களில் எதிர் திசைகளில் மாற்றங்கள் இருக்கின்றன. வகைவாரியாகப் பிரிக்கப்பட்ட உழைப்புச் சந்தைகள் கொண்ட மிகப்பெரிய மற்றும் பன்முகமான பொருளாதாரத்தில் இது புரிந்து கொள்ளக்கூடிய அம்சமே ஆகும். ஒப்பீட்டு ரீதியில் அளவுக்கு அதிகமான தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய பிராந்தியங்கள் இருக்கும் அதே வேளையில் தொழிலாளர் பற்றாக்குறை உள்ள பிராந்தியங்களும் நம் நாட்டில் உள்ளன. குறைந்த தொழில் திறன்கள் உள்ள தொழிலாளர்கள் பிரிவுகளோடு சர்வதேசத் தொழிலாளர் சந்தைகளில் தொழில் திறன்களோடு ஒருங்கிணைந்துள்ள தொழிலாளர் பிரிவுகளும் இருக்கின்றன. இதை அடிப்படையாக வைத்து தொழில் சர்வேக்களில் இருந்து நம்பகமான வேலைவாய்ப்புத் தரவுகளை கண்டறியமுடியாது. வேலை அளிப்பவர் வேலை செய்பவர் உறவில் பெரும்பாலோர் நீடிக்கும் அயல்நாடுகளில் இந்தத் தரவுகளை எளிதில் பெறமுடியும். எனினும் நம் நாட்டில் தொழில் சர்வேக்கள் ஏற்கனவே எடுக்கப் பட்டும் இருக்கின்றன; வருங் காலத்திலும் அவை தொடரத்தான் செய்யும். ஆனால் அவற்றின் பயன்பாடு கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. குடும்பங்கள் குறித்து எடுக்கப்படும் சர்வேக்களில் இருந்து மட்டுமே நம்பகமான வேலை வாய்ப்புத் தரவுகள் வெளிப்படும். துரதிருஷ்டவசமாக, அதிகாரப் பூர்வமான மற்றும் பெரிய அளவிலான குடும்பங்கள் குறித்த சர்வேக்கள் நம்மிடம் பழமை யானதாக உள்ளன. கடந்த ஆண்டு நமக்கு கிடைத்த அத்தகைய தேசிய மாதிரி கணக்கெடுப்புத் தரவு (NSS) என்பது 2011-12ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டதாகும். எனவே வேலைவாய்ப்பு குறித்த தரவு என்பது திருப்திகரமாக இருப்ப தில்லை. இந்தக் குறைபாடு 2018ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டில் இருந்து தீர்க்கப்படத் தொடங்கும். அதாவது வருடாந்திர வேலைவாய்ப்பு சர்வேக்கள் இனிமேல் எடுக்கப்படும். அதே போன்று காலாண்டு சர்வேக்களும் தொடர்ந்து எடுக்கப்படும். இதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் இந்த சர்வேயானது எடுக்கப்பட்டு வந்தது.

## இணக்கமாகச் செயல்படுவதற்கான செலவுகளை எளிதாக்குதல்

தற்போதைய அரசின் முன்னுரிமைச் செயல்திட்டத்தின் இந்த அம்சத்தை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. வர்த்தகம் செய்வதில் (கார்ப்பரேட் பிரிவு சார்ந்த உற்பத்தித் தொழில் மட்டுமே என்று எடுத்துக் கொள்ளக்கூடாது) இணக்கச் செலவு களை எளிதாக்குதல் மற்றும் உள்ளீடுகள் (பௌதீக மற்றும்



சமூக உள்கட்டமைப்பு) கிடைப்பதை உறுதி செய்வதற்கான அரசின் பொதுச் செலவினம் ஆகிய அம்சங்களையும் நாம் கவனிக்க வேண்டும். இவையே வளர்ச்சி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவுக்கு தேவையானவை ஆகும். நாட்டில் தொழில் முனைவுகள் அதிக அளவில் நடைபெறுகின்றன. அதே சமயம் இந்தத் தொழில்முனைவு என்பது தொழிலுக்கான சட்டப்பூர்வ அடையாளமாக கட்டாயம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இந்தத் தொழில்முனைவுத் திட்டங்களே ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டேன்ட் அப் இந்தியா மற்றும் முத்ரா திட்டம் என்பவை ஆகும். மேற்கொண்டு பார்த்தோமானால், தொழில்முனைவில் ஈடுபடுவதற்கான நுழைவுவாயில் எளிதாக்கப்பட்டு இருக்கவில்லை; மாறாக வெளியேறுதல் எளிதாக்கப் பட்டுள்ளது (வரையறுக்கப்படாத வியாபார நிறுவனம் ஒன்றுக்கு வெளியேறுதல் ஷரத்துகளை தருவது என்பது இதுவே முதல் முறை ஆகும். தனிநபர் திவாலோடு இது தொடர்புபடுத்தப்படவில்லை).

நாட்டில் உள்ள குடிமக்கள் அனைவருக்கும் அரசால் வேலைகளைத் தரமுடியாது அல்லது எல்லோருமே சம்பளம் பெறும் ஊழியராக இருக்கவேண்டும் என்று விரும்பமுடியாது. கவனக்குவிப்பு என்பது இனி மேலும் பதவி, வேலைகள் என்பதைச் சுற்றி இருக்க முடியாது. ஏனெனில் இது வேலை அளிப்பவர் - வேலை செய்பவர் உறவையும், வாழ்நாள் முழுவதுமான ஒப்பந்தத்தையும் கோருவதாகும். இதற்குப் பதிலாக, கவனம் என்பது வேலைவாய்ப்பு என்பதற்கு மாற வேண்டும். இது குறுகிய காலத்திற்கானதாகவும், ஒப்பந்தரீதியானதாகவும் இருக்கலாம்.

### துல்லியமான தரவின் தேவை

இவ்வாறு கூறுவதால், வளர்ச்சி என்பது தானாகவே வேலைவாய்ப்புக்கு வழி ஏற்படுத்திவிடும் என்று அர்த்தம் ஆகாது. ஒரு பக்கம் பார்த்தால், வளர்ச்சியின் உள்கட்டுமானம் என்பதும் மிக முக்கியமானது ஆகும். வேலைகளை உருவாக்காத வளர்ச்சி குறித்த விவாதம் ஒன்றும் நமக்குப் புதியது அல்ல. 2004-05 மற்றும் 2009-10 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முந்தைய தேசிய மாதிரி கணக்கெடுப்பு சுற்றுகளிலும் இந்தப் பிரச்சனை குறித்து ஏற்கனவே பேசப்பட்டுள்ளது. ஆனால் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு ஒரு கருத்தாக்க அம்சம் இருக்கிறது. அப்போதும் இப்போதும் உள்நாட்டு மொத்த உற்பத்தி என்பது உண்மையில் அதிகரித்தே வருகிறது. உண்மையான வளர்ச்சி என்பது 7 சதவிகிதம் என்பதாக எடுத்துக்கொண்டால், உழைப்பாளர் உற்பத்தித்திறனும் 7 சதவிகிதம் அதிகரித்து உள்ளதாக நாம் நம்புகின்றோமோ என்ற கேள்வி எழும். இல்லை என்றால், வேலைவாய்ப்பு அதிகரிப்பு நிச்சயம் இருந்தாகவேண்டும். தேசிய வருமான அடையாளத்தில் இருந்து வேலைவாய்ப்பு அதிகரிக்கவில்லை எனத் தெரிகிறது. எனவே உண்மையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதைத் தரவுகள் தெளிவாகக் கிரகித்து வெளிப்படுத்த வில்லை. இவ்வாறு சொல்வதன் மூலம், புதியதாக வருபவர்களை எல்லாம் கரம் நீட்டி விவசாயத் துறை தனது உழைப்பாளர் சக்தியில் சேர்த்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது எனவும் சொல்லலாம். விவசாயத்தில் வர்த்தகப் போக்கும் பலவிதமான திசை திருப்பல்களும் மற்றும் விவசாயம் சாராத வேலை வாய்ப்புகளை விரும்பும் தலை முறையினரும் தான் இதற்குக் காரணங்கள். நவீன உற்பத்திசார் தொழிலும் முந்தைய காலம் போன்று தொழிலாளர் தேவை அதிகம் உள்ளதாக இருக்கவில்லை. எனவே இதற்கான பதிலை பெரும்பாலும் சேவைகள் பிரிவில்தான் தேட வேண்டியுள்ளது.

### தொழிலாளர்களை அதிகமாக ஈடுபடுத்தும் வளர்ச்சி

வாக்குவாதம் தேவையில்லை என்றாலும் விவாதம் தேவைப்படு கின்ற ஒரு சில பிரச்சினைகளை நான் இப்போது முன்வைக்க இருக்கிறேன். முதலாவது, இந்தியா

ஒப்பீட்டளவில் மூலதனத்தைவிட உழைப்போடுதான் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. எனவே வளர்ச்சி என்பது மூலதனம் / உழைப்பு தேர்ந்தெடுப்பு இல்லாத வரை தொழிலாளர்களை அதிக அளவில் ஈடுபடுத்தியதாக இருக்க வேண்டும். அத்தகைய உள்ளீட்டுத் தேர்ந்தெடுப்பு என்பது உழைப்பு மற்றும் மூலதனத்தின் ஒப்பீட்டு விலைகளின் ஒரு செயல்பாடாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் பிரிவில் செயற்கையாக உருவாக்கப் படும் உழைப்பு அதிக அளவில் செலவு பிடிப்பது என்பது குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன. இது வெறும் கூலிக்கான செலவு என்று மட்டுமே எடுத்துக் கொள்ளப் படாமல் தொழிலாளர் சட்டங்களுக்கு இணக்கமாக நடப்பதற்கான செலவு என்றும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனினும் 1991க்குப் பிறகு இந்தகைய இணக்கச் செலவுகள் அதிகரிக்க வில்லை, இன்னும் சொல்லப் போனால் இணக்கச் செலவுகள் குறைந்துள்ளன என்றே கூறலாம் (இங்கு ஷ்ரம் சுவிதா போர்ட்டல் பற்றி குறிப்பிட்டுச் சொல்லியே ஆகவேண்டும்). எனவே மூலதனம்/ உழைப்புத் தேர்ந்தெடுப்பு என்பது ஒரு திசை திருப்பல் சொல்லாடலாக மாறியதா என்ற கேள்வி எழுகிறது. இதற்கான விடையை ஒப்பீட்டளவில் மூலதனச் செலவு குறைந்துள்ளது என்ற அம்சத்தில்தான் தேட வேண்டும். ஏனெனில் மூலதனப் பயன்பாட்டுக்குத் தரப்பட்ட மானியங்கள் (வரி விலக்குகள் என எடுத்துக் கொள்ள வேண்டும்) இந்தக் குறைப்புக்கு காரணம் ஆகாது. தற்போதைய அரசு இதனை புதிய வேலைவாய்ப்புக்கு மானியம் அளிப்பதன் மூலம் சமப்படுத்த முயற்சிக்கிறது. இரண்டாவது, நாட்டின் சில பகுதிகளில் உழைப் பாளர் பற்றாக்குறையும் சில பகுதி களில் உழைப்பாளர் அதிக அளவிலும் இருக்கின்றனர் என்ற புகார் ஏன் தோன்றுகிறது என்பது ஆகும்.

பதிவு செய்யாத தொழிலாளர் ஒப்பந்ததாரர்கள் என்ற நிகழ்வும் அனைவருக்கும் தெரிந்ததுதான். தற்போதைய அரசின் முன்னோடி நடவடிக்கைகளில் ஒன்றாக தேசிய பணிவாய்ப்பு சேவை நுழை வாயிலைக் குறிப்பிடலாம். மூன்றாவ தாக, தற்போது கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் பார்த்தால் தற்போது வேலையில் இருக்கும் தொழிலாளர் எண்ணிக் கைக்கும், வேலை செய்வதற்கு விருப்பமாக உள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் உள்ள இடைவெளி ஏன் அதிகரித்து வருகிறது என்கிற கேள்வி எழும். உண்மையில் வேலையில் இருக்கும் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதமானது ஏன் குறைந்து வருகிறது? இது பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் குறைந்து வருகிறது என்பதாக மட்டும் அல்லாமல் ஆண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதமும் குறைந்து வருகிறது என்பதாக உள்ளது.

எந்த ஒரு சீர்திருத்தச் செயல்திட்டத்திற்கும் பெண் உழைப்பாளர்களின் பங்கேற்பு விகிதம் அதிகரிக்கப்படவேண்டும் என்று இருக்கும்போது பெண் தொழிலாளர்களின் விகிதம் குறைகிறது (திருப்தி இல்லாத தரவு என்ற நிபந்தனையில் பேரில்) என்பது ஒரு புதிராகவே இருக்கிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் அதிக அளவு சேர்க்கை விகிதம் இருப்பதால் இது ஒரு இடைநிலை அம்சமாக இருக்கிறதா எனவும் தோன்றுகிறது. உழைப்புச் சந்தைகள் உட்பட சந்தைகள் சரியான நிலையில் செயல்பட்டாக வேண்டும். எனவே இதற்குக் காரணம் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யாத வகையில் கூலி இருப்பதாலா? வேறு வார்த்தைகளில் சொல்வது என்றால், தன்னார்வ மற்றும் கட்டாய வேலைவாய்ப்பின்மை குறித்த தெளிவான தீர்வு ஏதும் நம்மிடம் இல்லை என்பதே ஆகும். நான்காவதாக, இந்த இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் என்பது கல்விக்கும் தொழில் திறன்களுக்கும் இடையில் உள்ள ஒருங்கிணைப்பின் போதாமையின் விளைவா என்பது ஆகும். அரசு அல்லது தனியார் சார்ந்த கல்வி என எதுவாக இருந்தாலும் அது அதிக சம்பளத்துக் கான எதிர்பார்ப்பை ஊக்கப் படுத்துகிறது. ஆனால் சில சமயங்களில் கல்வி தருகின்ற தொழில்திறன்கள் சந்தையின் கண்ணோட்டத்தின் வழி பார்த்தால் தகுதி ஆனவையாக இருப்பது இல்லை. ஐந்தாவதாக, எதுவாக இருந்தாலும் தொழில் திறன்கள் குறித்த பிரச்சினையும் உள்ளது. எனவே இந்த வரைவுச் சட்டகத்தில் தேசிய தொழில்திறன் மேம்பாட்டு இயக்கம் என்பதை முன்னெடுத்து தான் ஆக வேண்டும். இந்த தேசிய தொழில்திறன் மேம்பாட்டு இயக்கத்தில் தேசிய தொழில்திறன் மேம்பாட்டு ஏஜென்சி (NSDA), தேசிய தொழில்திறன் மேம்பாட்டு கழகம் (NSDL) மற்றும் பயிற்சிக்கான தலைமை இயக்குநரகம் (DGT) ஆகியவை அடங்கியுள்ளன.

2018ஆம் ஆண்டின் இறுதியில் நம்பகமான தரவு வெளியிடப்படும் போது இந்தப் பூர்வாங்க நடவடிக்கைகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும். அதுவே வேலை வாய்ப்பு வளர்ச்சி எனக் கணக்கிடப்படும்.

---

- **பிபெக் டெப்ராய்**, பிரதம மந்திரிக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர், இந்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினர். ●

## வருமானமும் வேலைவாய்ப்பும் அதிகாரம் அளித்தலுக்கான மாற்றுவழி

# வாழ்வாதார மேம்பாடும் பன்முகத்தன்மையும்

- அமர்ஜீத் சின்ஹா




கடந்த நான்கு ஆண்டுகளில் ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், வாழ்வாதாரங்களை பன்முகப்படுத்துதல் மற்றும் வறுமையைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு நிதி ஆதாரங்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன. உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும். PMAY-G,PMGSY, MGNREGS, DAY-NRLM போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவை நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளன.

வறுமை என்பது பல பரிமாணங்களைக் கொண்டது என்றும் அதை நீக்க பலதரப்பட்ட இடையீட்டு செயல்பாடுகள் தேவை என்றும், நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG) தெளிவாகக் கூறியுள்ளன. வறுமை இல்லாத ஊரக வசிப்பிடத் தொகுப்புகளை உருவாக்குவதில் உள்ள சவால்களை (படம்1) விளக்கமாகச் சித்தரிக்கிறது. விவசாயம் சாராத வாழ்வாதாரங்களும், பலபடித்தான வாழ்வாதாரங்களும் வாழ்வில் வித்தியாசத்தை ஏற்படுத்தத் தேவைப்படுகின்றன. உற்பத்திப் பிரிவுகளில் பாதி அளவு எண்ணிக்கை மற்றும் சேவைப்பிரிவுகளில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை ஆகியன ஏற்கனவே கிராமப் பொருளாதாரத்தின் அங்கமாகிவிட்டன என்று அண்மைக்கால தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்வாதார மேம்பாடு மற்றும் பன்முகத்தன்மை மூலமான வருமானமும் வேலை வாய்ப்புமே தெளிவாக இன்று நம்முன் உள்ள வழிகள் ஆகும்.

ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், வாழ்வாதாரங்களைப் பன்முகப்படுத்துதல், வறுமையைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான நிதிஆதாரங்கள் கடந்த 4 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஊரக வளர்ச்சித்துறையின் செயல் திட்டங்களுக்கான நிதிஒதுக்கீடு அதிகரித்தது. இதனால் ஏழைக்குடும்பங்களின் நல்வாழ்வு மேம்படுத்தப்படுகிறது. இதனை அட்டவணை1 மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்த அட்டவணையில் ஊரக வளர்ச்சித் துறையின் உண்மையான செலவினங்கள் 2012-13 முதல் 2017-18 ஆண்டு வரையும் 2018-19 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடுகளும் தரப்பட்டுள்ளன.

படம் -1



**அட்டவணை - 1**

**ஊரக வளர்ச்சித் துறையின் உள்ளபடியான செலவு**

| வருடம் | ஊரக வளர்ச்சித் திட்டங் களுக்கான செலவு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 2012-13 | 50,162 |
| 2013-14 | 58,630 |
| 2014-15 | 67,263 |
| 2015-16 | 77,321 |
| 2016-17 | 95,099 |
| 2017-18 (திருத்தப்பட்ட மதிப்பீடு | 1,05,448* |
| 201819 | 1,12,403.92** |

* 2017-18 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகள்

** 2018-19 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடுகள்

**(ஆதாரம்: ஊரக வளர்ச்சி அமைச்சகம்)**

2017-18ஆம் ஆண்டிற்கான வருடாந்திர செலவு என்பது 2012 13ஆம் ஆண்டின் செலவைவிட இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் ஊரகப் பகுதி வறுமையை நீக்குவதற்கு நான்கு கூடுதல் நிதிஆதாரங்கள் கிடைத்தன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

I. இமாலயப்பகுதியில் இல்லாத மாநிலங்களுக்கு 60:40 என்ற விகிதத்திலும் இமாலயப்பகுதி மாநிலங்களுக்கு 90:10 என்ற விகிதத்திலும் இந்தத் திட்டங்களின் கீழ் மத்தியமாநில அரசுகளுக்கான நிதிப்பகிர்வு மாற்றப்பட்டுள்ளது. பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் ஊரகம் (PMAY-G) என்ற திட்டத்தின் கீழ் இதற்கு முன்பு நிதிப்பகிர்வு என்பது 75:25 என்ற விகிதமாக இருந்தது. இதற்குப் பதிலாக தற்போது நிதிப்பகிர்வு 60:40 என மாற்றப்பட்டது. இதனால் மூன்று ஆண்டுகளில் மாநிலங்களின் பங்களிப்பு ரூ.45,000 கோடி என அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் இந்திய அரசின் பங்களிப்பு ரூ.81,975 கோடியாக உள்ளது. இதே போன்று, டிசம்பர் 2015 முதல் பிரதம மந்திரி கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (PMGSY) மாநிலங்கள் 40 சதவிகித நிதியைப் பங்களிப்பாகத் தரத் தொடங்கியுள்ளன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகளின் பங்களிப்பு என்பது கூடுதலாக ரூ.8,000 கோடி முதல் ரூ.9,000 கோடி என அதிகரித்துள்ளது. பிரதம மந்திரி கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில நிதியானது இவ்வளவு அதிகமாக இதற்கு முன்பு கிடைத்தது இல்லை. இதே போன்று முன்னர் 75:25 என்று இருந்த நிதிப்பகிர்வானது இப்போது 60:40 என்று தேசிய சமுதாய உதவித்திட்டம் (NSAP), தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (DAY-NRLM) கொண்டு வரப்பட்டுள்ளது.

II. 2017-18ஆம் ஆண்டில் இருந்து வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி ஆதாரங்களானது கூடுதல் பட்ஜெட் ஆதாரங்கள் மூலம் (EBR) திரட்டப்பட்டன. பிரதம மந்திரி வீட்டுவசதி ஊரகத்திட்டத்திற்கு (PMAY-G) 2017 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் மொத்தமாக ரூ.21,975 கோடி கூடுதல் பட்ஜெட் நிதி திரட்டப்பட்டது / திரட்டப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஏற்கனவே கூடுதல் பட்ஜெட் ஆதாரங்கள் (EBR) மூலம் ரூ.7329.43 கோடி விநியோகிக்கப்பட்டுள்ளது.

III. 13ஆவது நிதிக்குழுவின் கீழ் தரப்பட்ட நிதி ஒதுக்கீடுகளோடு ஒப்பிட 14ஆவது நிதிக்குழு நல்கையின் கீழ் நிதிப்பரிமாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து உள்ளன. இது அட்டவணை2இல் விரிவாகத் தரப்பட்டுள்ளது.



**அட்டவணை-2 14ஆவது நிதிக்குழுவின் கீழ் நிதி நல்கை**

| வருடம் | தரப்பட்ட மொத்தத் தொகை (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 2015-16 | 21510.46 |
| 2016-17 | 33870.52 |
| 2017-18 | 32423.72 |

IV. நான்காவது முக்கியமான காரணி எதுவெனில் இந்தக் காலகட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் (SHG) அதிக அளவு வங்கிக்கடன்கள் பெற்றதே ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மொத்தமாக ரூ.1.64 இலட்சம் கோடி தொகையை வங்கிக்கடனாகப் பெற்றுள்ளன. தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (DAY-NRLM) நிலுவையில் உள்ள வங்கித் தொகையானது, 2013-14இல் இருந்து ரூ.31,865 கோடி என்பதில் இருந்து 2017-18இல் ரூ.69,733 கோடி என இரண்டு மடங்காகியுள்ளது.

ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான குறிப்பிட்ட நிதிஒதுக்கீடுகள் தவிர, தூய்மை இந்தியா இயக்கத்துக்குத் தரப்படும் (SBM) முக்கியத்துவத்தால் வேளாண் அமைச்சகத்துக்கும் இதர உள்கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்கும் மற்றும் ஏழைகளுக்கான வாழ்வாதாரத் திட்டங்களுக்குமான நிதிஒதுக்கீடு அதிகரித்துள்ளது. இதில் பெரும் பகுதி தொகையானது வருமானம் மற்றும் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக செலவிடப்படுகிறது.

இந்தக் காலகட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையானது ஏழைக்குடும்பங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கும் பன்முக வாழ்வாதாரங் களை உருவாக்கு வதற்கும் அதிக கவனம் செலுத்தியது. ஜூலை 2015இல் வெளியிடப்பட்ட சமூக பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு (SECC) பல்வேறு அரசுத்திட்டங்களின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப் பதற்கான சான்று அடிப்படையிலான தேர்வுக்காரணிகளை முன் வைத்துள்ளது. உஜ்வாலா திட்டத்தின் கீழ் எல்.பி.ஜி (LPG) எரிவாயு இணைப்பு பெறுவதற்கு சமூக பொருளாதார சாதிக் கணக்கெடுப்பின் (SECC) கீழ் உதவி ஏதுமற்றோர் விண்ணப்பித்தல், சௌபாக்கியா திட்டத்தின் கீழ் இலவச வீட்டு மின் இணைப்பு பெறுதல், பிரதம மந்திரி வீட்டுவசதி ஊரகம் (PMAY-G) திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், இப்போது தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டத்திற்கு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகிய திட்டச் செயல்பாடுகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் எந்தவிதமான உதவியும் அற்ற நபர்களுக்குக் கிடைப்பது உறுதிப்படுத்தப் படுகிறது. வளர்ச்சியின் பயன்கள் உரியவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் மாநிலங்களுக்கான தொழிலாளர் பட்ஜெட்களை உறுதி செய்வதில் சமூகபொருளாதார சாதிக் கணக்கெடுப்பின் (SECC) பயன்பாடு மற்றும் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (DAY-NRLM) செயல்படும் சுயஉதவிக் குழுக்களில் உதவி ஏதும் அற்ற குடும்பங்களைச் சேர்ந்த அனைத்துப்பெண்களையும் பதிவு செய்தல் ஆகிய செயல்பாடுகள் வறுமை ஒழிப்புத்திட்டங்களின் கீழ் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள ஏழை குடும்பங்கள் பெருவாரியாக முன்னுரிமை பெறுவதை உறுதிசெய்கின்றன. அட்டவணை - III உதவி ஏதும் அற்ற நிலையின் வகைகளை எடுத்துக்காட்டுகிறது.

**அட்டவணை - III - சமூக-பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு (SECC) 2011ன் கீழ் உதவி ஏதும் அற்ற நிலை**

| விவரம் | உதவி ஏதும் அற்ற குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அறை ஏதும் இல்லாத அல்லது ஒரே ஒரு அறை மட்டும் மண் சுவரால் கட்டப்பட்டது மற்றும் கூரை (டி1) | 2,37,31,674 |
| 16 முதல் 59 வயதுப் பிரிவில் வயது வந்த நபர் யாரும் இல்லை (டி2) | 65,15,205 |
| 16 முதல் 59 வயதுப் பிரிவில் வயது வந்த ஆண் நபர் யாரும் இல்லாத நிலையில் பெண்களே குடும்பத்தலைவர்களாக இருத்தல் (டி3) | 68,96,014 |
| மாற்றுத்திறனாளி உறுப்பினர். உதவி செய்ய வயதுவந்த சாதாரண நபர் யாரும் உடன் இல்லை (டி4) | 7,16,045 |
| எஸ்சி/எஸ்டி குடும்பங்கள் (டி5) | 3,85,82,225 |
| 25 வயதிற்கு மேற்பட்ட எழுத்தறிவு பெற்ற வயது வந்தோர் யாரும் இல்லை (டி6) | 4,21,47,568 |
| நிலம் ஏதும் இல்லாத குடும்பங்கள். சாதாரண தற்காலிகத் தொழிலாளராகப் பணி புரிதல் (டி7) | 5,37,01,383 |

ஊரக வளர்ச்சி தொடர்பான அனைத்து திட்டங்களும் வாழ்வாதார மேம்பாடு மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றோடு இணக்கமானதாக மாற்றப்படுகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டமானது (MGNREGS) நீடித்து இருக்கும் சொத்துக்கள் மற்றும் நீர்சேமிப்புக்கு முக்கியத்துவம் தருகிறது. பண்ணைக் குட்டைகள், கிணறு தோண்டுதல், ஆட்டுக் கொட்டகை, கோழிகளுக்கான கொட்டில், வீட்டுவசதிக்கான உதவி மற்றும் மாட்டுக்கொட்டிலுக்கான உதவி போன்றவற்றின் மூலம் வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தருவதோடு தனிநபர் பலன்களையும் தருகிறது. கால்நடை ஆதாரங்கள் மற்றும் விவசாயத்துக்கான மானியத்திட்டங்களோடு வாழ்வாதார இணைப்புகளும் சேர்க்கப்படுவதால், வேளாண்மை மற்றும் அது சார்ந்த பிரிவுகளில் அதிகப்படியான வருவாய் கிடைக்க உதவுகிறது. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி அதிகரித்தல் மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் கால்நடை வளங்கள் மூலம் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஊரக வாழ்வாதார மேம்பாடு மற்றும் பன்முகத்தன்மைக்கு கொடுக்கப்பட்ட அதிக முக்கியத்துவமே காரணமாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் வாழ்வாதார உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் தொடக்க நடவடிக்கைகள் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் கீழே தரப்படுகின்றன:

(i) 143 இலட்சம் ஹெக்டேர் நிலத்துக்கு நீர் சேமிப்பு பணிகள் மூலம் பலன்கள் கிடைத்தன.

(ii) இந்தக் காலகட்டத்தில் சரியான அளவில் நீர்சேமிப்பு அமைப்புகள் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டன. அதனோடு 15 இலட்சம் பண்ணைக் குட்டைகள் மற்றும் 4 இலட்சம் கிணறுகள் நீர்ப்பாசனத்துக்காக உருவாக்கப்பட்டன.

(iii) இந்தக் காலகட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் நிர்வகித்து வந்த, வாடகைக்கு வேளாண் எந்திரங்களைத் தரும் 6,222 மையங்கள் முழுமையான செயல் பாட்டுக்கு வந்தன.

(iv) மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உறுப்பினர்களில் இருந்து 11,000 வங்கி சகாக்கள் மற்றும் 773 வங்கித்துணைவர்கள் ஆகியோர் வங்கி வணிகத் தொடர்பாளர்களாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

(v) வேதிப்பொருள் இல்லாத வேளாண் சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் மூலம் 33 இலட்சம் பெண் விவசாயிகள் உதவி பெற்றனர்.

(vi) 86,000 உற்பத்திக்குழுக்கள் மற்றும் 126 வேளாண் உற்பத்தியாளர் குழுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

(vii) ஊரகப் போக்குவரத்துக்கான ஆஜீவிகா கிராமின் எக்ஸ்பிரஸ் திட்டத்தின் கீழ் பெண் ஓட்டுநர்களால் 499 வாகனங்கள் சாலைகளில் ஓட்டப்படுகின்றன.

(viii) பீகார், உத்திரப்பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் போன்ற தொலைதூர பிராந்தியங்களில் உள்ள 4,000 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களால் 9 இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் “சூரிய மின்சக்தி” விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ix) 6,000க்கும் மேற்பட்டவர்களுக்கு, ‘கல்வி கற்ற கட்டுமானத்தொழில் நிபுணர்கள்’ (பேர்ஃபூட் டெக்னீசியன்கள்) பயிற்சி அளிக்கப்பட்டு சான்றளிக்கப் பட்டுள்ளது.

(x) கடந்த நான்கு ஆண்டுகளில் தீனதயாள் உபாத்யாய கிராமீன் கௌஷல்யா திட்டத்தின் (DDU-GKY) கீழ் 3.54 இலட்சம் பேர் சம்பள வேலைகளில் வெற்றிகரமாக சேர்க்கப் பட்டுள்ளனர். அதே போன்று ஊரக சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் (RSETI) மூலம் 12.65 இலட்சம் பேர் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

(xi) 10949 கிராமப்புற கொத்தனார் வேலை செய்பவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

வருமானம் மற்றும் வேலை வாய்ப்பில் பிரதம மந்திரி வீட்டு வசதி (ஊரகம்) திட்டத்தின் (PMAY-G) தாக்கம் என்னவாக இருக்கிறது என்று மதிப்பீடு செய்ய தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்திடம் கேட்டுக்கொள்ளப் பட்டது. அந்த அறிக்கையானது இவ்வாறு சொல்கின்றது: ‘‘2016-17ஆம் ஆண்டு முதல் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கும் வீடுகள் குறித்து ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் ஆவாஸ் சாஃப்ட் வழியாகப் பெறப்பட்ட தகவலைப் பயன்படுத்தி, 54.47 கோடி மனிதநாட்கள் இந்தத்திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுள்ளன என்று நாங்கள் கணக்கிடுகிறோம். இந்த இரண்டு ஆண்டில் இதில் 20.85 கோடி மனித நாட்கள் தொழில்திறன் பெற்ற தொழிலாளர்களுக்கானது. மீதி உள்ள 31.62 கோடி மனிதநாட்கள் தொழில் திறன் பெறாத தொழிலாளர்களுக்கானவை’’.

ஊரகக் கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் பிரதம மந்திரி கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டமானது (PMGSY) ஒரு முன்னோடித் திட்டமாக இருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் 1.69 இலட்சம் கிலோ மீட்டர் சாலைகள்

இந்தத் திட்டத்தின் மூலம் போடப்பட்டன. 2011-12 முதல் ஒரு ஆண்டில் சராசரியாகப் போடப்பட்ட சாலையின் நீளம் குறித்த விவரத்தை கீழ்வரும் அட்டவணை IVஇல் காணலாம்.

**அட்டவணை IV - பிரதம மந்திரி கிராமச்சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (PMGSY) ஒரு நாளில் போடப்பட்ட சராசரி சாலையின் நீளம் (கிலோ மீட்டரில்)**

| வருடம் | PMGSY திட்டத்தின் கீழ் சராசரியாக ஒரு நாளில் போடப்பட்ட சாலையின் நீளம் (கிலோ மீட்டரில்) |
|---|---|
| 2011-12 | 85 |
| 2012-13 | 66 |
| 2013-14 | 69 |
| 2014-15 | 100 |
| 2015-16 | 100 |
| 2016-17 | 130 |
| 2017-18 | 134 |

சாலை அமைக்கும் திட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் விரைவுபடுத்தப்பட்டதால் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் அதிகரித்தன. சராசரியாக ஊரகச் சாலைகள் அமைப்பதற்கான மொத்தச் செலவில் கால்பங்கு தொகை தொழில்திறன் பெற்ற, ஓரளவு தொழில்திறன் பெற்ற மற்றும் தொழில்திறன் பெறாத தொழிலாளர்களின் கூலிக்கே செலவானது. இந்தக் காலகட்டத்தில் இவை வருமானம் மற்றும் வேலைவாய்ப்புக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றின. கடந்த மூன்று ஆண்டுகளில் மத்திய அரசின் வருடாந்திர ஒதுக்கீடு ரூ.19,000 கோடியாக அதிகரித்தது. இது மாநிலத்தின் பங்கை ரூ.8,000 கோடியில் இருந்து ரூ.9,000 கோடியாக உயர்த்தியது. இதன் அர்த்தம் என்னவென்றால் கடந்த மூன்று ஆண்டுகளில் சாலைக்கட்டமைப்புக்கு தோராயமாக ரூ.70,000 கோடியில் இருந்து ரூ.80,000 கோடி வரை கிடைத்தது என்பதுதான். 25 சதவிகிதம் நேரடி வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்பது இயல்பாக பெரிய அளவு எண்ணிக்கைதான். இது ஊரகப்பகுதிகளில் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பில் தொடர் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இந்தக் காலகட்டத்தில மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டமானது (MGNREGS) முழுவதும் வெளிப்படைத் தன்மையுடன் வாழ்வாதாரப் பாதுகாப்பை ஏற்படுத்தும் முதன்மை ஆதாரமாக இருந்தது.



• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தை (MGNREGS) திறம்பட நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதில் மத்திய அரசு பொறுப்புடன் செயல்படுகிறது. இதற்கான பட்ஜெட் ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரித்து வருவதே இதற்கான வெளிப்படையான ஆதாரம் ஆகும். 2017-18ஆம் நிதி ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.55,167 கோடி ஆகும். இது இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளிலேயே மிகவும் அதிகம் ஆகும்.

**அட்டவணை V**

| வருடம் | பட்ஜெட் ஒதுக்கீடு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 2014-15 | 33000 |
| 2015-16 | 37346 |
| 2016-17 | 48220 |
| 2017-18 | 55167 |

• நிதியைப் பயன்படுத்துதல்: கடந்த நிதி ஆண்டுகளோடு ஒப்பிட நிதியைப் பயன்படுத்துவது (மத்திய அரசு மற்றும் மாநிலஅரசின் பங்குகள் இரண்டையும் சேர்த்து) குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 2017-18ஆம் நிதிஆண்டில் மொத்தச் செலவு ரூ.64,288 கோடி (தற்காலிகக் கணக்கீடு) ஆகும். இது இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து செய்யப்பட்ட செலவுகளில் மிக அதிகமாகும்.

• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் (MGNREGS) கீழ் கடந்த 3 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட மனித வேலை நாட்கள் ஓராண்டுக்கு சுமார் 235

கோடி என இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டுகளைவிட இது மிகவும் அதிகமாகும். நீடித்த நிலையான சொத்துக்கள் மற்றும் தனிநபர் பலன் பெறும் திட்டங்கள் (IBS) ஆகியவற்றுக்கு கொடுத்த முக்கியத்துவமே எவ்வாறு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்துக்கு (MGNREGS) ஒரு சீரான தேவையை உருவாக்கியது என எடுத்துக்காட்டுகிறது. அட்டவணை VIஇல் உள்ள புள்ளிவிவரங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் (MGNREGS) நீடித்த நிலையான சொத்துக்கள் மூலமாக வாழ்வாதார பாதுகாப்புக்கு அதிக அளவில் தேவை ஏற்பட்டதை உறுதிப்படுத்துகிறது.

**அட்டவணை VI**

| வருடம் | வேலைக்காக உருவாக்கப்பட்ட மனித நாட்கள் (ரூபாய் கோடிகளில்) |
|---|---|
| 2014-15 | 166.21 |
| 2015-16 | 235.14 |
| 2016-17 | 235.6 |
| 2017-18 | 234.3 |

தேசிய உணவுப்பாதுகாப்பு சட்டத்தை (NFSA) ஒரு கிலோ அரிசி ரூ.3, ஒரு கிலோ கோதுமை ரூ.2 என விற்பதற்கு விரிவாக்கிய செயலானது ஏழைக்குடும்பங்களில் உணவுப்பாதுகாப்புக்கு வழி செய்தது. வேளாண் தொழிலாளர் களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண் அதிகரித்தது என்பது இந்த காலகட்டத்தில் உணவுப் பொருளின் குறைவான விலைவாசி ஏற்றத்தின் காரணமாக மிதமாக இருந்தது. வேளாண் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணைக் கணக்கிடுவதில் சரக்குகள் மற்றும் சேவைகளின் பிரிவில் பெரும் பகுதி அளவாக உணவுப் பொருள்களே இருக்கின்றன. எனவேதான் இந்தக் குறியீட்டு எண் அதிகரித்தது. அரிசி மற்றும் கோதுமை மீதான மானியங்கள் மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு விலை மலிவான உணவு தானியங்கள் உடனடியாக கிடைப்பது ஆகிய அம்சங்களை வேளாண் தொழிலாளர்களுக்கான கூலி விகிதங்களை கணக்கிடும் போது காரணிப்படுத்த வேண்டும். தொழிலாளர்களின் உண்மையான கூலியில் பெயரளவிற்கு அதிகரிப்பு இருந்தாலும்கூட, வாங்கும் சக்தியானது அதிகரிக்கவே செய்யும். ஏனெனில் முக்கியமாக செலவு செய்யவேண்டிய அரிசி மற்றும் கோதுமை ஆகியவை அதிக அளவிலான மானியத்துடன் கிடைப்பதே இதற்கு காரணம் ஆகும்.

கிராமப்புற ஏழ்மை என்பது பன்முகப் பரிமாணங்கள் கொண்டதாகும். இதை ஒரே நேரத்தில் சமாளிக்கவேண்டிய தேவை என்பது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சிகள் என்பது ஊரக வளர்ச்சிக்கான முன்னோடி நடவடிக்கைகளை ஒன்றாக இணைப்பதே ஆகும். ஏழைக் குடும்பங்களின் நல்வாழ்வில் உண்மையாகவே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒருங்கிணைப்பானது மேற்கொள்ளப்பட்டது. இந்த இடையீட்டு நடவடிக்கைகள் குடும்பங்களின் வறுமை மற்றும் புவிப்பரப்பின் வறுமை ஆகிய இரண்டையுமே இலக்காகக் கொண்டதாகும். இவற்றுக்கு உதவக் கூடிய காரணிகள் கீழே பட்டியலிடப்பட்டுத் தரப்படுகின்றன:

**குடும்பங்களின் வறுமை**

- கல்வித்தகுதி மற்றும் தொழில் திறன்கள் இல்லாதது
- ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ஆரோக்கியமற்ற நிலைமை
- வேலைவாய்ப்புகள் ஏதும் கிடைக்காதது
- சொத்தில் உரிமை ஏதும் இல்லாமை
- பொதுச்சேவைகளைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடு
- இடைத்தரகரின் குறுக்கீடு / ஊழல் / தண்டல்காரர்
- பெண்கள் / இளையோர் / ஏழைக் குடும்பங்களில் கூட்டு மூலதனம் இல்லாமல் இருப்பது.

**புவிப்பரப்பின் வறுமை**

- உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு குறைவான விலை என்பது துயரம்
- வன்முறை / குற்றம்
- நீர்ப்பாசனம் இல்லாத விவசாயம் / பருவமழைக் காலத்தில் மாற்றங்கள்
- அடிப்படை சாலை வசதிகள், மின்சார வசதி மற்றும் இணைய வசதி இல்லாதது
- சந்தைகளை எளிதாக அணுகமுடியாது இருத்தல் மற்றும் வேலைகள் எளிதில் கிடைக்காமல் இருத்தல்
- விவசாயம் சாராத தொழில் வாய்ப்புகள் இல்லாதது

தரவுகள் மற்றும் முன்னர் பட்டியலிடப்பட்டு உள்ள இடையீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் இருந்து கடந்த சில ஆண்டுகளில் ஊரகப்பகுதி வறுமையை நீக்க அதிக அளவு நிதிஆதாரங்கள் கிடைக்கும்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவாகிறது. அதிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் மிக அதிக அளவில் தரப்பட்டன என்பதும் தெரிய




வருகிறது. இந்த நடவடிக்கைகள் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரங்களின் பன்முகத் தன்மை மூலம் வருமானத் தையும் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கச் செய்தன. அத்தகைய பன்முகத் தன்மைக்கான சில விரிவான உதாரணங்கள் மேலே பட்டியலிடப் பட்டன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தோமானால் மேலே சுட்டிக்காட்டிய பலதரப்பட்ட இடையீட்டு நடவடிக்கைகள் மூலமாக ஊரக வறுமைக்கான பிரச்சினைகள் திறம்பட எதிர்கொள்ளப்பட்டன. ஊரக மேலாண்மை நிறுவனம் ஆனந்த் (IRMA) மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டது. வருமானம், உற்பத்தி ரீதியிலான சொத்துக்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஆகியன அதிகரித்துள்ளன என்பதை இந்த ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அதாவது எங்கெல்லாம் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் (DAY-NRLM) சிறப்பாகச் செயல் படுகின்றனவோ, அங்கெல்லாம் இந்த அதிகரிப்பு இருக்கிறது. அதே போன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் (MGNREGS) கீழ் நீர்சேமிப்பு வேலைகள் தொடர்பான ஆய்வுகளை பொருளாதார வளர்ச்சிக்கான நிறுவனம் மேற் கொண்டது. வருமானம், உற்பத்தித்திறன், விவசாயம் செய்யும் நிலத்தின் பரப்பளவு மற்றும் நிலத்தடிநீர் ஆகியன அதிகரித்துள்ளன என்று இந்த ஆய்வானது உறுதி செய்கிறது. இத்தகைய அதிகரிப்புகள் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியாக வேண்டும்.

– **அமர்ஜீத் சின்ஹா**, இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளர். ●



### பல்நோக்கு அணுகுமுறை

### குறிக்கோளை நிறைவேற்றும் இயக்கப் பணிமுறை

# நகரப்பகுதிகளில் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்

- துர்கா சங்கர் மிஸ்ரா,





உற்பத்தி சார்ந்த தொழில்களிலும், சேவை சார்ந்த தொழில்களிலும் ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப மாற்றங்களும், விவசாயத்துறையில் அதிகரித்துவரும் இயந்திரங்களின் பயன்பாடும் நகரப்பகுதிகளில் அதிக அளவு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அரசு இத்தகைய சவால்களை பல்நோக்கு அணுகுமுறையுடன் எதிர்கொள்கிறது. நகரப்பகுதிகளில் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசு எடுத்துவரும் தொடக்க நடவடிக்கைகளின் பரிணாமம், வளர்ச்சி இவை குறித்து இந்தக் கட்டுரை எடுத்துரைக்கிறது. எதிர்காலத்திற்கு ஏற்ற நகர உழைப்பாளர் சந்தையை உருவாக்குவதற்கான கொள்கை முடிவுகளையும் இந்தக் கட்டுரை விளக்குகிறது.

துடிப்பாகவும், விரைவாகவும் வளர்ந்துகொண்டு இருக்கும் இந்தியாவின் பொருளாதாரத்திற்கு சீராகவும் தொடர்ச்சியாகவும் தொழில்திறன் பெற்ற மனிதவளம் கிடைக்கவேண்டிய தேவை உள்ளது. 2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 31 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் நகரப்பகுதிகளில் வசிக்கின்றனர். 2050ஆம் ஆண்டில் நகரப்பகுதிகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கை 50 சதவிகிதத்துக்கும் மேல் அதிகரிக்கும் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. நகரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து கொண்டே வருகின்றன. இருக்கின்ற நகரங்களில் மக்கள்தொகை நெருக்கமாகிறது. இந்த நகரங்கள் பெரிதாகிக் கொண்டும் இருக்கின்றன. வாழ்வாதாரங்களுக்கு உதவ வேண்டும் என்ற வற்புறுத்தல் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் சுமார் 10 இலட்சம் புதிய நபர்கள் தொழிலாளர்களாகச் சேர்கிறார்கள் (பொருளாதாரம், கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான நிறுவனத்தின் (OECD) பொருளாதாரக் கணக் கெடுப்புகள்: இந்தியா, 2017). உற்பத்தி சார்ந்த, சேவை சார்ந்த தொழில்களில் ஏற்பட்டுவரும் தொழில்நுட்ப மாற்றங்கள் மேலும் விவசாயத்துறையில் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பயன்பாடு ஆகியன நகரப்பகுதிகளில் அதிக அளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது. அடுத்த இருபது ஆண்டுகளில் புதியதாக உருவாகும் வேலைகளில் சுமார் 70 சதவிகிதம் இந்தியாவில் உள்ள நகரப்பகுதிகளில் தான் இருக்கும் என கணக்கிடப் பட்டுள்ளது. (சன்கி மற்றும் பலர், 2010).

#### 1. தொழில் திறன்களுக்கான சூழல்சார் அமைப்பை வளர்த்தெடுத்தல்

தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக் கொள்கையானது 2009ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) நிர்மாணிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டுக்குள் 150 மில்லியன் நபர்களுக்கு தொழில்திறன் அளிக்கப்படவேண்டும் என்ற கடப்பாட்டுடன் இது தொடங்கப் பட்டது. அரசின் பங்குரிமை 49 சதவிகிதம் என்ற வரம்புடன் இது அரசுதனியார் பங்கேற்பு (PPP) முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) பெரும்பான்மை பங்கு உரிமை தனியார் வசமே உள்ளது. அதிலும் பங்குகள் 10 வர்த்தக சபைகள் மற்றும் துறைவாரி யான தொழில் அமைப்புகளுக்குச்

சமமாகப் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளன (ஷெனாய், 2012).

இந்தியாவில் தொழில் திறன்கள் பயிற்சி பரவலாக அனைத்துப்பகுதிகளிலும் இப்போது கிடைக்கின்றன. 22 அமைச்சகங்கள் பல்வேறு வகையான தொழில்திறன் பயிற்சித்திட்டங்களை வழங்கி வருகின்றன. சீரான தொடர்ச்சியான கொள்கை வழிகாட்டுதலின் தேவையை உணர்ந்ததாலும், திறன்கள் குறித்த கண்ணோட்டம் வேண்டும் என்பதாலும் பிரதம மந்திரி 2015இல் திறன் இந்தியா இயக்கத்தைத் தொடங்கினார். இந்தியாவின் எதிர்காலத்தில் தொழில்திறன் பெற்ற தொழிலாளர் சக்தி வேண்டும் என்பதற்காக பல்வேறு அமைச்சகங்கள் மூலம் ஆங்காங்கே சிதறுண்டு இருக்கின்ற பயிற்சி முயற்சிகளை ஒன்று சேர்த்து செயல்திட்டம் ஒன்றை திறன் இந்தியா இயக்கமானது ஏற்படுத்தி யுள்ளது. முன்னர் நிர்ணயித்த இலக்கை திறன் இந்தியா இயக்கம் மேலும் அதிகமான எண்ணிக் கையுடன் திருத்தியுள்ளது. அதாவது இப்போதைய இலக்கு 2022ஆம் ஆண்டுக்குள் 400 மில்லியன் நபர்களுக்குத் தொழில்திறன் பயிற்சி அளித்தல் என்பது ஆகும்.

சுயமாக வேலை தொடங்கு வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க இன்றியமையாது தேவைப்படுகின்ற முறைசார் நிதிச்சேவைகளைப் பெறுகின்ற வழிவகைகளை விரிவுபடுத்துகின்ற ஒரு இணையான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொழில்திறன் பயிற்சிக்கான சூழல்சார் அமைப்பை முழுமையாக்குகிறது. ஜன் தன் (அனைவருக்கும் வங்கிச் சேவை), ஆதார் மற்றும் மொபைல் ஃபோன் சார்ந்த சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய JAM+ கட்டமைப்பானது அனைவரையும் உள்ளடக்கிய நிதிசார் சேவைகள் என்ற இலக்கை அடைய உதவுகிறது.

இந்த ஆண்டின் தொடக் கத்தில் உலக வங்கி வெளியிட்ட குளோபல் ஃபைன்டெக்ஸ் அறிக்கை இந்தியாவில் வங்கிக்கணக்கு வைத்திருப்போர் குறித்து சொல்கிறது. 2011இல் வயது வந்தோரில் 25 சதவிகிதம் நபர்களே வங்கிக்கணக்கு வைத்திருந்தனர். இது 2014இல் 53 சதவிகிதமாகவும் 2017இல் 80 சதவிகிதமாகவும் அதிகரித்துள் ளதாக இந்த அறிக்கையானது தெரிவிக்கிறது. வங்கிக்கணக்கு வைத்திருப்பதில் ஆண்பெண் பாலின இடைவெளியும் குறைந்துள்ளது. 83 சதவிகித ஆண்கள் வங்கிக்கணக்கு வைத்திருக்கின்றனர். பெண்கள் 77 சதவிகிதம் பேர் மட்டுமே வங்கிக்கணக்கு வைத்திருக் கிறார்கள். அதுமட்டும் அல்லாமல், முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெற்ற பயனாளிகளில் பெண்களே ஏறத்தாழ 75 சதவிகிதம் உள்ளனர் (உலக வங்கி, 2018).

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகத்தின் கீழ் (MoHUA) செயல்படுத்தப்படும் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY - NULM) முக்கிய அம்சமாக சம்பளம் பெறும் வேலை, சுயவேலை வாய்ப்பு என இரண்டுக்கும் ஆதரவு அளிக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறை உள்ளது. நிர்வாக அமைப்பு இருக்கும் நகரங்கள் அனைத்திலும் உள்ள ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கித் தருவதை நோக்கி இந்த இயக்கம் செயல்பட்டு வருகின்றது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகத்தின் (MoHUA) முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) தொடங்கப் பட்டுள்ளது. இந்த அமைச்சகத்தின் ஏனைய முன்னோடித் திட்டங்கள் கீழே தரப்படுகின்றன:

- ❖ தூய்மை இந்தியா இயக்கம் நகரம் (SBM-U)
- ❖ பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் நகரம் (PMAY-U)
- ❖ பொலிவுறு நகர இயக்கம் (SCM)
- ❖ புதுப்பித்தல் மற்றும் நகர உருமாற்றத்துக்கான அடல் இயக்கம் (AMRUT)
- ❖ பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் பெரிதாக்குதல் திட்டம் (HRIDAY)

இந்தத் திட்டங்கள் அனைத்தும் நீடித்த வேலை



**சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளின் கூட்டம், ஒடிசா பல பரிமாண வாழ்வாதார செயல் உத்திகள்.**

ஒரு முழுமையான ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலமும், வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலமும் நகர்ப்புற வறுமையை ஒழிக்கவேண்டும் என்பதை இந்த இயக்கம் இயக்கம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**சுயவேலை**
**வாய்ப்புத்திட்டம்**

வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தை (DAY-NULM) முழுமை அடையச்செய்யும்.

### பல பரிமாண வாழ்வாதார செயல் உத்திகள்

ஒரு முழுமையான ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலமும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் நகர்ப்புற வறுமையை ஒழிக்கவேண்டும் என்பதை இந்த இயக்கம் குறிக்கோளாகக் கொண்டு உள்ளது (பார்க்க: படம் 1).

இந்த இயக்கத்தின் கீழ் நகர வாழ்வாதார மையங்கள் (CLC) அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சி அளவில் முறைசாராத உள்ளூர் சேவைகள் பிரிவை ஒருங்கிணைக்க இந்த மையங்கள் உதவியாக இருக்கும். சுயவேலைவாய்ப்பில் உள்ளவர்களும், எலக்ட்ரீஷியன்கள், தச்சர்கள், பிளம்பர்கள், பெயிண்ட்டர்கள், தையல்காரர்கள், தனிவகுப்பு நடத்துபவர்கள் என இது போன்ற பணிகளில் தன்னார்வமாக ஈடுபட்டு உள்ளவர்களும் இந்த நகர வாழ்வாதார மையங்களில் பதிவு செய்துள்ளனர். வாடிக்கையாளர்கள் இந்த நகர வாழ்வாதார மையங்களைத் (CLC) தொடர்பு கொண்டு இம்மாதிரியான சேவைகளைப் பெறலாம். சிறுதொழில் செய்பவர்களுக்குத் தேவையான சந்தைப்படுத்துதல் உதவியையும் நகர வாழ்வாதார மையங்கள் (CLC) செய்யும்.

இந்த இயக்கத்தில் உள்ள தொழில்திறன் பயிற்சி மற்றும் பணிக்கு அமர்த்தல் (ESTP) பிரிவு சந்தைக்குத் தேவையான தொழில் திறனையும் வேலைவாய்ப்பையும் திறன் இந்தியா இயக்கத்தின் கீழ் வழங்குகிறது. பயிற்சி பெற்ற பிறகு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உதவி செய்யப்படுகிறது அல்லது சுயவேலை வாய்ப்புக்கு வழிகாட்டுகிறது. சுயவேலை வாய்ப்புத்திட்டம் (SEP) என்பது இந்த இயக்கத்தின் மிக முக்கியமான கூறாகும். நகர ஏழைகளுக்கும் நிதிசார் சேவைகள் கிடைப்பதில் கவனம் செலுத்தப்பட்டு மானியத் தோடு கூடிய நுண்கடன் மூலமாக அவர்கள் சிறு வர்த்தக நிறுவனங் களை நடத்த ஆதரவும் தரப்படுகிறது.

இந்த இயக்கத்தின் கீழ் உள்ள நகரத்தில் வசிக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கான உதவிப் பிரிவானது நடைபாதை வியாபாரிகள் சட்டம் 2014இன் கீழ் நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உதவுகிறது. இந்தப் பிரிவின் கீழ் இதுவரை எட்டு இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் நடைபாதை வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களது தொழில் சட்டரீதியாக்கப் படுவதோடு அவர்கள் வியாபாரம் செய்யும் இடமும் அங்கீகரிக்கப் படுகிறது. பல நகரங்கள் இவ்வாறு நகர வியாபாரத் திட்டங்களைத் தயாரித்துள்ளன. இந்த நகரங்கள் வியாபாரத்துக்கான உள்கட்டமைப்பு வசதிகளோடு தனிப்பட்ட வியாபார மண்டலங்களை நிர்மாணிக்கவும் தொடங்கியுள்ளன.

**மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்புகள் வாழ்வாதாரங் களுக்கு உதவுதல், அம்பிகாபூர், சட்டீஸ்கர்**

அம்பிகாபூரில் தொடங்கப்பட்டுள்ள ‘‘குப்பையில் இருந்து தங்கத்துக்கு’’ என்ற திட்டம் கழிவு மேலாண்மை அமைப்பை மாநகராட்சி மூலமான செயல் என்பதில் இருந்து சமுதாயம் மூலமான செயல் என்று மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சுய உதவிக்குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கின்ற 500க்கும் அதிகமான பெண்கள் வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிப்பதிலும் (D2DC) நகரம் முழுவதிலும் உள்ள திட மற்றும் திரவ மூலவள நிர்வாக மையங்களில் (SLRM) செயல்படுவதிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மையப் படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு அறையில் இருந்து நகர உள்ளாட்சி அமைப்பினர் இந்த நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறார்கள். குப்பை சேகரிப்பு குறித்த தினசரி தரவை ஆன்லைன் போர்ட்டல் எடுத்துச் சொல்கின்றது.

### நகர வாழ்வாதார மையம், ஜெய்ப்பூர், ராஜஸ்தான்

சுய உதவிக் குழு (SHG) மகளிர் நடத்துகின்ற சிறு வர்த்தக நிறுவனங்களை மேம்படுத்த புத்தாக்க சந்தைப்படுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜெய்ப்பூர் சிஎல்சி ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. சி.எல். சியானது அமேசான், ஸ்னாப்டீல், ஃபிளிப்கார்ட் மற்றும் ஷாப் குளூஸ் போன்ற புகழ் பெற்ற இவர்த்தக நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

தொழில்திறன் பெற்ற சேவை வழங்குநர்களுக்காக ஒரு கால் சென்ட்டர் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இதுவரை 10,000 வாடிக்கையாளர் களுக்கு மேல் சேவை அளிக்கப் பட்டுள்ளது. தொழில்திறன் பயிற்சி பெற்ற நபர்களுக்காக பணியமர்த்தல் உதவித் திட்டங்களையும் சிஎல்சி நடத்தி வருகின்றது. தெரு வியாபாரிகளுக்கு பயிலரங்கு களையும் நடத்துகிறது.

### முதன்மை இடர்க் காரணிகளைக் கண்டறிந்து சமாளித்தல்

இந்த இயக்கம் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டிய மூன்று முக்கிய தேசிய அளவிலான சவால்கள் எவை என்றால்: அ) வேலை வாய்ப்பின் முறைசாராத இயல்பு, ஆ) உழைப்புச் சக்தியில் பெண்கள் குறைந்த அளவில் பங்கேற்றல், இ) நடைமுறைப் படுத்தும் ஏஜென்சிகளின் தகுதித் தடைகள் ஆகும்.

### (அ) நகர்ப்புற முறைசாரா உழைப்புச் சக்தியை முறைப்படுத்துதல்

நகரத்தில் உள்ள முறைசாராத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினரை கட்டுமானம் மற்றும் துப்புரவுப்பிரிவுகள் வேலைக்கு அமர்த்தியுள்ளன. இந்தத் தொழிலாளர்களின ஆரோக்கியமும், பாதுகாப்பு நிலைமையும் மோசமாக உள்ளன. தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது (DAY -NULM) இந்தப் பிரச்சனையை இரண்டு பூர்வாங்க நடவடிக்கைகள் வழியாக எதிர்கொள்கிறது. முதலாவது நடவடிக்கை என்பது பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டத்தோடு ஒருங்கிணைந்த அம்சமாக முன்பே கற்றதை அங்கீகரித்தல் (RPL) என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முறைசாராது முன்கூட்டியே தொழில் திறன்களைப் பெற்றவர்களை அங்கீகரித்து சான்றளித்து மற்றும் முறைப்படுத்தும் செயல்முறை கடைபிடிக்கப்படுகிறது. கட்டுமானம் மற்றும் துப்புரவு போன்ற பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய தொழில் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளவர் களுக்கான முன்பே கற்றதை அங்கீகரித்தல் (RPL) செயல்முறை மற்றும் சான்றளித்தல் என்பவை அந்தத் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தையும், பாதுகாப்புத் தரத்தையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் முறைசாராத தொழிலாளர்கள் தங்களது தொழில்திறன்கள் மீது பெருமை கொள்ளமுடியும். அவர்கள் தகுதி அடிப்படையில் மேல் நிலைகளுக்கும் செல்லமுடியும். மேலும், இந்த இயக்கம் துப்புரவுத் தொழிலாளிகளின் திறமைகளை வளர்த்தெடுக்க முடிந்த அளவிற்குச் செயல்படுகிறது. பசுமை வேலைகள் கவுன்சிலுக்கான தொழில்பிரிவு கவுன்சிலோடும் தூய்மை இந்தியா இயக்கத்தோடும் சேர்ந்து துப்புரவுத் தொழிலாளர்களுக்கு பசுமையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தரவும் இந்த இயக்கம் முன்வந்துள்ளது.

இரண்டாவது நடவடிக்கை, நகர வாழ்வாதார மையங்கள் (CLC) அனைத்து நகரங்களிலும் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (DAY - NULM) தொடங்கப்பட வேண்டும். தன்னார்வ மாக சேவை அளிப்பவர்கள் குறித்த தகவல் தரவை உருவாக்குதல், மொபைல் செயலிகள் மூலம் இந்த மையங்களின் சேவைகளைக் கிடைக்கச் செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி இந்த மையங்கள் புத்தாக்கம் செய்யப்படுகின்றன. முறைசாரா தொழிலாளர்களைத் திரட்டி அவர்களுக்கு பயிற்சி அளிப்பதை பல நகர வாழ்வாதார மையங்கள் (CLC) மேற்கொண்டு வருகின்றன. நகராட்சி ஒப்பந்தங்கள் மூலமாக அவர்களை முறைசார் தொழிலாளர்களாக மாற்ற உதவுகின்றன. உதாரணமாக

**படம் 2: இது வரையிலான முன்னேற்றம்**



**2.99 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன**
**2.09 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் சுழல் நிதியைப் பெற்றுள்ளனர்**

**11.76 இலட்சம் பேருக்கு பயிற்சி தரப்பட்டுள்ளது**
**3.86 இலட்சம் பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது**

**3.01 இலட்சம் பேருக்கு நுண்நிறுவனக்கடன் தரப்பட்டுள்ளது**
**4.09 இலட்சம் பேருக்கு மகளிர் சுய உதவிக்குழுக்கு கடன்கள்**
**ரூ.23,554. 6 கோடி மதிப்பிலான கடன்கள் தரப்பட்டுள்ளன**

**1,625 தங்குமிடங்களும், 991 பாதுகாவல் இடங்களும் செயல்படுகின்றன**

**2,212 நகரங்கள் தெரு வியாபாரிகள் பற்றிய கணக்கை எடுத்துள்ளன**
**8,03,457 தெரு வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் தரப்பட்டுள்ளன**

இமாச்சலப் பிரதேசத்தில் நஹன் நகரில் உள்ள நகர வாழ்வாதார மையமானது (CLC) பால்மீகி பஸ்தியில் உள்ள முறைசாரா துப்புரவுத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தது. இப்போது இவர்களுக்கு நஹன் மாநகராட்சி முறைசார்ந்த வேலை ஒப்பந்தங்களை விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுடனும் பாதுகாப்பு உபகரணங்களோடும் வழங்கி யுள்ளது.

**(ஆ) நகர்ப்புற உழைப்புச் சக்தியில் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல்**

நாட்டின் பொருளாதாரத்தையும் சமுதாயத்தையும் பீடித்திருக்கும் மற்றொரு பெரும் பிரச்சனை என்னவென்றால் பெண் உழைப்பாளிகள் பங்கேற்கும் சராசரி விகித அளவு குறைந்து வருவதே ஆகும். 1990ஆம் ஆண்டுக்கும் 2015ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் GDP (உள்நாட்டு மொத்த உற்பத்தி) ஒரு நபருக்கு 375 அமெரிக்க டாலரில் இருந்து 1572 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. ஆனால் நாட்டின் பெண் உழைப்பாளிகள் பங்கேற்பு விகிதம் (LFPR) 37 சதவிகிதத்தில் இருந்து 28 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. தனது உழைப்பாளர் சக்தியில் மீண்டும் சமநிலையை இந்தியா கொண்டுவர வேண்டும் என்றால், உள்நாட்டு மொத்த உற்பத்தியானது (GDP) 27 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஐஎம்எஃப், 2013).

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (NSS) தரவுகளின்படி வீட்டு வேலைகளில் பிரதானமாக ஈடுபட்டுள்ள 31 சதவிகித பெண்கள் ஏதோ ஒரு வேலையைச் செய்யவே விரும்புகிறார்கள். இவ்வாறு வேலை செய்ய விரும்பும் பெண்களுக்கு அவர்கள் விரும்பியவாறே வேலை கிடைத்தால் இந்தியாவில் பெண் உழைப்பாளர் பங்கேற்பு விகிதம் (FLFPR) 21 சதவிகிதப் புள்ளிகள் உயரும் (அதாவது 78 சதவிகிதமாக இருக்கும்).



நாடு முழுவதும் உள்ள 1,187 தொழில் பயிற்சி அளிப்பவர்கள் மற்றும் 6,136 பயிற்சி மையங்கள் அடங்கிய நெட்வொர்க் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் (DAY-NULM) கீழ் பயிற்சியிலும், பணியமர்த்துவதிலும் ஈடுபட்டுள்ளன. மிகவும் விரும்பப்படும் பிரபலமான தொழில் பிரிவுகள் எவை என்றால் ஐ.டி ஐ.டி.இ.எஸ், ஆயத்த ஆடைகள், அழகு மற்றும் நல்வாழ்வு, கட்டுமானம், சுகாதாரப்பராமரிப்பு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவையாகும்.

தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது (DAY -NULM) இந்த இடைவெளியை பெண்களை மகளிர் சுய உதவிக்குழுக்களாகச் சேர்ப்பதன் மூலம் நேரடியாக எதிர்கொள்கிறது. சுமார் 30 இலட்சம் பெண்கள் மகளிர் சுயஉதவிக்குழுக் களிலும், அவற்றின் கூட்டமைப்பு களிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் குடும்பத்திற்குள் இதுவரை தன்மேல் சுமத்தப்பட்ட பாரம்பரிய பாத்திரத்தைத் தாண்டி உலகைப் பார்க்க பெண்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன. மேலும் சமுதாயரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பாதுகாப்பு நிலையை அளிக்கின்றன. இந்த சமுதாய அடிப்படையிலான கட்டமைப்பு ஏற்படுத்தும் வேலைகள் முழுமை அடைந்த நிலையில் உள்ள மாநிலங்களில் கவனம் அடுத்த படிநிலை மீது குவிந்துள்ளது. அதாவது இங்கு கடன் அடிப்படையில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் மற்றும் சிறு வியாபார நிறுவனங்கள் அமைப்பதில் கவனம் செலுத்தப் படுகிறது.

இந்த இயக்கம் பெண்களுக்கு தொழில்திறன் பயிற்சி அளிப்பதற்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கும் முன்னுரிமை அளிப்பதில் பெருமளவு செயல்பட்டுள்ளது. தொழில் திறன் பயிற்சி என்ற அம்சத்தின் கீழ் பயிற்சி பெற்ற நபர்களில் 70 சதவிகிதம் பேர் பெண்கள் ஆவர். பயிற்சி தரப்பட வேண்டும் என்று கட்டாய ஒதுக்கீடு பெண்களைப் பொறுத்த அளவில் 30 சதவிகிதமே ஆகும்.

**(இ) நகர உள்ளாட்சி அமைப்புகளின் (ULB) திறமை மேம்பாட்டுப் பயிற்சி**

நகர உள்ளாட்சி அமைப்புகள் தான் (ULB) தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தை (DAY-NULM)

நடைமுறைப்படுத்தும் முக்கிய அலகுகள் ஆகும். நகர இயக்கங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான திறமைகளை மேம்படுத்துவதற்காக அமைச்சகம் ஒருங்கிணைந்த திறமை மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை (ICBP) தொடங்கியுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல், நகர ஏழைகள் பாதிப்புக்கு ஆளாகும் காரணிகள் குறித்து உணர்த்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

ஒருங்கிணைந்த திறமை மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் (ICBP) மூலம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகம் நகர உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளிக்கிறது. இந்தத் திட்டமானது மூன்று கட்டப் பயிற்சியைக் கொண்டதாகும். முதலாவது கட்டம் நகர இயக்கங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு மீது கவனம் செலுத்தும் ஒருங்கிணைந்த புத்தாக்க பயிற்சி. இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டம் என்பவை ஒவ்வொரு இயக்கம் பற்றிய குறிப்பிட்ட தொழில்நுட்ப மாதிரிகள் கொண்டவை ஆகும். மற்றொரு நகரத்தில் உள்ள சிறந்த நடைமுறையைப் பார்த்துக் கற்றுக் கொள்வதற்கான பயணமும் இதில் உள்ளடங்கும்.

**முன்னுள்ள பாதை**

பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் நகரம் (PMAY-U), தூய்மை இந்தியா இயக்கம் நகரம் (SBM-U), புதுப்பித்தல் மற்றும் நகர உருமாற்றத்துக்கான அடல் இயக்கம் (AMRUT), பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் பெரிதாக்குதல் திட்டம் (HRIDAY), பொலிவுறு நகர இயக்கம் (SCM) போன்ற அமைச்சகத்தின் பல்வேறு இயக்கங்கள் நகரப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்துள்ளன. நகரத்தில் பயணம் செய்வது என்பது பொதுப் போக்குவரத்துத்திட்டங்கள் மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த நகர உள்கட்டமைப்பு வசதியை உருவாக்கிப் பராமரிப்பது என்பது எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. இதன் மூலம் தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் (DAY-NULM) முயற்சிகள் முழுமை அடைகின்றன.



**கம்ப்யூட்டர் பயன்பாடுகள் குறித்த பயிற்சி, ராய்ப்பூர், சட்டீஸ்கர்**

பயிற்சிக்கான தலைமை இயக்குனரின் கீழ் **(DGT)** மாடுலர் எம்ப்ளாய்பில் திறன்கள் **(MES)** அடிப்படையில் பயிற்சி வகுப்புகளையும் தொழில்திறன் பயிற்சி மற்றும் வேலைக்கு அமர்த்தல் **(ESTP)** பிரிவு வழங்குகிறது. இந்தப் பயிற்சி வகுப்புகளை தேசிய தொழில் பயிற்சி கவுன்சில் **(NCVT)** அங்கீகரித்து உள்ளது. இத்தகைய பயிற்சி வகுப்புகள் தற்போது தேசிய திறன் தகுதி சட்டகத்தோடு **(NSQF)** ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.


தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (DAY-NULM), தூய்மை இந்தியா இயக்கம் நகரம் (SBM-U) இரண்டும் ஒருங்கிணைவதற்கான வழிமுறைகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. துப்புரவு மதிப்பு கூட்டுத்தொடரோடு இணையாக கௌரவமான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதுவே இந்த ஒருங்கிணைப்பின் நோக்கம் ஆகும். மற்ற நகர இயக்கங்கள் வழியாக தரமான வாழ்வாதாரங்களை உருவாக்குவதை மேம்படுத்துவதில் இதேவிதமான கொள்கை இடையீடுகள் கவனம் செலுத்துகின்றன. மேலும் தேசிய சுகாதார இயக்கத்துடன் (NHM) ஒருங்கிணைக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பம் மீண்டும் வறுமையின் பிடியில் சிக்குவதற்கு மிகவும் முக்கியமான காரணமாக இருப்பது மருத்துவம் தொடர்பான செலவே ஆகும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகத்தான் இந்த இணைப்பானது முன்வைக்கப்படுகிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகம் (MoHUA) கட்டுமானப் பிரிவில் உள்ள தொழிலாளர்களுக்கு சான்றிதழ் அளிப்பதை ஊக்குவிக்கிறது. வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பொதுத்துறை வேலைகளின் தரத்தை உயர்த்துதல் என்ற இரட்டை நோக்கத்துடன் இந்தச் சான்றளிப்பு பணியானது மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திசையில் மத்திய

பொதுப்பணித் துறை (CPWD) முதல் அடியை எடுத்து வைத்துள்ளது. தனது செயல் திட்டங்களில் வேலை செய்வதற்கு 20 சதவிகிதம் அளவிற்கு சான்றளிக்கப்பட்ட தொழிலாளர்களை இந்தத் துறையானது நியமித்துள்ளது.

நகர்ப்புற இந்தியர்கள் செலவழிக்கக்கூடிய வருமானத்தின் அளவு அதிகரித்ததால் அவர்களின் வாழ்க்கைத்தரமும் மேம்பட்டுள்ளது. இது இந்தியப் பொருளாதாரத்தின் நீடித்த வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்தியுள்ளது. அதிக வேலை வாய்ப்புகளைக் கொண்டுள்ள புதிய தொழில் பிரிவுகள் உருவாகி வருகின்றன. இவர்த்தக விநியோகம், தேவைக்கு ஏற்ப டாக்சி சேவைகள் தருதல், ஃபிட்னெஸ் மற்றும் வெல்னெஸ், மூத்த குடிமக்கள் பராமரிப்பு, வீட்டுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல் முதலானவை இத்தகைய புதிய தொழில் பிரிவுகள் ஆகும். இவ்வாறு உருவாகி வரும் புதிய துறைகளோடு தொடர்புடைய பயிற்சி வகுப்புகளை தீனதயாள் அந்த்யோதயா திட்டம் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (DAY-NULM) ஊக்கப் படுத்துகிறது. மேலும் இந்த இயக்கத்தின் கீழ் தொழில்திறன் பயிற்சி பெற்ற நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை அதிகரிக்கும் வகையில் தனியார்துறையில் வேலை அளிப் பவர்களுடன் கூட்டுசேர்வதற்கான வாய்ப்புகளும் பரிசீலிக்கப் படுகின்றன.

தொழில்திறன் பெற்ற மனித வளத்துக்கான அத்தகைய தேவைகள் நாட்டுக்கு வெளியேயும் எழுகின்றன. இந்தச் சர்வதேச தேவையை நிறைவு செய்யும் வகையில் தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக்கழகமானது (NSDC) பர்வாசி கௌஷல் விகாஸ் திட்டத்தையும் (PKVY) இந்தியா சர்வதேச தொழில் மையங்களையும் தொடங்கியுள்ளது. வெளியுறவு அமைச்சகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் வேலை தேட விரும்பும் நபர்களுக்கு பயிற்சியும் அவர்களை வேலையில் சேர்ப்பதையும் இந்த மையங்கள் செய்கின்றன. சர்வதேச திறன் தேவை மீதான திறன் இடைவெளி ஆய்வை மிக விரிவாக தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) நடத்தி வருகிறது. தொழில் திறன்களுக்கான தேவை மற்றும் விநியோகம் தொடர்பான இந்தியாவில் இப்பொழுது உள்ள பொதுவான மக்கள் தொகையோடு ஒப்பிட வேலை செய்யக் கூடிய வயதுப் பிரிவினரின் தொகை அதிக அளவில் இருக்கின்ற நிலைமையை மேலே குறிப்பிட்ட சர்வதேச இடைவெளியை நிறைவு செய்வதற்காக சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.



**பர்வாசி கௌஷல் விகாஸ் திட்டம் (PKVY)**

- குறுகிய காலப் பயிற்சி திட்டமானது (2 வாரங்கள் முதல் ஒரு மாதம் வரை) வேலை பார்க்க விரும்புபவர்கள் தன்னம்பிக்கையுடன் பல்வேறு நாடுகளில் சவாலான வேலைகளைச் செய்வதற்காக முழுமையாக அவர்களைத் தயார் செய்கிறது. அதே போன்று அயல்நாடுகளின் தொழில் திறன் தேவைகளை நிறைவு செய்யவும் அவர்களைத் தயார்படுத்துகிறது.
- அலுவலக வேலையில் இருப்போர் தொழில்திறன் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பும் அயல்நாட்டு மொழியில் தகவல்தொடர்பு மேற்கொள்ளும் திறனும் உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் குறிப்பிட்ட தொழில்துறையில் திறன் பயிற்சியும் பெற வாய்ப்புள்ளவர்கள். இந்தத் திட்டம் அவர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

நகர்ப்புற இந்தியர்கள் செலவழிக்கக் கூடிய வருமானத்தின் அளவு அதிகரித்ததால் அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது. இது இந்தியப் பொருளாதாரத்தின் நீடித்த வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது. அதிக வேலை வாய்ப்புகளைக் கொண்டுள்ள புதிய தொழில் பிரிவுகள் உருவாகி வருகின்றன. இவர்த்தக விநியோகம், தேவைக்கு ஏற்ப டாக்சி சேவைகள் தருதல், ஃபிட்னெஸ் மற்றும் வெல்னெஸ், மூத்த குடிமக்கள் பராமரிப்பு, வீடு அடிப்படையிலான சேவைகள் முதலானவை இத்தகைய புதிய தொழில் பிரிவுகள் ஆகும்.

- **துர்கா சங்கர் மிஸ்ரா**, இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகத்தின் செயலாளர். ●

# தரமான வேலை வாய்ப்பை உருவாக்குதல் வேலை தேடுபவர் நடையை விரைவுபடுத்துதல்

- ஹெச்.எல்.சமாரியா



வேலை வாய்ப்பு உருவாக்கலின் வேகத்தை மேலும் முடுக்கிவிட இந்திய அரசு பொறுப்புணர்வுடன் இருக்கிறது. அனைவருக்கும் அத்தகைய வேலை வாய்ப்பை வழங்கிட இந்திய அரசு பல்முனை அணுகுமுறையைக் கடைபிடிக்கிறது. சமுதாயத்தில் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் மேல் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை அடைவதற்கு தரமான வேலைவாய்ப்பை வழங்குதல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

சம்பளம், வேலை மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றின் அடிப்படையில் தனி நபரின் நல்வாழ்வை மேம்படுத்துதல் என்பது வேலை வாய்ப்பின் நேரடி விளைவு ஆகும். அதுமட்டும் அல்லாமல் வேலை வாய்ப்பானது வறுமை ஒழிப்பு மற்றும் சமூகத்தோடு ஒன்றிணைதல் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு சமூகக் குறிக்கோள்களை நிறைவு செய்வதாகவும் உள்ளது. வேலை வாய்ப்பு உருவாக்கலின் வேகத்தை மேலும் முடுக்கிவிட இந்திய அரசு பொறுப்புணர்வுடன் இருக்கிறது. அனைவருக்கும் அத்தகைய வேலை வாய்ப்பை வழங்கிட இந்திய அரசு பல்முனை அணுகுமுறையைக் கடை பிடிக்கிறது. சமுதாயத்தில் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் மேல் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் (MoLE) வேலை வாய்ப்பு தொடர்பான சேவைகளை வழங்குவதிலும் வேலை செய்பவரின் நலன்களையும், நல்வாழ்வையும் காப்பதிலும் முக்கிய பங்கு ஆற்றுகிறது. உழைப்பாளர்களின் சமூகப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவுசெய்தல், தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு நிலைமை குறித்த விவரங்களைத் திரட்டித்தொகுத்தல், வேலைவாய்ப்பு தொடர்பான சேவைகளை வழங்குதல். மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் வேலையில் சேர்வதற்கு தேவையான உதவிகளைச் செய்தல் போன்ற முக்கிய கட்டாயக் கடமைகளை இந்த அமைச்சகம் செய்கிறது.

இளைஞர்கள் குழுவிற்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதை மேம்படுத்தும் வகையில் இந்தியாவில் பொது வேலைவாய்ப்பு சேவையானது தேசிய பணிவாய்ப்பு சேவை (NCS) என்ற தளத்தால் மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு பொதுத்தளம் உருவாக்கப் பட்டுள்ளது. வேலை தேடுபவர்கள், வேலை அளிப்பவர்கள் மற்றும் பயிற்சி அளிப்பவர்கள் அனைவரும் இந்தப் பொதுத்தளத்தில் ஒன்றாகச் சேர்கிறார்கள்.

இடைவெளிகளில் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்துதல் போன்ற பல்வேறுபட்ட வேலை வாய்ப்பு தொடர்பான சேவைகளையும் வழங்கி வருகிறது.

இதுவரை 107 மாதிரி பணிவாய்ப்பு மையங்கள் (MCCs) நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் மேலும் அத்தகைய நூறு பணி வாய்ப்பு மையங்களை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாதிரி பணி வாய்ப்பு மையங்கள் (MCC) இளம் தொழில் நிபுணர்கள் மூலம் தொழில் நுட்பத்தையும் ஆலோசனையையும் இணைக்கின்றன. இதன் மூலம் வேலை தேடுபவர்கள் தங்களின் திறமைக்கு, தகுதிக்கு மற்றும் திருப்திக்கு மிகச் சிறப்பாகப் பொருந்தும் வகையில் வேலையைத் தேர்ந்தெடுக்க உதவிகள் செய்யப்படும். வேலை வேண்டுவோரின் சுயவிவரக் குறிப்பும் வேலை தருபவரின் சுயவிவரக் குறிப்பையும் அவ்வப்போது புதுப்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

- ஷ்ரம் சுவிதா போர்ட்டலை மாண்புமிகு பிரதம மந்திரி 16 அக்டோபர் 2014இல் தொடங்கி வைத்தார். இது தொழிலாளர் சட்டங்களோடு இணக்கமாக நடக்க உதவுகின்ற ஒற்றை நிறுத்த மையமாக விளங்குகிறது.
- இந்த போர்ட்டலை <https://shramsuvidha.gov.in> என்ற வலைதளத்தின் மூலம் அணுகலாம். ஒருங்கிணைந்த

## வெற்றிக் கதை

திரு.ராகேஷ் குமார் சாஹு: வேலை தேடும் மாற்றுத்திறனாளி ஒடிசாவின் குர்தா கபுதியின் காடிகியாவைச் சேர்ந்த 28 வயது ஆண் திரு.ராகேஷ் குமார் சாஹு. பேச்சு மற்றும் கேட்கும் குறைபாடு உடையவர் ஆவார். மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய கேரியர் சேவை மையத்தில் (NCSCDA), தானாகவே அவர் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டார். அவருக்கு கதையாடல் பாணியிலான சிகிச்சை சார்ந்த ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்குப்பின் அவர் ‘‘கணிப்பொறி அடிப்படைகளுடன் கூடிய டாலி‘‘ என்ற மூன்றரை மாதப் பயிற்சியில் சேர விரும்பினார். இந்த வகுப்பு 23 பிப்ரவரி 2016இல் முடிவடையும். இந்தப் பயிற்சி வகுப்பை ஒடிசா அரசாங்கத்தின் சமூகப்பாதுகாப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான துறையும் (SSEPD), புவனேஸ்வரத்தில உள்ள என்.சி.எஸ்.சி.டி.ஏயில் (NCSCDA), சேர்ந்து நடத்தின. இதற்கான நிதி உதவியை ஒடிசா திறன் மேம்பாட்டு ஆணையம் (OSDA). வழங்கியது.

நேர்முகத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 28 நபர்களில் திரு. ராகேஷ் குமார் சாஹுவும் ஒருவர் ஆவார். இவர் நேர்முகத்தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 75 சதவிகித பேச்சு மற்றும் கேட்டல் குறைபாடுகள் இருந்தாலும்கூட, அனைவருக்கும் திருப்தி ஏற்படும் வகையில் அவர் தன்னம்பிக்கையுடன் தனது பணியைச் செய்தார். அண்மையில் அவரோடு உரையாடிய போது இதனை அவர் குறிப்பிட்டார்.

முறையில் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல் மற்றும் தாக்கல் செய்யும் சேவைகள் போன்ற பல்வேறு சேவைகளை தொழிலாளர் வைப்பு நிதிக் கழகம் (EPFO), தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் (ESIC) மற்றும் நகர வாழ்வாதார மையங்கள் CLC(C) போன்ற நிறுவனங்கள் வழங்குகின்றன.

- சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகள் சட்டத்தின் 3 விதிகளின் கீழ் நிறுவனங்கள் வருடாந்திரக் கோப்புகளைத் தாக்கல் செய்யலாம்.
- தொழிலாளர் நல அமலாக்க ஏஜென்சிகள் ஆபத்துக் காரணி குறித்த பரிசோதனையை வெளிப்படையாக மேற்கொள்ள இந்த போர்ட்டல் உதவுகின்றது.




### தேசிய பணி வாய்ப்பு சேவை (NCs) தளம்

- இது ஒரு தேசிய பணி வாய்ப்பு சேவை தளம் ஆகும்.
- வேலை தேடுபவர்களுக்கு பணி வய்ப்பு தொடர்பான சேவை மற்றும் ஆலோசனை வழங்குதல்; அழைப்பு மையங்கள்; பணி வாய்ப்பு குறித்த தகவல் தொகுப்பு; திறமை மேம்பாடு மற்றும் இதர ஊக்குவிப்பு சேவைகள் உள்ளன.
- இவைகளைத் தவிர தேசிய பணி வாய்ப்பு சேவையானது (NCS) பொருத்தமான வேலை, வேலை வாய்ப்பு அலுவலகங்கைள இலிங்க் செய்தல், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்துதல் போன்ற பல்வேறுபட்ட வேலை வாய்ப்பு தொடர்பான சேவைகளையும் வழங்கி வருகிறது.
- 2,200 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. தேசிய பணி வாய்ப்பு சேவை (NCs) போர்ட்டல் மூலமாக 30.2 இலட்சம் வேலைகள் வழங்கப்பட உள்ளன.
- இளம் தொழில் நிபுணர்கள் மூலம் தொழில் நுட்பத்தையும் ஆலோசனையையும் இணைக்கின்றன. இதன் மூலம் வேலை தேடுபவர்கள் தங்களின் திறமைக்கு, தகுதிக்கு மற்றும் திருப்திக்கு மிகச் சிறப்பாகப் பொருந்தும் வேலையைத் தேர்ந்தெடுக்க உதவிகள் செய்யப்படும்.
- 107 மாதிரி கேரியர் மையங்கள் (MCCs) நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. எதிர்வரும் காலத்தில் மேலும் நூறு மையங்களை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.
- தேசிய பணி வாய்ப்பு சேவை (NCs) போர்ட்டல் பெரிய

## ஷ்ரம் சுவிதா போர்ட்டல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது தனது கட்டுப்பாட்டின் கீழ் முதன்மைத் தொழிலாளர் ஆணையர் அலுவலகம் (மத்தியப் பிரிவு), சுரங்கப் பாதுகாப்புக்கான தலைமை இயக்குநர் அலுவலகம், ஊழியர் வருங்கால வைப்பு நிதிக் கழகம், ஊழியர் அரசு காப்பீட்டுக் கழகம் ஆகிய நான்கு மிகப் பெரும் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் ஒருங்கிணைந்த முழுமையான இணைய போர்ட்டலான ''ஷ்ரம் சுவிதா'' என்பதை உருவாக்கியுள்ளது.

தனியார் வேலை போர்ட்டல்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் உள் இணைப்பு வசதி பெற்று உள்ளன.

- தேசிய பணி வாய்ப்பு சேவை (NCs) போர்ட்டல் அரசாங்கத்தின் அனைத்து போர்ட்டல்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் எம்ப்ளாய் மெண்ட் நியூஸ் போர்ட்டலுடனும் இணைக்கப்பட்டுள்ளது.
- வேலை வாய்ப்புக்கான தலைமை இயக்குநர் அலுவலகம் (DGE) 21 தேசிய பணி வாய்ப்பு சேவை மையங்களை மாற்றுத் திறனாளிகளுக்காக (NCSC-DA) நடத்தி வருகிறது. விவரங்களை https://labour.gpv.in /vrc என்ற இணையதளத்தில் காணலாம்.
- வேலை வாய்ப்புக்கான தலைமை இயக்குநர் அலுவலகம் (DGE) 25 தேசிய பணி வாய்ப்பு சேவை மையங்களை எஸ்சி மற்றும் எஸ்.டி பிரிவினருக்காக (NCSC-SC/ST) நடத்தி வருகிறது. இந்த மையங்களில் வேலை வாய்ப்புத் தொடர்பான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப் படுகின்றன. விவரங்களை https://labour.gpv.in/cgc என்ற இணையதளத்தில் காணலாம்.

- இந்தப் போர்ட்டல் ஆரம்பித்ததில் இருந்து ஜுன் 2018 வரை தொழிலாளர் நல அமலாக்க ஏஜென்சிகள் மொத்தமாக 3.75 இலட்சம் பரிசோதனைகளை நடத்தியுள்ளன.
- ஜுன் 2018 வரை 30.2 இலட்சம் புதிய வேலைகளை உருவாக்க முடிந்துள்ளது.

வேலைவாய்ப்புக்கான தலைமை இயக்குநர் (DGE) அலுவலகமானது பயிற்சி அளித்தல், தொழில் கல்விக்கான ஆலோசனை மற்றும் பயிற்றுவித்தல் மூலம் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின (SC/ST) வேலை தேடும் நபர்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. தற்போது நடப்பில் இருக்கின்ற தேசிய பணி வாய்ப்பு தொடர்பான சேவை மையங்களில் (NCSC) மட்டுமின்றி அவர்கள் தொழில் பயிற்சி PMRPY திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகை (குறிப்பிட்ட கால கட்டத்தில் மற்றும் ஒட்டுமொத்த கால கட்டத்தில்)

எஸ்.சி/எஸ்.டியினருக்குப் புதிய பயிற்சி வகுப்புகளை தொடங்க திட்டமிட்டு உள்ளது. அதே போன்று இதுவரை இந்த மையங்கள் இல்லாத மாநிலங்களில் புதியதாக தேசிய பணி வாய்ப்பு தொடர்பான சேவை மையங்கள் (NCSC) தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. மிக அண்மைக் காலத்தில் வேலை வாய்ப்புக்கான தலைமை இயக்குநரால் எஸ்சி/எஸ்.டிக்களுக்காக 25 புதிய தேசிய பணி வாய்ப்பு தொடர்பான சேவை மையங்கள் (NCSC) தொடங்கப்பட்டு உள்ளன. இத்தகைய மையங்கள் செயல்படும் முறையை புத்தாக்கம் செய்வதற்காக பாடத் திட்டத்தில் சிறப்பு கற்பித்தல் திட்டங்கள், வெளியில் இருந்து நிபுணர்களை வரவழைத்து கணிப்பொறிப் பயிற்சி அளித்தல் ஆகியன சேர்க்கப்பட்டு உள்ளன.

தொழிற்சாலைகளின் மாறி வரும் தேவைகளை எதிர்கொண்டு பூர்த்தி செய்வதற்காகவும் பொதுவில் பொருளாதாரத்துக்காகவும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தொழிலாளர் நலச் சட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றது. ஷ்ரம் சுவிதா போர்ட்டலானது தொழில் நிறுவனங்களை

தொழிலாளர் - வேலை வாய்ப்பு அமைச்சகம் உழைப்பாளர் சக்தியில் பெண்கள் ஆக்கப்பூர்வமாக பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. பல துறைகளில் உள்ள நல்வாழ்வுத் திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. சுயமாகத் தன்னிறைவு அடைதல் மற்றும் பணி வாய்ப்பு குறித்து அக்கறை கொள்ளுதல் என்ற கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தும் திட்டங்களுக்கு முதன்மை கவனம் தரப்படுகிறது.

வேலை வாய்ப்பு - பயிற்சிக்கான தலைமை இயக்குனர் (DGET) அலுவலகத்தின் கீழ் நடத்தப்படும் பெண்களுக்கான பயிற்சிகள் பெண்களை தொழிலாளர்கள், கண்காணிப் பாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் என்று பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடத்துமாறு கற்றுத் தருகிறது. பெண்களுக்கான தொழில் திறன் பயிற்சியானது பல்வேறு சமூகப் பொருளாதார அடுக்குகளில் உள்ள பெண்களுக்கும் பல்வேறு வயதுப் பிரிவில் உள்ள பெண்களுக்கும் கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்த தூண்டுதலாக உள்ளது.

• பெண்களுக்கான தொழில் கல்வி பயிற்சித் திட்டங்கள் பல பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளன:


அ) தொழில் உலகத்தில் சம்பள வேலை ஆ) பயிற்றுநர்கள்


இ) சுய வேலை வாய்ப்பை அதிகரித்தல்

• இதைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தவும் தொடக்கத்தில் இதனை அவர்கள் மேற்கொள்ள அவர்களுக்கு உத்வேகம் தருவதற்காகவும் இந்தத் திட்டம் இவற்றை வழங்குகிறது:

அ) கைவினைக் கலைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் (CTS) தொழிலகத் திறன்கள் பயிற்சி ஆ) கைவினைத் தொழில் பயிற்றுநர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் (CITS) பயிற்றுநர் திறன்கள் பயிற்சி இ) தேவைக்கு ஏற்ற குறுகிய காலப் பயிற்சிகள் ஈ) ஐ.டி.ஐ பயிற்றுநகர்களுக்குப் பயிற்சி தருவதற்கான சிறப்புத் திட்டங்கள் உ) தொழிலகத் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள்.

**குறிப்பிட்ட காலகட்டம் ஒட்டுமொத்த காலகட்டம்**




மேலே உள்ள வரைபடம் PMRPY திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து ஜூன் 2018 வரை உள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது. அரசாங்கம் வழங்கிய தொகையின் அடிப்படையில் இந்த வளர்ச்சி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2016 மார்ச் 2017 வரையிலான காலகட்டத்தில் விநியோகிக்கப்பட்ட தொகை ரூ.2.76 கோடியானது ஜூன் 2018 முடிவு வரை ரூ.1,145.34 கோடியாக அதிகரித்துள்ளது.

### திரு.மூன் கச்சாரி: கௌரவமான வேலையைத் தேடுதல்

அசாமின் காம்ரூப்பில் உள்ள மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த திரு.மூன். கச்சாரி பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் ஆவார். தனது குடும்பத்தைப் பராமரிக்க உதவும் வகையில் அவர் ஒரு கௌரவமான வேலை வேண்டும் என விரும்பினார். அதனால் அவர் மே 2016இல் தேசிய பணி வாய்ப்பு சேவை மையத்தின் (NCSC) எஸ்.சி /எஸ்.டி சிறப்பு பயிற்சி வகுப்புத் திட்டத்தில் சேர்ந்தார். இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கேற்றதால் அவரால் பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள முடிந்தது. எஸ்.சி / எஸ்.டிக்காக தேசிய பணி வாய்ப்பு சேவை மையம் (NCSC) ஏற்பாடு செய்து இருந்த வேலை வாய்ப்பு முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். கௌகாத்தியில் மே 201இல் எஸ்.சி / எஸ்.டிக்காக தேசிய பணி வாய்ப்பு சேவை மையம் (NCSC) ஏற்பாடு செய்து இருந்த வேலை வாய்ப்பு முகாமில் அவர் ஆக்சிஸ் வங்கியில் மார்க்கெட்டிங் எக்சிகியூட்டிவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது இவரின் முதல் வெற்றியாகும். பின்பு அவர் போட்டித் தேர்வை எழுதி வெற்றி பெற்று அசாமில் தியாம் ஹசாவோ மாநிலத்தில் மாவட்ட மற்றும் முதன்மை நீதிபதி அலுவலகத்தில் கீழ்நிலை உதவியாளராக (LDA) தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பணியில் அவர் 27 ஜூலை 2017இல் சேர்ந்தார்.

அறிவியல்பூர்வமாகவும் வெளிப்படையாகவும் ஆய்வு செய்ய உதவுகிறது. இந்தப் போர்ட்டல் தொழிலாளர் வைப்பு நிதிக் கழகம் (EPFO) மற்றும் தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் (ESIC) ஆகியவற்றின் கீழ் பொதுவான பதிவு செய்தலை முன் வைக்கிறது. மேலும் மாதாந்திர மின்னணு வகை ரசீதை (ECR) சமர்ப்பிக்கவும் இந்தப் போர்ட்டல் உதவுகிறது. 9 மத்திய தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் பராமரிக்க வேண்டிய 56 பதிவேடுகள்/படிவங்களை அமைச்சகம் குறைத்து உள்ளது. இப்போது 5 பொதுவான பதிவேடுகள் / படிவங்களைப் பராமரித்தால் போதும். இதனால் நேரமும் செலவும் மிச்சமாகிறது. ஷ்ரம் சுவிதா போர்ட்டல் வெளிப்படையான மற்றும் ஆய்வுத் திட்டங்களை வழங்குகிறது. மேலும் 8 தொழிலாளர் சட்டங்களுக்காக ஒருங்கிணைந்த வருடாந்திர ஒற்றை ரிடர்ன் படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் சட்டத்துக்கு இணக்கமாக நடப்பதை எளிதாக்கியுள்ளது. இதன் விளைவாக நாட்டில் வர்த்தகம் மேற்கொள்வதும் எளிதாகிறது. இதனை அண்மையில் வெளியிடப்பட்ட உலக வங்கி அறிக்கையான "வர்த்தகம் மேற்கொள்ளுதல் 2018: வேலைகளை உருவாக்குவதற்கான சீர்திருத்தம்" என்பது வெளிப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கையில் இந்தியாவின் தரவரிசை 130இல் இருந்து 100க்கு முன்னேறி உள்ளது. மேலும் 2017 18இல் வர்த்தகம் செய்வதில் மேம்பாடு அடைந்த முதல் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்று என தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிணைத்து மற்றும் பாகுபடுத்தி நான்கு தொழிலாளர் நலச் சட்டங்களாக மாற்ற முயற்சி எடுத்து வருகிறது. அமைச்சகம் முன் வைக்கும நான்கு சட்டங்கள் (Codes) எவை என்றால் கூலிகள் சட்டம், சமூகப் பாதுகாப்புக்கான சட்டங்கள், தொழிலக உறவுகளுக்கான சட்டம், தொழிலிட பாதுகாப்பு, சுகாதாரம் - பணிபுரியும் நிலைமைகள் சட்டம் என்பனவாகும். கூலிகள் சட்டமானது ஆகஸ்ட் 10, 2017இல் மக்களவையில் அறிமுகம் ஆனது. காலத்திற்கு ஏற்ற வகையில் தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதில் நெகிழ்ச்சித்தன்மை வழங்கும் வகையிலும் ஒரு வர்த்தக நிறுவனம் ஏற்றுமதி இலக்கு உட்பட தனது இலக்குத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள உதவும் வகையிலும் குறிப்பிட்ட காலத்துக்கான வேலை



வேலைகளில் இருந்து பணி வாய்ப்புகளுக்கு மாறுவதற்கான தொழிற்பயிற்சி

பொறுப்புணர்வு சார்ந்த அமலாக்க நடைமுறையைத் தருகிறது. இது வெளிப்படையான தொழிலாளர்

அமைச்சகமானது தற்போது நடப்பில் உள்ள பல்வேறு சட்டங்களை எளிமைப்படுத்தி, வாய்ப்பு என்ற வகைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சட்டமானது

### பிரதம மந்திரி ரோஜ்கர் புரோட்சஹான் திட்டம்



1.4.2018 முதல் தகுதி வாய்ந்த புதிய ஊழியர்கள் அனைவருக்கும் ஊழியர் ஓய்வூதியத் திட்டம் (EPS) மற்றும் ஊழியர் வைப்புத் தொகையின் (EPF) அனைத்துப் பிரிவுகளிலும் வேலை அளிப்பவரின் பங்களிப்பான 12 சதவிகிதத் தொகையை அரசாங்கமே செலுத்துகிறது.

இந்த முறையானது அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்குத் தொடரும். அனைத்துப் புதிய ஊழியர்களும் யுனிவர்சல் கணக்கு எண் (UAN) பெற்று அதனை ஆதார் எண்ணுடன் இணைத்து இருக்க வேண்டும்.

ஜுன் 2018 வரை 53.72 இலட்சம் புதிய ஊழியர்கள் தொழிலாளர் வைப்பு நிதிக் கழகத்தில் (EPFO) பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இது வரை ரூ.1145.34 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பரிதான் ரோஜ்கர் புரோட்சஹான் திட்டத்தின் (PMRPY) கீழ் மேலும் ரூ4500 கோடி தேவைப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஆன்லைன் பதிவு மற்றும் ஆதார் மூலம் இதனை எளிதாகச் செயல்படுத்தலாம். விவரங்களுக்கு www.pmrpy.gov.in <http://www.pmrpy.gov.in/> என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

முறையான ஊழியருக்குக் கிடைப்பது போன்றே, முழு நேர ஊழியராக இல்லாமல் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் நியமிக்கப்படும் ஊழியருக்கும் சமூகப் பாதுகாப்பு பலன்கள், சம்பளம், பணி செய்யும் நிலைமை ஆகியன இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்கிறது.

2016-17ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி பரிதான் ரோஜ்கர் புரோட்சஹான் திட்டமும் (PMRPY) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக தொழிற்சாலைக்கு ஊக்கம் அளிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் புதிய ஊழியர்களுக்கு அவர்களது ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தில் வேலை அளிப்பவர் செலுத்த வேண்டிய 8.3 சதவிகிதப் பங்களிப்பை அரசாங்கமே செலுத்துகிறது. இந்தப் புதிய ஊழியர்களுக்கு யுனிவர்சல் கணக்கு எண் (UAN) இருக்க வேண்டும். மேலும் பதிவு செய்த காலத்தில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு மாத ஊதியமானது ரூ.15,000க்குள் இருக்க வேண்டும். வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் / முறைசாரா தொழிலாளர்களைப் பெரும் அளவில் முறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகத்தான் அரசு இந்தப் பங்கைச் செலுத்துகிறது. பொருளாதார ஆய்வறிக்கை 2017-18ன்படி இந்தியாவில் முறைசார் வேலை வாய்ப்பு என்பது விவசாயம் சாராத தொழிலாளர்களில் 31 சதவிகிதத்துக்கு சமம் ஆகும். தற்போது நம்பிக்கை கொண்டிருப்பது என்பதைவிட ''முறையான சம்பளப் பட்டியல்'' என்பதே சிறந்தது என்ற கருத்தையே இது தெளிவாகக் குறிக்கிறது.

ஜவுளித் தொழிலில் (மேட்அப் மற்றும் ஆயத்த ஆடைப் பிரிவு) ஊக்கப்படுத்துவதற்காக ஊழியர் ஓய்வூதியத் திட்டம் (EPS) மற்றும் ஊழியர் வைப்புத் தொகை (EPF) என இரண்டிலுமே வேலை அளிப்பவர் செலுத்த வேண்டிய முழுப் பங்களிப்பையும் (12 சதவிகிதம் அல்லது அனுமதிக்கப்பட்ட தொகை வரை) அரசே செலுத்துகிறது. இதை பிரதம மந்திரி பரிதான் ரோஜ்கர் புரோட்சஹான் திட்டத்தின் (PMRPY) கீழ் அரசு செலுத்துகிறது. மேலும் இந்தத் திட்டத்தின் அதிக முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு 2018-19ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ஊழியர் ஓய்வூதியத் திட்டம் (EPS) மற்றும் ஊழியர் வைப்புத் தொகை (EPF) .இரண்டிலும் வேலை அளிப்பவர் செலுத்த வேண்டிய பங்களிப்பு முழுவதையும் 12 சதவிகிதம் அல்லது அனுமதிக்கப்பட்ட தொகை வரை 01.04.2018 முதல் அனைத்துத் தொழில் பிரிவுகள் மற்றும் தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் அரசே செலுத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதிய ஊழியர்கள் பதிவு செய்த நாளில் இருந்து அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்தத் தொகையானது செலுத்தப்படும். தற்போது வேலையில் இருக்கும் ஊழியர்களுக்கும் மீதி உள்ள அவர்களது 3 ஆண்டுகளுக்கும் இந்தத் தொகையானது அரசால் செலுத்தப்படும்.

அரசின் அணுகுமுறையானது வேலை வாய்ப்பின் எண்ணிக்கை மற்றும் தரம் இரண்டுக்கும் இடையில் விரும்பக் கூடிய சமநிலையைப் பேணுவதாக உள்ளது. அப்போதுதான் நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஐ (SDG) அடைவதில் வேலை வாய்ப்பு என்பது முக்கியமான ஊக்கக் காரணியாக இருக்கும்.

- **ஹெச்.எல்.சமாரியா,** இந்திய அரசின் தொழிலாளர் - வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் செயலாளர். ●

# கல்வி, வேலைவாய்ப்பு, வேலைத்திறன்

- மனிஷ் சபர்வால்

இங்கிலாந்து நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி அளவான 2.6 ட்ரில்லியன் டாலரை, இந்தியா வெகு விரைவில் 2018ஆம் ஆண்டிலேயே விஞ்சிவிடும். இது கொண்டாடப்படவேண்டிய திருப்பமா? அல்லது 6 கோடியே 60 இலட்சம் மக்கள்தொகை கொண்டுள்ள இங்கிலாந்தின் சாதனையை, 120 கோடி மக்கள் தொகை கொண்டிருக்கும் இந்தியா எட்டிப்பிடிப்பதற்கு 71 ஆண்டு காலம் ஆகியிருப்பது எதனால் என்று கேள்வி கேட்க வேண்டிய நிலைமையா?

"இந்தப் பிரபஞ்சம் அணுக்களால் மட்டும் ஆனதல்ல. கதைகளாலும் ஆனது." என்று மாயா அங்கேலு என்ற கவிஞர் சொன்னார். 1947 முதல் நமக்கு நாமே சொல்லிக்கொண்டிருக்கும் பொருளாதாரக் குறும்புக்கதைகளின் விளைவாகவே நம்முடைய உற்பத்தி பரிதாபகரமான நிலையில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். நம்முடைய அரசியல் வரலாறு ஆச்சரியப்படத்தக்க வகையில் சொல்லப்பட்டுவருகிறது. ஆனால், நமது பொருளாதார விருத்தாந்தம் ஏழ்மை நிலை பற்றி பேசியதே தவிர, உற்பத்தியின் பாதக நிலை பற்றிப் பேசவில்லை. நிறுவன அமைப்புகளை மதிக்காமல், போட்டிகளை நாசப்படுத்திவிட்டு பொதுத்துறை அமைப்புகளும், ஏகபோக தனியார்துறை அமைப்புகளுமே சிறந்தவை என்ற சிந்தனை உடையவர்களாக நாம் இருந்திருக்கிறோம். 1955ஆம் ஆண்டு ஆவடி தீர்மானம் மோசமான தொலைபேசி வசதியை நமக்குக் கொண்டு வந்தது. பொதுத்துறையைப் பெருக்கியது. பள்ளிகளைக் காட்டிலும் அதிகமான அளவில் கல்லூரிகளைக் கொண்டுவந்தது. மூலதனச் சந்தைகளைப் புறக்கணித்தது. இவை உற்பத்தியை நசிவடையச் செய்தன. 10 இலட்சம் மக்களுக்கும் அதிகமாக வசிக்கும் நகரங்கள் வெறும் 52 மட்டுமே நம்மிடம் இருந்தன. நம்முடைய உழைக்கும் மக்களில் பாதி பேர் மட்டுமே விவசாயம் அல்லாத பிற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். நம்முடைய தொழிலாளர்களில் 25 சதவீதம் பேர் மட்டுமே வேலைக்கு முறையான கூலியைப் பெற்றனர். நம்முடைய 30 கோடி மாணவர்களில் வெறும் ஐந்து இலட்சம் பேர் மட்டுமே தொழில் பழகுநராக ஆக முடிந்தது. நம்முடைய 63 மில்லியன் தொழில்களில் 7 மில்லியன் தொழில்கள் மட்டுமே, ஜிஎஸ்டி வருவதற்கு முன்பாகவே மறைமுக வரி செலுத்துவதற்காக பதிவு செய்திருந்தன. நம்முடைய 120 கோடி மக்களில் 1.5 சதவீதத்தினர் மட்டுமே பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்பு வருமான வரி செலுத்திவந்தனர். இந்தியாவின் வறுமை நம்முடைய உற்பத்திக் குறைவின் காரணமாக ஏற்பட்டிருந்தது.

நம்மிடம் உள்ள உள்கட்டமைப்பு வாய்ப்புகளான கல்வி, வேலை வாய்ப்பு, வேலைக்கேற்ற திறன் ஆகியவை உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் மிக முக்கியமான பங்களிப்பவை. இந்தியாவின் உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டுமானால் முறைசார் வேலைவாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். உழைக்கும் மக்களில் 25 சதவீதம் பேர் மட்டுமே தற்போது முறைசார்ந்த வேலைகளில் இருக்கின்றனர். இது 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்டிருக்கும் நகரங்களின் எண்ணிக்கையை தற்போதுள்ள 50 என்பதிலிருந்து 200 ஆக அதிகரிக்கவேண்டும். தற்போது உழைக்கும் மக்களில் பாதி பேர் ஈடுபட்டுவரும் விவசாயக் கூலித்தொழில்களை 10 சதவீதமாகக் குறைக்கவேண்டும். நம்முடைய பள்ளிகள், கல்லூரிகளில் திறன் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யதிடவேண்டும். இங்கு ஆகும் செலவு, தரம், எண்ணிக்கை ஆகியவற்றை சமன்படுத்தவேண்டும். இவற்றைப் பற்றி ஒவ்வொன்றாகக் காண்போம்.

### ஒழுங்குபடுத்துதல்

வெளித்தோற்றத்திற்கு இந்தியாவின் தொழில் முனைவுச் சூழல் ஆரோக்கியமானதாகத் தெரிகிறது. நம்முடைய தொழிலாளர்களில் பாதி பேர் சுயமாக பல வேலைகளை செய்து கொண்டிருப்பவர்கள் ஆவர். விவசாயத் தொழிலாளர் அல்லாத பிற தொழிலாளர்களில் ஒவ்வொரு நான்கு தொழிலாளிகளில் ஒருவர் ஏதேனும் ஒரு தொழில் செய்துவருகிறார். இவை பெரும்பாலும் மிகச் சிறியவை.



இந்தியாவில் உற்பத்தி நிறுவனங்களில் 11 சதவீத நிறுவனங்கள் மட்டுமே 200க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டுள்ளன. சீனாவில் இது 52 சதவீதமாகும். உற்பத்தித் திறனும் இந்தியாவில் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன. உழைக்கும் மக்களில் 40 சதவீதம் பேர் ஏழைகள். இவர்களுக்கு உயிர் வாழ்வதற்கான கூலி மட்டுமே கிடைக்கிறது. வறுமையிலிருந்து வெளியேறும் அளவுக்குக் கூலி கிடைப்பதில்லை.

அதிகமான ஊதியம் கொடுக்கக்கூடிய உற்பத்தி நிறுவனங்கள் இந்தியாவில் மிகவும் குறைவு. இந்தியாவின் 6.3 கோடி நிறுவனங்களில் 1.2 கோடி நிறுவனங்களுக்கு அலுவலகமே இல்லை. 1.2 கோடி அமைப்புகள் வீடுகளில் இருந்தபடி நடத்தப்பட்டு வருகின்றன. ஜிஎஸ்டிக்கு முன்பு 70 இலட்சம் நிறுவனங்கள் மட்டுமே வரி செலுத்துவதற்குப் பதிவு செய்துகொண்டிருந்தன. 14 இலட்சம் நிறுவனங்கள் மட்டுமே பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கான தங்களின் கட்டாயப் பங்களிப்பை செலுத்துகின்றன. 10 இலட்சம் நிறுவனங்கள் மட்டுமே கம்பெனிகளாக இணைக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் 17500 கம்பெனிகள் மட்டுமே 10 கோடிக்கும் அதிகமான செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டிருப்பவை. ஜிஎஸ்டி மிக முக்கியமான மாற்றத்தைக் கொண்டுவந்தது. மறைமுகவரி செலுத்துவதற்குப் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை, ஜிஎஸ்டிக்குப் பிறகு 50 சதவீதமாக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை விரைவில் 15 மில்லியனாகும். எளிதாகத் தொழில் செய்யும் நிலைமை மேம்படும் போது புதிய முயற்சிகள் அதிகரித்து உற்பத்தி ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும். சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவன அமைச்சகத்தின் சிந்தனை உலகம் மீண்டும் சிலிர்த்தெழவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பிணையில்லாக் கடன் வசதி, சோதனை ராஜ்ஜியத்தின் முடிவு ஆகியவை பரவலாக வேண்டும். ஜிஎஸ்டி எளிமைப்படுத்தப்பட வேண்டும். பணி வழங்குவோர், பணியாளர், பணி வழங்குவோர் அரசாங்கம் இவர்களின் உறவு சிறக்கவேண்டும். காகிதம் இல்லாத, நேரடியாக வரத்தேவையில்லாத, பணப்பரிமாற்றம் இல்லாத இடைவினைகள் பெருக வேண்டும்.

**நகர்மயமாதல்**

இந்தியா வேலைகளை மக்களிடம் எடுத்துச்செல்லப் போகிறதா? அல்லது மக்களை வேலைகளை நோக்கி அழைத்துச் செல்லப்போகிறதா? என்ற கடினமான கேள்வியுடன் தொடர்புடையதாக நகர்மயமாதல் இருக்கிறது. பெரும்பாலும் மக்களை வேலைகளை நோக்கி அழைத்துச் செல்லும் நிலைதான் இருக்கிறது. சீனப் புத்தாண்டின் போது வார

இறுதியில் நான்கு நாள்கள் விடுமுறையில் 200 மில்லியன் மக்கள் ரயில் டிக்கெட் வாங்கி கொண்டு வெளியூர்களில் உள்ள தங்கள் வீடுகளுக்குப் பயணிக் கின்றனர். வேலை இருக்கும் இடத்திற்கு மக்களை அழைத்துச் செல்வது சீனாவின் மாதிரியாகும். இது போன்ற ஒரு நிலை இந்தியாவில் இல்லை. இந்தியாவில் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் 50 நகரங்கள் மட்டுமே உள்ளன. சீனாவிலோ இப்படிபட்ட 375 நகரங்கள் உள்ளன. நம் நாட்டில் ஆறு இலட்சம் கிராமங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு இலட்சம் கிராமங்களில் 200க்கும் குறைவானவர்களே வசிக்கின்றனர். குறைவான வேகத்தில் நிகழும் இந்த நகர்மயமாதல் ஊதியங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. குவாலியரில் நடைபெற்ற வேலைவாய்ப்புக் கண்காட்சியில் பங்கேற்றவர்கள் மாதம் 400 ரூபாய் சம்பளம் வேண்டும் என்று கேட்டனர். குர்காவூனில் ரூ.6000/, தில்லியில் ரூ.9000/, மும்பையில் ரூ.18000/ சம்பளம் கேட்டனர். இவர்கள் ஊதியம் கேட்கவில்லை. தங்களுக்காகும் செலவுகளை ஈடுகட்டச் சொல்கின்றனர். அடுத்த இரண்டு பத்தாண்டுகளில் தில்லி, மும்பை, பெங்களூரு போன்ற இடங்களுக்கு அதிகம் பேரை வேலைக்கு அழைத்துசெல்ல முடியாமல் போய்விடும்.

இந்தியாவில் விவசாயத்தில் அதிகமானோர் உள்ளனர் (உழைக்கும் மக்களில் 50 சதவீதம்). சுய வேலைகள் செய்வோர் 50 சதவீதம். உற்பத்தித் துறையில் 11 சதவீதம் பேர் மட்டுமே இருக்கின்றனர். இவை அனைத்துமே ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. விவசாயத்தி லிருந்து இடம் பெயர்ந்து வருவோருக்கு மற்ற வேலைகள் தெரிந்திருப்ப தில்லை. ஏழைகள் வேலையின்றி இருக்க இயலாது. எனவே சுயமாக ஏதேனும் ஒன்றைச் செய்கின்றனர். ஒவ்வொருவரும் தொழில் முனைவோர் ஆகிவிடமுடியாது. இந்தியாவில் விவசாயமும், சுய வேலைகளும் ரஷ்ய பொருளியலாளர் சாயானோவ் கூறியதைப் போல, 'சுய சுரண்டலாகவே' இருக்கிறது. எனவே, முறை சார்ந்த வேலைகளும், உற்பத்திப் பணிகளும், ஊதியமும் கிடைப்பதும் அவசியம்.

### நிதி

இந்தியர்கள் நிலம், வீடு போன்ற ஸ்தூலமான சொத்துக் களாகவே சேமிக்கின்றனர். தொழில்களுக்கு தேசியமய மாக்கப் பட்ட வங்கிகளிலிருந்து மூலதனத்தைத் திரட்டுகின்றனர். இதனால், நிலங்களின் விலை தாறுமாறாக உயர்கிறது. சிறு, சிறு தனியார் துறை வங்கிகள் நம் நாட்டில் அதிகமாக இல்லை. பணமதிப்பிழப்பு நடவடிக்கை 18 இலட்சம் கோடி கடன் தருவதற்கான திறனை புதிதாக ஏற்படுத்தியுள்ளது. 15 கோடி மின்னணு பரிமாற்றங்கள் மாதந்தோறும் புதிதாக நிகழ்கின்றன. 3 இலட்சம் கோடி புதிய நிதி சேமிப்புகள் குறைவான வட்டி விகிதங்களில் ஏற்பட்டுள்ளன.

### மனித மூலதனம்

கல்வி, வேலைக்குரிய திறன் ஆகியவற்றில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. தரம், எண்ணிக்கை, உள்ளடக்கிய நிலை ஆகிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட நோக்கங்கள் நம்மிடம் இருக்கின்றன. உலகில் ஏற்பட்டுவரும் புரட்சிகரமான மாற்றங்களும் , பணிகளில் புரட்சிகரமான மாற்றங்களும் கல்வியிலும், வேலைக்குரிய திறன்களிலும் புரட்சிகரமான மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பதையே குறிக்கின்றன. கற்றல் என்பதை விடவும் அறிதல் என்பது இப்போது மிக முக்கியமானதாக இருக்கிறது. வேலை உலகத்தின் (தானியங்கி, நவீன கருவிகளின் உதவியுடன் கற்றல், செயற்கை நுண்ணறிவு) கல்வி என்பது படித்தல், எழுதுதல், கணிதம் என்ற மூன்று கூறுகள் தேவைப்படுவதாகும். இவை அடிப்படையானவை. இவைகளோடு கூட மென் திறன்களும் தேவைப்படுகின்றன.

கல்வி, வேலைவாய்ப்பு, வேலைத்திறன் பற்றிய நமது பழைய கொள்கைகள் ஏதேனும் ஒன்றை நெருங்கிச் செல்வது என்பதைக் காட்டிலும், ஏதேனும் ஒன்றிலிருந்து விலகி ஓடுவது என்பதாகவே இருந்தது. 'காலிப் தன் வாழ்நாள் முழுவதும் தவறுகளையே செய்து கொண்டிருந்தான். அவன் முகம் மண் பூசியிருந்தது. ஆனால் அவன் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டிருந்தான்' என்று காலிப் என்பவர் எழுதுகிறார். இந்தியாவின் உற்பத்தித் திறன் குறைவுக்கும், வறுமைக்கும் பல காரணங்கள் உள்ளன. இறுதியில் நாம் முறைப்படுத்துதல், நகர்மயம், நிதியளிப்பு, மனித மூலதனம் என்ற உத்தியை அடைந்திருக்கிறோம். கார்ல் மார்க்ஸ் கூறியதைப் போல, மெய்யியலாளர்கள் உலகத்தை ஆயிரம் வழிகளில் வருணித்தார்கள். ஆனால் நோக்கம் ஒன்றுதான். மாற்றம் வரவேண்டும்.

---

- **மனிஷ் சபர்வால்**, தலைவர், டீம் லீஸ் பிரைவேட் லிமிடெட். ●

# இளைஞர் திறன் வளர்ப்பு மக்கள் தொகை, வயது சாதக நிலையை பயன்படுத்துதல்

- கே.பி. கிருஷ்ணன்

இந்தியாவின் தற்போதைய மக்கள்தொகை வயதுத்தன்மை உலகளவில் மிகவும் இளைமையானதாக - சராசரி 29 வயதுடையவர்களின் நாடாக உள்ளது. இதனால், நம் நாட்டிற்குத் தேவைப்படும் திறன்மிகு மனிதவளங்களை வழங்குவது மட்டுமல்லாமல் வயது முதிர்ந்துவரும் உலகப் பொருளாதாரங்களுக்கும் பணியாளர்களை வழங்கவும் ஒரு நல்ல வாய்ப்பு உள்ளது. 2016-17 பொருளாதார ஆய்வறிக்கையின்படி 1950க்கு பிறகு முதன்முறையாக வளர்ந்த நாடுகளில் 15 முதல் 59 வயதுக்குட்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்தது. சீனா மற்றும் ரஷ்யாவில் இது 20சதவிகிதம் வரை குறைந்தது. இந்தியாவின் தற்போதைய பணியாளர்களின் சராசரி வயது 28ஆக இருப்பதால் பணி செய்யக்கூடிய மக்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 2040வரை இது உயர் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்திய மாநிலங்களுக் கிடையே மக்கள்தொகை வயது நிலைமை மிகவும் மாறுபட்டுள்ளது. மேற்குவங்கம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் ஆகியவற்றிற்கும் மத்திய மாநிலங்களான மத்தியபிரதேசம், இராஜஸ்தான், உத்திரபிரதேசம் மற்றும் பீஹாருக்கும் இடையே பெரிய மாற்றங்கள் உள்ளன. முன் கூறப்பட்டவை, வளர்ந்த நாடுகளைப் போலவும், இரண்டாவது கூறப்பட்ட மாநிலங்களின் பணியாளர்களின் சராசரி வயது குறைந்தும் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகிறது. ஆகவே, இந்த ஜனத்தொகை வயது குறைவுத்தன்மைசார்ந்த பணியாளர்களை சாதகமாக பயன்படுத்த அவர்கள் வேலை செய்வதற்கு தகுந்த திறன்களை அளித்தால்தான் உற்பத்தித் திறனும் பொருளாதாரத்தின் போட்டித் தன்மையும் வளரும்.

வீபாக்ஸ் (Weebox) 2018இல் வெளியிட்ட இந்தியத்திறன்கள் அறிக்கையின்படி இன்று உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வெளிவருபவர் களில் 46 சதவிகிதம் பேருக்குத்தான் வேலை செய்யக்கூடிய திறன்கள் உள்ளன. இதனால், வேலைக்குத் தேவையான திறன்கள் மற்றும் பணியாளர்களுக்கு இருக்கும் திறன்களுக்குமிடையே இடை வெளியும் தேவையான திறன்களுக்கும், இருக்கும் திறன்களுக்கும் இடையே ஒவ்வாமையும், திறன் பற்றாக் குறையும் காணப்படுகின்றன. இதனால் ஒரு புறம், தொழிற்துறையில் தேவையான அளவுக்கு திறன்மிகு பணியாளர்களின் பற்றாக்குறை இருக்கும் அதே நேரத்தில் பல படித்த இளைஞர்களுக்கு தேவையான வேலைவாய்ப்புகள் இல்லாமலும் உள்ளன.

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் திறன் இடைவெளி ஆய்வு அறிக்கையின்படி 2022ஆம் ஆண்டு வாக்கில் 24 முக்கிய பொருளாதாரத் துறைகளில் தேவைப்படும் மனித வள கூடுதல் எண்ணிக்கை 109.73 மில்லியனாக இருக்கும். இதனால் வேலை வாய்ப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தேவையான மனித வளங்களை உருவாக்கினால்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் உற்பத்தித்திறனும் அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு வெற்றிகரமான திறன் மேம்பாட்டுத்திட்டத்தை செயல் படுத்தும்போது அதற்கு இணையான தொழில்முனைவு உள்ளிட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கு இணையாக தொழில்முனைவு சூழ்நிலையும் மேம்படுத்த வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் திறன்வளர்ப்பு சூழ்நிலைகளை மேம்படுத்தி மக்கள்தொகை வயது பயனை பயன்படுத்தவும், இளைஞர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் கூட, நம்முடைய மனித வளங்களை முழுமையாக பயன்படுத்தத் தடையாக உள்ள சவால்களை நாம் கவனிக்க வேண்டும்.

**முக்கிய சவால்கள்**

திறன்சார் சுற்றுச்சூழலில் உள்ள முக்கிய சவால்கள் விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் காரணத்தால் தொழிலாளர் சந்தையில் ஏற்பட்டுள்ள நிலைமைகளானவை. அவை தொழிலாளர் திறனை பெறுவதற்கான வழிமுறைகள் அவைகளின் தேவை ஆகியவற்றை சார்ந்தது. அவற்றில் சில:

தேசியத்திறன் மேம்பாட்டுக் கழகத்தின் திறன் இடைவெளி ஆய்வு அறிக்கையின்படி 2022ஆம் ஆண்டு வாக்கில் 24 முக்கிய பொருளாதாரத் துறைகளில் தேவைப்படும் மனித வள கூடுதல் எண்ணிக்கை 109.73 மில்லியனாக இருக்கும். இதனால், வேலைவாய்ப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தேவையான மனித வளங்களை உருவாக்கினால்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் உற்பத்தித்திறனும் அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

1. கல்வி அதிகம் பெறாத இளைஞர்களின் பெரும் எண்ணிக்கை.

2. திறன்மிகு மனித வளத்திற்கான உயர்தேவை உள்ள நிலையில் பணி செய்வதற்கு ஏற்ற திறன் குறைவு.

3. முறைப்படுத்தப்பட்ட தொழில்துறையில் பணிசார் வாய்ப்புகள் பெற பள்ளிக்கல்வியை இடையில் விட்டவர்களுக்கு மீண்டும் வாய்ப்பளித்து கணிதம், எழுத்தறிவு மற்றும் ஒரு தொழிலுக்குத் தேவையான திறன்களை அளித்தல்.

4. மக்கள்தொகை வயது விகிதாச்சாரத்திற்கு எதிராக குறைந்த அளவிலான மற்றும் மாறுபட்ட திறன் வளர்ப்பு வாய்ப்புகள்.

5. பயிற்சியை அளிப்பவர்களை மேம்படுத்தத் தேவையான பயிற்சிகளும், அவர்களுக்கான பதவி உயர்வுத்திட்டங்களும் சரியாக இல்லாத நிலையில் தேவையான அளவு பயிற்சியாளர்கள் இல்லாமை.

6. திறன்சார் மதிப்பீடுகள் முறையில் பலர் உள்ளதால் வெவ்வேறான வெளிப்பாடுகளும் அதனால் பணி அமர்த்துவோரிடையே உள்ள குழப்பங்களும்.

7. தொழில்துறையில் முறைப்படுத்தப்படாத அமைப்புசாரா துறைகள் அதிகமாக உள்ளதும் தற்போது இருக்கும் திறன்களும், தேவைப்படும் திறன்களின் மதிப்பீடும் இல்லாமை.

8. எல்லாத்துறைகளையும் ஒருமுகப்படுத்துவதற்கும், ஒருங்கிணைக்கவும் தேவையான நிலைமைகள்.

மேற்கூறப்பட்ட சவால்களை நாம் ஆராயும்போது, வளரும் இந்தியப் பொருளாதாரத்தில் நம்நாட்டிற்கு தேவையான மற்றும் உலகளவில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கான இளைஞர்களின் எதிர்பார்ப்பை நாம் பூர்த்தி செய்யவேண்டும்.

**ஆளுமை அமைப்பில் மாற்றங்கள்**

முன்பிருந்த ஆளுமை அமைப்பும், திறன்சார் சூழ்நிலையும் 21 அமைச்சகங்கள் செயல்படுத்தும் 40 திட்டங்கள் மற்றும் வெவ்வேறான தரங்கள், இடு செயல்கள் மற்றும் தகுதிகள் ஆகியவைகளினால் மிகவும் பிளவுபட்டிருந்த நிலையில் நவம்பர் 2014இல் இந்தியாவின் அனைத்து திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் மைய அமைச்சகமாக திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் உருவாக்கப்பட்டது. உள்கட்டமைப்பை ஒருங்கிணைக்கவும், பயிற்சித்துறை இயக்குநரகம் தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம், தேசிய திறன் மேம்பாட்டு வாரியம், தொழில்பயிற்சிக் கூடங்கள், ஜன சிக்ஷன் சன்ஸ்தான், இந்தியத் தொழில் முனைவோர் கழகம் போன்ற அமைப்புகள், திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டன. பிறகு பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கொள்கையில் விளக்கப்பட்டுள்ள புதிய ஆளுமை அமைப்பு பின் வருமாறு:

**தேசியக் கொள்கையைப் பரவலாக்குவது**

2009ஆம் ஆண்டின் திறன் மேம்பாட்டு தேசியக்கொள்கை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு தொழில்முனைவு நோக்கத்தோடு 2015இல் “திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவு தேசியக் கொள்கை 2015 என்று ஒரு புதிய கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.” இந்தக்கொள்கை ஒரு புதிய திறன் மேம்பாட்டு சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு பார்வையை விளக்கியுள்ளது. அதன்படி, நாட்டிலுள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் நிலைத்து நிற்கும் வாழ்வாதாரங்களை உறுதி செய்யத் தேவையான வளங்களையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்க தொழில்முனைவு மூலம், புதுப்புது பொருட்களை உற்பத்திசெய்யும் கலாச்சாரத்தை தோற்றுவிப்பதற்கான உயர் தரத்திறன்களை பெரு மளவிலும் விரைவாகவும் உருவாக்கவும் மக்களுக்கு அதிகாரம் அளிக்கவும் ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது.

2009ஆம் ஆண்டின் திறன் மேம்பாட்டு தேசியக்கொள்கை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு தொழில்முனைவு நோக்கத்தோடு 2015ல் “திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு தேசியக் கொள்கை 2015 என்று ஒரு புதிய கொள்கை அறிவிக்கப் பட்டுள்ளது.” இந்தக் கொள்கை ஒரு புதிய திறன் மேம்பாட்டு சூழ்நிலையை உருவாக்கு வதற்கான ஒரு பார்வையை விளக்கியுள்ளது. அதன்படி, நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் நிலைத்து நிற்கும் வாழ்வாதாரங்களை உறுதி செய்யத்தேவையான வளங்களையும், வேலைவாய்ப்பு களையும் உருவாக்க தொழில் முனைவு மூலம், புதுப்புது பொருள்களை உற்பத்தி செய்யும் கலாச்சாரத்தை தோற்றுவிப்பதற்கான உயர்தரத் திறன்களை பெரு மளவிலும் விரைவாகவும் உருவாக்கவும் மக்களுக்கு அதிகாரம் அளிக்கவும் ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது.

ஒரு பெரிய கொள்கை மாற்றத்தின் அடிப்படையில் தொழில் துறையின் விருப்பத்தின்படி இளைஞர்களுக்குத் தொழில்பயிற்சி அளிப்பதில் தொழில்துறைக்கு பங்களிப்பு அளிக்கும் வகையில் பயிற்சி பணி சட்டம் 1961-2014இல் திருத்தப்பட்டது. திறன் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு ஒருங்கிணைந்த நிலையாக பணியில் பயிற்சி அளிக்கும் முறை தேசிய திறன் கொள்கை 2015இன் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

**பயிற்சித் திட்டங்களை மதிப்பிடுவது**

திறன் மேம்பாட்டுசார் தகவல்களை வழங்குவதிலும், பயிற்சிகளை வழங்குவதில் மேம்பாடு காணவும் பணித்திறன்களின் தரத்தை சீரமைக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அனைத்து வகையான பயிற்சித்திட்டங்களும் தேசிய திறன்கள் மதிப்பீட்டு அமைப்போடு ஒருங்கிணைக்கப்பட்டு அவை தொழில்துறையால் ஏற்கப் பட்டுள்ளன. 2611க்கு மேற்பட்ட மதிப்பீடு வரிசைகள் உருவாக்கப்பட்டு அவற்றை 2000க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த மதிப்பீட்டு வரிசைகளை மூன்றாண்டுக்கு ஒருமுறை மறு பரிசீலனை செய்து அப்போதைய தொழிற்துறைக்கு ஏற்றவாறு இருக்கிறதா என்று மேம்படுத்த வேண்டும் என்று தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பு கூறுகிறது.

மேற்கூறப்பட்ட திட்டத்தினால், கட்டுமானத்துறை, விவசாயம், வீட்டுவேலை செய்பவர்கள், மருத்துவத்துறை, நவரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் போன்ற அதிக மக்கள் பணி செய்யும் துறைகளுக்கு மிகுந்த பலனளிக்கும்.

தொழில்சார்ந்த பயிற்சி பெறும் ஒருவருக்கு தகுந்த வேலை வாய்ப்புகள் இருக்க வேண்டும். அதற்கு அப்படிப்பட்ட வேலை வாய்ப்புகளில் தகவல்கள் தேவை. தொழில் துறைக்குத் தேவையான திறன் தேவைகள் மற்றும் சந்தையில் கிடைக்கக்கூடிய திறன்மிகு பணியாளர்கள் ஆகியவை பற்றிய தகவல்கள் ஒருங் கிணைக்கப்பட்டு பணியாளர் சந்தைத்தகவல் அமைப்பு என்று வெளியிடப் பட்டுள்ளது. இந்த ஒரு வழி சாளர முறையில் இந்தச் செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கும் பயிற்சி பெறுபவர்கள், பயிற்சியாளர்கள், தொழில்துறை, முதலாளிகள், அரசுத்துறைகள், கொள்கை வகுப்பாளர்கள், மதிப்பீடு செய்பவர்கள், சான்றிதழ் வழங்கு பவர்கள், நிதிவழங்குபவர்கள், பன்னாட்டு அமைப்புகள், தொழில்துறை சார்ந்த திறன் கவுன்சில்கள், பணியாளர் சந்தை நடவடிக் கைகளை கண்காணிக்கும் அமைப்புகள், பணியில் அமர்த்தும் அமைப்புகள் ஆகிய அனைவரும் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**பயிற்சியின் அளவுகளை அதிகரித்தல்**

திறன் மேம்பாட்டு சுற்றுச் சூழலை அதிகரிக்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொழில் பயிற்சி நிலையங்களின் நீண்ட கால பயிற்சி அளவு மே 2014இல் 10750ஆக இருந்ததைக் காட்டிலும் மே 2018வாக்கில் 14276ஆக - 56 சதவிகிதம் உயர்ந்து நபர்களின் எண்ணிக்கை 30,73,000 ஆக உயர்ந்துள்ளது. இவற்றின் குறுகிய காலப்பயிற்சி வெகுவாக உயர்ந்து பிரதம மந்திரி பணியாளர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2013 14இல் 3.34 இலட்சம் இருந்ததைக் காட்டிலும் 2017-18இல் 16 இலட்சம் வரை உயர்ந்துள்ளது. பிரதம மந்திரி பணியாளர் மேம்பாட்டுத் திட்டமையங்கள் எல்லா மாநிலங் களிலும் யூனியன் பிரதேசங்களிலும் இருக்கும் நிலையில் அவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியப் பணியாளர்கள், ஒரு பணியிலிருந்து இன்னொரு பணிக்கு இலகுவாக மாறுவதற்கு ஏதுவாக 460 மாவட்டங்களில் பிரதம மந்திரி கௌஷல் மையங்கள் என்ற பல்திறன் வழங்கு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதனால், சந்தைக்கு தேவையான தொழில்சார் திறன் படைத்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து, வேலை வாய்ப்பும் அதிகரித்துள்ளது. இது அல்லாமல், தீன்தயாள் உபாத்யாய் கிராமப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வுரிமை இயக்கம், ஒருங்கிணைந்த திறன் மேம்பாடு திட்டம் ஆகியவற்றின் மூலமாகவும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு பொதுவான மற்றும் துறைசார் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் பயிற்சி அளிக்கும் மொத்தத்திறன் அளவு ஆண்டிற்கு ஒரு கோடி பேருக்கு மேல் உயர்ந்துள்ளது.

இது அல்லாமல், கணினிசார் சந்தை மற்றும் செயலிகள் மூலம் நூலகங்கள் இணைக்கப்பட்டு திறன் மேம்பாட்டிற்கான கல்விகளும் வழங்கப்படுகின்றன.

**தரமேம்பாடு**

திறன் வழங்கு பயிற்சி நிலையங்களின் தரத்தை உயர்த்தவும் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்கட்டமைப்பு, கருவிகள், பயிற்சியாளர்கள், கடந்த காலச்செயல்பாடு, ஒவ்வொரு பயிற்சி மையத்தின் தரத்தை அறிய தொழில் நிறுவனங்களோடு இணைப்பு ஆகிய நிலைப்பாடுகளின் அடிப்படையில் 5000 தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் 15000 பயிற்சி மையங்களுக்கு மேலானவை தரம் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால், பயிற்சி பெற விரும்பும் பணியாளர் தான் விரும்பிய இடத்தில் சேர வாய்ப்பும், பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக் கிடையே போட்டித் தன்மையும் ஏற்படும். இந்தத் திறன் வழங்கு அமைப்புகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் மற்றும் இணைப்புகள் வலுவாக்கப் பட்டள்ளதால், பயிற்சி சார்ந்த உள்கட்டமைப்பு வலுவாக்கப் பட்டுள்ளது.

இது அல்லாமல், இந்த பயிற்சி மையங்கள் ஸ்மார்ட் எனப்படும் வலைதளம் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப் படுகின்றன. அதன் மூலம் இந்தப் பயிற்சி நிறுவனங்களை தொடர்ந்து மதிப்பீடு செய்யவும், கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும், ஆய்வுகளைக் கண்காணிக்கவும், அன்றாடம் நடப்பதை அறிந்துகொள்ளவும் தொழில்நுட்பம் பெரிதளவும் பயன்படுத்தப்படுகிறது.

இப்படி, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளின் தரத்தை உயர்த்தியுள்ளதால், பணியாளர்களுக்கு வேலை கிடைக்கும் சதவிகிதம் உயர்ந்துள்ளது - பணியாளர்கள் பணம் கொடுத்து பயின்ற இடங்களில் 26 சதவிகிதத்தி லிருந்து 60 சதவிகிதமாகவும் மானிய முறையில் நடைபெறும் பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் 17 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. மொத்த எண்ணிக்கையும் மிகவும் அதிகரித்துள்ளது. தனியார் துறையும், தொழில் பயிற்சி நிறுவனங்களோடு இணைந்து நிர்வகிப்பதால் தொழில் நிறுவனங் களின் நேரடித்தொடர்பும், பகுதி சார்ந்த தொழில்களுக்கு ஏற்ற பயிற்சிகளும் கிடைக்கின்றன.

பயிற்சியின் தரங்களை உயர்த்துவதற்கு, பயிற்சியாளர் களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த வகையில், பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர்களின் செயல் முறைகளும் தரமாக்கப்பட்டுள்ளன. திறன் மேம்பாடு சுற்றுச்சூழலில் செயல்படும் பயிற்சியாளர்களை மின் வலைதளம் மூலம் இணைத்து அவர்களின் பல்வேறு தன்மைகளை அறிந்து கொள்ள "தக்ஷீலா" வலைதளம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

உள்கட்டமைப்பு, கருவிகள், பயிற்சியாளர்கள், கடந்த கால செயல்பாடு, ஒவ்வொரு பயிற்சி மையத்தின் தரத்தை அறிய தொழில் நிறுவனங்களோடு இணைப்பு ஆகிய நிலைப்பாடுகளின் அடிப்படையில் 5000 தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் 15000 பயிற்சி மையங்களுக்கு மேலானவை தரம் பிரிக்கப் பட்டுள்ளன. இதனால், பயிற்சி பெற விரும்பும் பணியாளர் தான் விரும்பிய இடத்தில் சேர வாய்ப்பும், பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக் கிடையே போட்டித்தன்மையும் ஏற்படும். இந்தத் திறன் வழங்கு அமைப்புகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் மற்றும் இணைப்புகள் வலுவாக்கப்பட்டுள்ளதால், பயிற்சி சார்ந்த உள்கட்டமைப்பு வலுவாக்கப் பட்டுள்ளது.

பணியாளர்களின் திறன்களை முறைப்படுத்துதல்: ஏற்கனவே உள்ள திறன்களை அங்கீகரித்து, வேலைசார் பயிற்சி அளித்தல். இந்தியாவில் 93 சதவிகித பணியாளர்கள் முறை செய்யப்படாத நிலையில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு முறையான தொழில் சார்ந்த பயிற்சி இல்லாததால், அவர்களின் முன்னேற்றம் தடைபடுகிறது. இவர்களுக்கு உதவவும் முறைப்படுத்தப்படாத துறைகளில் பணியாற்றுபவர்களின் தற்போதைய கல்வி மற்றும் திறன்களை பரிசோதித்து சான்றிதழ்கள் வழங்கவும் "ஏற்கனவே உள்ள திறன்கள் மதிப்பீடு" திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை, பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் அடிப்படையில் ஒன்பது இலட்சம் பேருக்கு திறன்கள் வழங்கப்பட்டுள்ளன. பணியாளர்களிடம் ஏற்கனவே உள்ள திறன்களை மதிப்பீடு செய்து சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் அவர்கள் முறைப்படுத்தப்பட்ட துறைக்குச் செல்ல வாய்ப்பளிக்கப்படுகிறது. இது மட்டுமல்லாமல், பல நிலைகளில் இப்படி மதிப்பீடு செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்ட பணியாளர்களுக்கு மிகுந்த கூலியும், மேலும், மேலும் பதவி உயர்வும் கிடைத்துள்ளன. இப்படிப்பட்டத் திறன் சான்றிதழ்களைப் பெற்றுள்ள பணியாளர்களின் தன்னம்பிக்கை உயர்ந்துள்ளது.

குருவிடமிருந்து மாணவர் திறன்களை பெறுவது தொன்று

தொட்ட பழக்கமாக உள்ளது. இப்படி ஒரு வேலையில் திறன் பயிற்சி பெறுவது என்பது பல நாடுகளிலேயும் உள்ளது. இப்படி, பயிற்சிப் பணி செய்வதால் அந்தந்தத் தொழில்துறைக்கு ஏதுவான பணியாளர்களை உருவாக்கவும் எளிதாகிறது. இப்படிப்பட்ட பயிற்சிப்பணித்திட்டம், பல நாடுகளில் செயல் படுத்தப்பட்டு வருகிறது - ஜப்பானில் 10 மில்லியன் பயிற்சிப் பணியாளர்கள் உள்ளனர், ஜெர்மனியில் மூன்று மில்லியனும், அமெரிக்காவில் 0.5 மில்லியன் பயிற்சிப் பணியாளர்களும் உள்ளனர். ஆனால், இந்தியாவில் 0.3 மில்லியன் பயிற்சிப் பணியாளர்களே உள்ளனர். 18 முதல் 35 வயது வரையிலானவர்கள் இந்தியாவில் 300 மில்லியனுக்கும் மேல் உள்ள நிலையில் மேற்கூறப்பட்ட எண்ணிக்கை மிகவும் குறைவே.

ஏற்கனவே கூறப்பட்டுள்ளது போல திறன் மேம்பாட்டை வளர்க்க பயிற்சிப்பணித் திட்டத்தை மேம்படுத்தவும் பொறியியல் இல்லாத மற்ற துறைகளில் வாய்ப்பளிக்கவும் 2014இல் பயிற்சிப் பணி சட்டம் 1961 திருத்தப்பட்டது. தேசிய பயிற்சிப்பணி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவியாக பயிற்சிப்பணியாளர்களின் ஸ்டைபண்ட் மற்றும் அடிப்படை பயிற்சித் தொகை பணியமர்த்து வோருக்கு ரூ.7500 அளிக்கப்படுகிறது.

**சுய வேலை செய்பவர்கள் தொழில் முனைவராக உருவாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

| திட்டத்தின் பெயர் | தகுதி | உதவி திட்டங்கள் |
|---|---|---|
| தீன்தயாள் அந்தியோதயா யோஜனா கிராமப்புறங்களில் சுய வேலை பயிற்சி நிலையங்கள் அமைத்து சுய வேலை மற்றும் தொழில் முனைவை போற்றுவித்து குறு தொழில்கள் துவங்க பயிற்சி - அஜீவிகா கிராமின் எக்ஸ்பிரஸ் யோஜனா - கிராமத் தொழில் முனைவு துவக்கத் திட்டம் | ஏழ்மைக் கோட்டிற்கு கீழே கிராமப்புற குடும்பங்கள் 50 சதவிகித பயனாளிகள் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடி மக்கள், 15 சதவிகிதம் சிறுபான்மை யினர் மற்றும் 3 சதவிகிதம் மாற்றுத் திறனாளிகள். இதில் பெண்கள் குடும்பத்தலைவி யாக உள்ளவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் மற்றும் தனியாக வாழும் பெண்களுக்கு முன்னுரிமை. | தேசிய கிராமப்புற பயிற்சி இயக்கம் பொதுத்துறை வங்கிகள் மூலம் மாவட்டங்களில் கிராமப்புற சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையங்களை அமைத்து, கிராமப்புற வேலையில்லா இளைஞர்களை சுய வேலை செய்யும் தொழில் முனைவர்களாக உருவாக்கப் பயிற்சி அளித்து ஆரம்பகட்ட ஆதரவு அளிக்கிறது. சுயஉதவிக் குழுக்கள் மூலம் கிராமப்புறத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒருவருக்காவது, குறிப்பாக பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். |
| பிரதம மந்திரி முத்ரா யோஜனா | குறு நிதி வழங்கு அமைப்புகள், வணிக வங்கிகள், வட்டார கிராம வங்கிகள், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மறுநிதி வழங்கல் | ரூ.50,000 முதல் ரூ.10 இலட்சம் வரை வங்கிக் கடன்கள் |
| நிமிர்ந்து நில் இந்தியா | பெண்கள், ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி வகுப்பை சார்ந்த முதல்முறையாக துவங்கும் தொழில்களுக்கு | ரூ.10 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரை வங்கிக் கடன்கள் |

| | | |
|---|---|---|
| பிரதம மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 18 வயதுக்கு மேற்பட்ட தனியார் கூட்டுறவு சங்கங்கள், சுய உதவி குழுக்கள், அறக்கட்டளைகள். அரசு மானியம் பெறாத புதிய திட்டங்களுக்கு மட்டும் கடன்கள். | பொருள் உற்பத்தித் தொழில்களுக்கு ரூ.25 இலட்சம் வரை. சேவை நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சம் வரை. தொழில் துவங்க விளிம்பு நிதிக்கு முன் தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி ரூ.5 இலட்சத்திற்கு மேற்பட்டத் திட்டங்களுக்கு 10 நாட்களுக்கும் ரூ.5 இலட்சத்திற்குட்பட்ட திட்டங்களுக்கு 6 நாட்களுக்கு கட்டாயம் வழங்க வேண்டும். ரூ.10 இலட்சம் வரை உள்ள திட்டங்களுக்கான கடன்களுக்கு ஜாமீன் கிடையாது. |
| ஆஸ்பயர் | வியாபார ஊக்கு மையங்கள் அமைத்து இளைஞர்கள் அவர்களுடைய பல திறன்களுக்கான சுய தொழில் முனைவு ஊக்குவித்தல். | வாழ்வுரிமைசார் வியாபாரத் தொழில்முனைவு ஊக்க மையங்களுக்கு நிலம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அல்லாத இயந்திரங்களுக்கு ஒரு முறை வழங்கக்கூடிய 100 சதவிகித மானியம் அல்லது ரூ.100 இலட்சம் எது குறைவோ அது. அரசு தனியார் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும் முனைவுகளுக்கு நிலம் மற்றும் உள்கட்டமைப்பு அல்லாத இயந்திரங்களின் மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது ரூ.50 இலட்சம் எது குறைவோ அது அளிக்கப்படும். தொழில்நுட்பம்சார்ந்த வணிக தொழில் முனைவு பயிற்சி மையங்களுக்கு இயந்திரங்களுக்கான நிதி உதவி மதிப்பில் 50 சதவிகிதம் அல்லது ரூ.30 இலட்சம் எது குறைவோ. |
| பாரம்பரிய தொழில்களை புதுப்பிக்க நிதி உதவி தேங்காய் நார் பாரம்பரிய பொருட்கள் உற்பத்திப் புதுப்பிப்புக்கான நிதி. | பாரம்பரிய தொழில்கள் மற்றும் கைவினைஞர்களை ஒருபகுதியில் அமைத்து அவர்களிடையே போட்டித் தன்மையை உருவாக்கி, அவர்களின் நீண்டகால நிலைப்புக்கு ஆதரவு அளித்தல். | பாரம்பரிய குழுமம் (1000 - 1200 கைவினைஞர்கள்) : ரூ. 8 கோடி. பெரிய குழுமம் (500 - 1000 கைவினைஞர்கள்) : ரூ. 3 கோடி. சிறு குழுமம் 500 கைவினைஞர்கள் வரை : ரூ. 1.5 கோடி அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவு ரூ.10 இலட்சம் மற்றும் செயல் முதலீடு. இரண்டும் சேர்ந்த மொத்தத் திட்டமதிப்பீட்டில் 20 சதவிகிதத்திற்கு மேற்படாமல். |

**அட்டவணை 1**

**சராசரி மாத வருமானம்**

| | சுய வேலை செய்வோர் | கூலி மற்றும் சம்பளத்திற்காக வேலை செய்வோர் | ஓப்பந்தத் தொழிலாளர்கள் | தற்காலிகத் தொழிலாளர்கள் |
|---|---|---|---|---|
| பணி செய்யும் நபர்கள் | 46.6 | 17.0 | 3.7 | 32.8 |
| ரூ.5000 வரை | 41.3 | 18.7 | 38.5 | 59.3 |
| ரூ.5001 லிருந்து 7500 வரை | 26.2 | 19.5 | 27.9 | 25.0 |
| ரூ.7501 லிருந்து 10000 வரை | 17.4 | 19.0 | 20.3 | 12.0 |
| ரூ.10001 லிருந்து 20000 வரை | 11.1 | 23.6 | 11.0 | 3.5 |
| ரூ.20001 லிருந்து 50000 வரை | 3.5 | 17.7 | 2.1 | 0.3 |
| ரூ.50001 லிருந்து 100000 வரை | 0.4 | 1.4 | 0.1 | 0.0 |
| ரூ.100000 மேல் | 0.1 | 0.2 | 0.0 | 0.0 |

**ஆதாரம் : வேலை வாய்ப்பு - வேலையின்மை வருடாந்திர ஆய்வு 2015-16, மக்கள் நல வாரியம்.**

பயிற்சிப் பணியாளர் திட்டங்களைச் செயல்படுத்தவும், நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், மக்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய www.apprenticeship.gov.in என்ற வலைதளம் துவக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளம் மூலம் பணி வழங்குவோர் ஆரம்ப கால பதிவு முதல் காலியிடங்களை தெரிவித்து பணியமர்த்தி பயிற்சி அளித்து அதற்கான உதவித் தொகையை பெரும்வகையிலும் பயிற்சி பணியாளர்கள் தேவைகளை பதிவு செய்து பயிற்சி பணி பெறுவதற்கான கடிதங்களை பெரும்வரை இந்த வலைதளத்தை பயன்படுத்தலாம்.

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம், பணி வழங்குவோருக்கு ஊக்கங்கள் அளித்து திறன்சார் சுற்றுச்சூழலை மேம்படுத்த நினைக்கிறது. தேசிய பணிசார் பயிற்சித் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு தொழிற்துறைக்கும் தேவையான பணியாளர்கள் உடனடியாகக் கிடைப்பதுடன் இந்தியாவை உலகின் திறன்மிகு தலைநகரமாக உருவாக்க முடியும்.

**திறன்களைப் பெறுவதை மக்களே வேண்டச் செய்வது**

வேலைத்திறன் என்பது, சமூகப்பார்வைக் கோளாறினால் விரும்பத்தக்க அம்சமாக இல்லை. போதிய ஊதியமும், தேவையான தகவல்களும், வேலைச்சந்தை சார்ந்த தேவையான தகவல் இல்லாமை, ஆகியவற்றால் மக்கள் தொழில் சார்ந்த கல்வி பெறுவதில் தடங்கல்கள் உள்ளன. தேசிய திறன் அங்கீகார அமைப்பு முறையின் மூலம் பணியாளர்கள் தங்கள் கல்வி மற்றும் திறன்களுக்கு ஏற்ப உயர்வு பெற பதவி உயர்வு பெறுவதற்கும் ஒரு நிறுவனத்திலிருந்து மறு நிறுவனத்திற்கும், ஒரு திறன் தொழிலிலருந்து மற்றொரு தொழிலுக்கு மாறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திறன்சார் உலகப்போட்டிகளிலும், வட்டார அளவிலான போட்டிகளிலும் இந்திய பணியாளர்கள் தங்களுடைய திறன்களை வெளிப் படுத்த நல்ல வாய்ப்பு உள்ளது. சமீபத்தில் அபுதாபியில் நடைபெற்ற திறன்சார் உலகப்போட்டியில் இளம் இந்தியப் பணியாளர்கள் ஒன்பது பேர் மேன்மிகு பதக்கங்களும், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும் வென்றுள்ளனர்.

முதன்முறையாக தொழிற் பயிற்சி நிலையங்களிலும், திறன் வழங்கு மையங்களிலும் சான்றிதழ்கள் வழங்கும் பட்டமளிப்பு விழா நடைபெற்றுள்ளது. கௌஷல் விழாக்கள் நடைபெற்று அங்கு இளைஞர்கள் திறன்சார்ந்த தொழில்களை மேற்கொள்ள ஊக்குவிக்கப் படுகிறார்கள். இதனிடையே வேலைவாய்ப்பு விழாக்களும் கூட்டப்படுவதால் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளும் கிடைக்கின்றன. செஞ்சுரியன் பல்கலைக்கழகம் போன்ற தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மிடையே ஏற்பட்டுள்ள இணைப்பால் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

**இந்தியாவை உலகத்திறன் தலைநகரமாக உருவாக்கல்**

இந்தியப் பணியாளர்கள் மத்திய கிழக்காசிய நாடுகளுக்கு உடல் உழைப்பு சார்ந்த கட்டுமானப்பணி மற்றும் சில்லரை வணிகம் போன்ற வேலைகளுக்கும் மற்றும் சிலர் தொழில்நுட்பத்திறன் சார்ந்த வேலைகளுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்கின்றனர். தற்போது, வெளிநாட்டுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை கர்நாடகா மற்றும் கேரளா போன்ற வளம்மிக்க மாநிலங்களில் குறைந்து

பிஹார் மற்றும் உத்திரபிரதேச மாநிலங்களில் அதிகரித்துள்ளது. உத்திரபிரதேச மாநிலத்தில் மட்டும் திறன்மிகு மற்றும் திறன் அல்லாத பணிகளுக்காக மற்ற நாடுகளுக்கு செல்லும் மக்களின் எண்ணிக்கை 25 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

இந்தியப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல ஏதுவாக திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம், வெளியுறவு அமைச்சகத்தோடு இணைந்து இ;ந்தியப் பன்னாட்டுத் திறன் மையம் ஒன்றை அமைத்து, அங்கே அவர்களுக்குத் தேவையான திறன் பயிற்சியும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்பான பழக்க வழக்கத்தகவல்களும் அடிப்படை மொழிசார் திறமைகளும் வழங்கப்படு கின்றன. இந்த மையத்தில், பயிற்சி பெறுவோர் பன்னாட்டு சான்றிதழ் பெறுவதால், அவர்கள் வெளிநாடு களுக்கு எளிதாக செல்ல முடியும். இது அல்லாமல், ஜப்பான் உடனான தொழில்நுட்பப் பணிசார் பயிற்சித் திட்டம் மூலம் பணியாளர்கள் தற்காலிகப் பணியில் மூன்று வருடங்களுக்கு அங்கு சென்று கற்கவும் பன்னாட்டுச் சூழ்நிலையை பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது.

### மேலும் பல திட்டங்கள்

மக்கள்தொகை வயது பலன்களை விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு பயன்படுத்த மக்கள் அதிக வேலைகளுக்கு அணுகவும், அவர்களின் செயல் திறனை மேம்படுத்தவும், அவர் களுக்குத் தேவையான திறன்சார்ந்த பயிற்சிகள் அளிக்கவேண்டும். பலதரப்பட்ட மக்களும் குறைந்த அளவிலான கல்வி பெற்றுள்ள இந்தியாவில் இது ஒரு மிகக் கடினமான காரியமே. அரசு இதற்குத் தேவையான கொள்கைகளையும், செயல் அமைப்புகளையும் உருவாக்கி இருந்தாலும் அரசு, பயிற்சி வழங்குவோர், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகம் தொழில்துறை மற்றும் சமுதாய மக்கள் அனைவரும் துடிப்புடன் ஈடுபட்டால்தான் வெற்றி கிடைக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் தொழில் மேம்பாட்டுச் சுற்றுச்சூழலில் அமைப்பு சார்ந்த செயல்முறைகளும், கொள்கை வடிவமைப்பிலும் பெரும் சீர்திருத்தம் ஏற்பட்டு பெரும்பான்மையோருக்கு வேலைவாய்ப்புகள் உயர்ந்துள்ளன. இருந்தாலும், இன்னும் சில சவால்கள் உள்ளன.

### குறு தொழில்களை சந்தையோடு இணைத்தல்

மக்களின் வாழ்வுரிமை வாய்ப்புகளுக்கு இடப்பெயர்வு மிகப்பெரிய சவாலாக உள்ளது. கிராமங்களிலேயே உள்ள குறு தொழில்களை தொழில்நுட்பம் மற்றும் பிற இணைப்புகள் மூலம் புது சந்தையோடு ஒருங்கிணைப்பதன் மூலம் மக்கள் இடம் பெயர்வதை நாம் குறைக்க முடியும். பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டத்தைப் பயன்படுத்தி மாநில அரசுகள், உள்@ர் இடங்களுக்கு தகுந்த திறன் பயிற்சிகளை வழங்கவேண்டும்.

### திறன்மிகு பணிகளுக்கு அதிக ஊதியம்

இந்தியத் தொழில் நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருள்களை உற்பத்தி செய்ய நினைப்பதால் அதிக ஊதியம் கொடுக்க வேண்டிய அளவிலான திறன்மிகு பணியாளர்களின் பயன்களை அறிவதில்லை. திறன் பயிற்சி பெற்றபின் அவர்களுக்கு சிறப்பான ஊதியம் இல்லாத நிலையில் அவர்கள் திறனற்ற பணியாளர்களாகவே சேர்ந்து பணியில் பயிற்சி பெறுகிறார்கள். ஆகவே, திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் சேர்வதில்லை. இதனால், போதிய வேலைவாய்ப்பு இல்லாததால் திறன் பயிற்சி பெற்றவர்கள், வேலை இல்லாமலும் குறைந்த திறன் கொண்ட வேலையிலும் ஈடுபடுகிறார்கள்.

### முறைப்படுத்தப்படாத மற்றும் அமைப்பு சாரா பொருளாதாரம்

முறைப்படுத்தப்படாத துறைகளில் தேவைப்படும் திறன்மிகு பணிகள் பற்றிய பிரச்சினைகளை களைவதற்கு மாவட்ட வாரியாக ஆய்வுகள் மேற்கொண்டு இந்தத் துறையில் தேவைப்படும் திறன்கள் பற்றி கண்டறிய வேண்டும்.

### தனியார் துறை நிதி வழங்கலை ஊக்குவித்தல்

திறன் மேம்பாட்டுச் செயல் களுக்கு கடந்த பத்தாண்டுகளில் நிதி வழங்க தொழிற் துறையை ஊக்குவித்த போதிலும், சரியான பலன் கிடைக்கவில்லை. திறன் பெற்ற பணியாளர்களினால் பலன் நேரடியாக தொழிற்துறைக்கு சென்றடையும் அதே நேரத்தில் பணியாளர்களுக்கு திறன் வழங்குவது முழுக்க முழுக்க அரசு நிதியில் மேற்கொள்ளப்படும் செயல்களாகும். தொழிற்துறைகள் தாங்களாகவே முன்வந்து திறன் மேம்பாட்டு நடவடிக்கை களில் ஈடுபடுவதை ஊக்குவிக்க அவர்கள் அளிக்கும் பங்கைத் திருப்பி அளிக்கும் திட்டம் அல்லது வரி போன்றவற்றை கவனிக்கவேண்டும்.

நாம் உணர வேண்டியது திறன் மேம்பாடு மட்டுமே போதுமானது அல்ல. திறன்மிகு பணியாளர்களுக்கு சிறு, குறு, பெருந் தொழில்களில் வேலை வாய்ப்புக்கள் தேவை, சரியான பணியாளர் நலக்கொள்கை களும், பல துறைகளில் பணி செய்பவருக்கும் சுய வேலை செய்பவர்களுக்கும் ஊதியங்களைத் தொடர்ந்து உயர்த்த வேண்டும். திறன் மேம்பாட்டுத் திட்டங்களை தொழிற்துறையின் தற்போதைய தேவைக்கு ஏற்ப உயர்த்தவும் வேண்டும்.

- **கே.பி. கிருஷ்ணன்,** செயலாளர், திறன் மேம்பாடு, தொழில்முனைவு அமைச்சகம், இந்திய அரசு. ●

# முத்ரா திட்டம் - தொழில், வேலைவாய்ப்பு ஊக்கி

- ராஜீவ்குமார்




பிரதம மந்திரியின் முத்ரா திட்டம் (Pradhan Mantri Mudra yojana -PMMY) ஏப்ரல் 8, 2015இல் கொண்டுவரப்பட்டது.

5.77 கோடி சிறு வணிக அமைப்புகள் முறைசாரா பிரிவின் கீழ் இந்தியா முழுவதும் உள்ளன.

இவர்களுக்குக் கடன் கிடைப்பது அரிதாக இருந்தது.

முத்ரா திட்டத்தின் கீழ் மூன்று வகையான கடன்கள் வழங்கப் படுகின்றன.

1. சிஷு கடன் தொகை ரூ.50000 வரை
2. கிஷோர் கடன் தொகை ரூ.5 இலட்சம் வரை
3. தருண் கடன் தொகை ரூ.10 இலட்சம் வரை

இந்தத்திட்டம் தொடங்கியது முதல் ஜூலை 6, 2018 வரை 13 கோடியே 16 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ. 6.19 இலட்சம் கோடி

இந்த ஆண்டு ரூ.3 இலட்சம் கோடி கடன் அளிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முத்ரா கடன் பெறுவதற்கு www.udyamimitra.in <http://www.udyamimitra.in> நுழைவாயிலில் இணையதளத்தின் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

முத்ரா என்பது வங்கியல்ல. முத்ரா திட்டத்தின் கீழ் வங்கிகளில் இருந்து கடன் பெற முடியும்.

**முத்ரா கடன் வழங்கும் அமைப்புகள்:**

பொதுத்துறை வங்கிகள்

தனியார் துறை வங்கிகள்

அரசாங்கக் கூட்டுறவு வங்கிகள்

மண்டல கிராமியவங்கிகள்

நுண் நிதி வழங்கும் நிறுவனங்கள்

வங்கிகள் தவிர்த்த பிற நிதி கம்பெனிகள்

90 சதவீத முத்ரா கடன்கள் சிஷு பிரிவில் தான் வழங்கப்பட்டுள்ளன. எனவே முத்ரா கடன் சிறுதொழில்களுக்கு அதிகமாக உதவியுள்ளது.

முத்ரா கடன் பெற்றவர்களில் 74 சதவீதம் பேர் பெண்கள்


வளையல் செய்வது, அழகு நிலையம், அகர்பத்தி, தையல், நெசவு ஆகிய தொழில்களில் பெண்கள் திறமை பெற்றுள்ளனர்.

முத்ரா கடன் மூலம் புதிய நிறுவனங்கள் தழைத்து வளர்கின்றன.


28 சதவீத முத்ரா கடன்கள் புதிதாகத் தொழில்தொடங்கு வோருக்குத் தரப்பட்டுள்ளன.

முத்ரா கடன் பெற்றவர்களில் 55 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியின/இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆவர்.


**முத்ரா திட்டம்: பிரிவு வாரியான கடன் வங்கிக்கணக்குப்படி**




**முத்ரா திட்டம்: பிரிவு வாரியான கடன் கடன் தொகை அளவின்படி**



**பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்**




**பெண்களுக்கு 9.03 கோடி கடன்கள்**

**ஏப்ரல் 1, 2015 முதல் மார்ச் 31, 2018 வரை**

### வெற்றிச் சம்பவங்கள்

ஜெய்ப்பூரைச் சேர்ந்த ஹேமாரத்தோர். இவர் ஒரு பெண் தொழில்முனைவோர். இவரது கணவரும், மகன்களும் மூன்று மாத கால இடைவெளியில் அடுத்தடுத்து இறந்துவிட்டனர். இவரது நம்பிக்கை அனைத்தும் பொய்த்துப்போனது. இரண்டு விதவை மருமகள்களும், நான்கு பேரக்குழந்தைகளும் இவரை நம்பி இருந்தனர்.

இவரது கணவர் நடத்தி வந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை முத்ரா கடன் வாங்கி இவர் நடத்த ஆரம்பித்தார். இப்போது மாதம் ரூ.1.5 இலட்சம் சம்பாதிக்கிறார்.

என்.எஸ்.கே.சயானி. இவர் விஜயவாடாவைச் சேர்ந்தவர். தச்சுத் தொழிலாளி. மர நாற்காலி, மேசை கடை வைத்தார். ரூ.5 இலட்சம் முத்ரா கடன் பெற்று கடையை நடத்தினார். இப்போது இவரிடம் மூன்று பேர் வேலை பார்க்கின்றனர்.

முத்ரா திட்டத்தின் மூலம் வணிகக் காப்புறுதிக்கடன் தரப்படுகிறது. நஷ்டம் ஏற்பட்டால் 50 சதவீதம் காப்பீடு கிடைக்கும்.

குறைந்த வட்டியில் மறுநிதிக்கடன் தரப்படுகிறது

முத்ரா அட்டையின் மூலம் எல்லா நாளும் 24 மணி நேரமும் கடன் தொகை/இருப்புக்கு மேல் பற்றுத்தொகை ஆகியவற்றை எடுத்துக்கொள்ளமுடியும்

முத்ரா கடனில் மானியம் ஏதும் இல்லை. கடன் தொகையை முறையாகத் திருப்பி செலுத்திவர வேண்டும்.

முத்ரா கடன் பெறுவதற்கு உத்திரவாததமோ, துணைப் பிணையதாரரோ தேவையில்லை.

### எளிய நடைமுறை

வட்டிக்கு விடுவோரிடமிருந்து விடுதலை, அரசுத்துறை நிறுவனங்கள், பொதுத்துறைகள் ஆகியவற்றிற்கு பொதுவாகத் தேவைப்படும் பொருள்களும் சேவைகளும் இணையதளத்தில் ஜெம் நுழைவாயில் மூலம் வாங்கிக்கொள்ளப்படுகின்றன. அரசுத்துறைகளுக்கு பொருள்களை விற்பதன் மூலம் நிலையான தொடர்ச்சியான வருவாய்க்கு வழி பிறக்கிறது.

இந்தியாவில் பரந்துபட்ட வணிகச் சந்தை உள்ளது. தேவைகளும் அதிகமாக உள்ளன. புதிய தொழில் முனைவுகளை வளர்த்திட வாய்ப்பு உள்ளது. இப்போதிருக்கும் தொழிலை விரிவுபடுத்தவும் முடியும். பிரதமரின் முத்ரா திட்டம் இந்த திசையில் ஒரு மிகப்பெரிய முன்னெடுப்பாகும். ஜன்தன், ஆதார், கைபேசி மூவிணைப்பின் மூலம் நிதி சார் உள்ளடக்கம் பெருகியுள்ளது. அதிக எண்ணிக்கையிலானோர் கடன் பெற முடிகிறது.

**முத்ரா தொழில் முனைவோருக்கு உதவும் JAM கட்டமைப்பு**




பின்டெக் (FinTech) போன்ற புதுமையான நடைமுறைகள் மூலம் வருமானவரி, ஜிஎஸ்டி கணக்குகள் அடிப்படையிலும், தொழில்சார்ந்த TReDS, GEM விவரங்களின் அடிப்படையிலும் நேரடியாக வராமலேயே கடன் பெறமுடியும்.

- **ராஜீவ்குமார்,** செயலாளர், நிதி சேவைகள் துறை, இந்திய அரசு

# சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்: வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் பெருக்குவதற்கான புதிய கருவிகள்

- அருண்குமார் பாண்டா

இந்தியாவின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தான் தொடர்ந்து ஆக்கபூர்வமான வழிகளில் பங்களித்து வருகின்றன. இத்தகைய நிறுவனங்கள் சுயவேலைவாய்ப்பை வழங்குவதுடன், மற்றவர்களுக்கும் கணிசமான அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதால், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனி மதிப்பு உண்டு. மிகச் சிறிய தொழில் நிறுவனம் கூட இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உந்தித்தள்ளுகிறது. எனவே சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகப் போற்றப்படுவதில் எந்த வியப்பும் இல்லை. நாட்டின் சமத்துவமான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு குறு மற்றும் நடுத்தரத்தொழில்துறை அமைச்சகம் அதன் பங்களிப்பை செய்து வருகிறது.

### சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை: வேலைவாய்ப்பு உருவாக்கம்

இந்தியாவின் ஒட்டுமொத்த தொழில்துறை செயல்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களிக்கும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் முக்கியப் பங்காற்றுகின்றனர். இந்தியாவில் இன்றைய நிலையில், 7 கோடிக்கும் கூடுதலான சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. பல்வேறு வகையான அந்த நிறுவனங்கள் மூலம் நாடு முழுவதும் 12 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வேளாண்துறைக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய அளவில் சுயவேலைவாய்ப்பையும், மற்றவர்களுக்கான வேலைவாய்ப்புகளையும் இந்தத் துறைதான் உருவாக்கித் தருகிறது. அதுமட்டுமின்றி, இந்தத் துறையில்தான் குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று ரீதியாகவே நாட்டின் வளர்ச்சி நடைமுறையின் போது வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் காலப்போக்கில் உற்பத்தித்துறை, சேவைத்துறை சார்ந்த வேளாண்மை அல்லாத பணிகளுக்கு மாறி வந்திருக்கின்றனர். இதனால்தான் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகள் நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மிகவும் முக்கியமானவையாக மாறியுள்ளன. இந்தியாவில் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், இனி வரும் காலங்களில் பணி செய்வதற்கு ஏற்ற மக்கள்தொகை வரலாறு காணாத அளவு அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கும் நிலையில், இந்தப் பணியாளர்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு இந்தியாவில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை முக்கிய பங்காற்ற வேண்டும்.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறையில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக மனித மூலதனத்தை உருவாக்குதல், அதிலும் குறிப்பாக போக்குவரத்துக் கருவிகள், மின்சார இயந்திரங்கள், மரப் பொருள்கள், தோல் மற்றும் தோல் பொருள்கள், காகிதங்கள், ஜவுளித்துறை, கைவினைப் பொருள்கள் துறை போன்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ள உற்பத்தித்துறையில் மனிதவள முதலீட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

### செயல் திட்டம்

இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மிகவும் முக்கியமாகும். ஏனெனில், நாட்டின் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பிற துறைகள் மீது அடுக்கடுக்கான தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மை இந்தத் துறைக்கு உண்டு. உற்பத்தித்துறை அதற்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் சேவைகளை இந்தியப்பொருளாதாரம் சார்ந்த பிற துறைகளிடமிருந்து பெறுகிறது. அதற்கு மாற்றாக, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மற்ற துறைகளுக்கு விற்பனை செய்கிறது. இதன் மூலம், மூலப்பொருட்களில் தொடங்கி, தயாரிப்புப்பொருட்கள் வரை அனைத்து நிலைகளிலும் அவற்றின் தேவைகளை சிறு, குறு, நடுத்தரத்தொழில்துறை தான் தூண்டுகிறது. தேசிய உற்பத்திக் கொள்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதற்கு ஏற்ற வகையில், இந்தியாவின் உற்பத்தித்துறைக்கு

தான் 2022ஆம் ஆண்டிற்குள் 10 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் திறன் உண்டு. எனினும் இதைச் செய்வதற்கு அத்துறையில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும். இத்துறையில் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கான சில யோசனைகள் வருமாறு: 1. அதிக தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் திறன் கொண்ட தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல், 2. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் புதுமை கண்டுபிடிப்பு ஆய்வகங்களை அமைப்பதன் மூலம் அவற்றில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை அதிகரித்தல், 3. புதிய நடைமுறைகளைப் பயன்படுத்தி தொழிலாளர்களின் உற்பத்தித்திறனைப் பெருக்குதல், 4. குறித்த நேரத்தில் அரசின் வங்கிக்கடன்கள் கிடைப்பதை உறுதிசெய்தல், 5. உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சிறப்பான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறைக்கு சிறப்பான வளர்ச்சி வாய்ப்புகள் இருக்கும் போதிலும், அதன் உற்பத்தித் திறனையும் வளர்ச்சியையும் பாதித்து அதன் காரணமாக உடனடியாகவோ அல்லது சிறிது காலம் கழித்தோ வேலைவாய்ப்பு அல்லது சுயவேலை வாய்ப்பை பாதிக்கும் சவால்களையும் இத்துறை எதிர்கொண்டு வருகிறது. உதாரணமாக, உற்பத்தி செலவு அதிகரித்தல், தொழில்நுட்பம் சார்ந்த மாற்றங்கள், திறன் பெற்ற பணியாளர்களின் தேவை ஆகியவற்றுக்கு அதிக முதலீடு செய்யவேண்டியிருப்பதால், அது இத்துறையின் ஒட்டுமொத்த சூழல் அமைப்பையும் பாதிக்கிறது.

**கவனமான அணுகுமுறை**

இந்தியா வேலை தேடுவோரின் நாடாக இல்லாமல், வேலை உருவாக்குபவர்களின் நாடாக மாறவேண்டும் என்ற இலட்சியத்தை எட்டும் நோக்குடன் தொழில் முனைவுத் தன்மைக்கு ஆதரவு அளிப்பதில் கவனமான அணுகு முறையை சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சகம் வழங்கிவருகிறது. இத்துறையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை உணர்ந்துள்ள மத்திய அரசு, விரிவாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் இத்துறைக்குப் புத்துயிரூட்டுவதும், அதன் பயனாக அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் அவசியம் என்பதையும் உணர்ந்திருக்கிறது. எனவே, இத்துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ஏராளமான திட்டங்களை நாடு முழுவதும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் முத்ரா, பாரம்பரிய தொழில்துறைகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கான திட்ட நிதி, தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இவை தவிர, காதி கிராமத் தொழில்கள், தென்னை நார் தொழிற்சாலைகள் போன்றவை முறையே காதி கிராமத்தொழில் ஆணையம் மற்றும் தென்னை நார் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை இரண்டும் இந்தியாவின் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மிகப் பெரிய அளவில் பங்களிக்கின்றன.

**சந்தை வாய்ப்புகளை அதிகரித்தல்**

சிறு, குறு தொழில்நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்தல், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசுக்குத் தேவையான பொருட்களை கொள்முதல் செய்வதில் சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்க இந்திய அரசின் பொது கொள்முதல் கொள்கை வகை செய்கிறது. இதன் மூலம் தொழில் முனைவோருக்கு இந்திய அரசு உதவி செய்கிறது. இதுதொடர்பாக பொதுக் கொள்முதல் கொள்கையில் இடம்பெற்றுள்ள விதிகளின்படி, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் பிற அரசுத்துறைகளின் ஒட்டுமொத்த பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதலில் குறைந்த பட்சம் 20%, சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களிடமிருந்துதான் செய்யப்படவேண்டும். அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் சிறு, குறு தொழில் நிறுவனங்களில் 4% நிறுவனங்கள் பட்டியலினம் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுவதாக இருக்கவேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பொதுக் கொள்முதலில் பங்கேற்பது குறித்த வழிகாட்டுதல்களை பட்டியலினம் / பழங்குடியின தொழில் முனைவோர் உள்ளிட்ட சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சம்பந்த் இணையதளம் வழங்குகிறது. இதன் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கம் அதிகரிக்க வகை செய்கிறது.

பட்டியலின / பழங்குடியின தொழில் முனைவோருக்கான பொதுக்கொள்முதல் கொள்கையின் நோக்கங்களை சிறப்பாக நிறைவேற்றும் நோக்குடன், தேசிய பட்டியலினர் / பழங்குடியினர் மையத்தை 2016ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். பட்டியலினம் மற்றும் பழங்குடியினர் மத்தியில் தொழில் முனைவை ஊக்குவிப்பதில் இந்த மையம் அதிக கவனம் செலுத்தும்.

சிறு, குறு தொழில் நிறுவனங்களை அமைப்பதற்காகத் தேவைப்படும் தொழில்துறை செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இளைஞர்களிடையே திறனை வளர்க்கும் நோக்குடன் அதிக எண்ணிக்கையிலான தொழிற்பயிற்சி மற்றும் தொழில் தொடங்கல் வளர்ச்சித்திட்டங்களை சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சகம் நடத்திவருகிறது. தொழில் முனையும் திறன்மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழில் முனைய வாய்ப்புள்ளவர்களின் திறன் மேம்படுத்தப்படுகிறது. தொழில் முனையும் தகுதி கொண்டவர்களின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதற்கான மேலாண்மை நடைமுறைகள் குறித்து மேலாண்மை மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சிறுதொழில் முனைவோருக்கு தேவையான கடன் வசதியை ஏற்படுத்தித்தருதல், மூலப்பொருட்களை மிகக் குறைந்த விலையில் வழங்குதல், பயிற்சி அளித்தல், சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான யோசனைகளை வழங்குதல், அவற்றின் மூலம் இத்துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என மத்திய சிறு, குறு, நடுத்தரத்தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனமான தேசிய சிறுதொழில் கழகம் சிறு, குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றி வருகிறது.

### சரியான நேரத்தில் கடன் கிடைக்க வகை செய்தல்

தொழில் முனைவோருக்கு அவர்களுக்குத் தேவையான நேரத்தில் கடன் கிடைப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. இந்த அவசரத் தேவையை கருத்தில் கொண்டு சிறு, குறு, நடுத்தரத்தொழில் முனையும் சூழல் அமைப்புக்கு உதவும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மத்திய சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறையைப் பொறுத்தவரை, பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 80% அதிகரிக்கப்பட்டுள்ளது. 2017 18ஆம் ஆண்டில் 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருப்பதன் மூலம் 48,398 குறு நிறுவனங்கள் உதவி செய்துள்ளன. அதேபோல், 2018 19ஆம் ஆண்டில் 5 இலட்சம் பேருக்கு வேலை வழங்கும் நோக்குடன் 70,000 குறு நிறுவனங்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து குர்கான் நகரில் உள்ள மேலாண்மை மேம்பாட்டு நிறுவனம் ஓர் ஆய்வு நடத்தியது. அதில், பிரதம மந்திரியின் வேலை உருவாக்கத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுவனமும் சராசரியாக 7.62 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதாகவும், ஒருவருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித்தர 96,000 ரூபாய் மட்டுமே முதலீடு தேவைப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

மத்தியில் தற்போது ஆட்சி செய்து வரும் அரசின் முத்திரைத் திட்டங்களில் முக்கியமானது முத்ரா ஆகும். குறு நிறுவனங்கள் சூழல் அமைப்புக்கு வரலாறு காணாத கடன் வசதியை இந்தத் திட்டம்தான் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட நிலையில், சுமார் 5 கோடி நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் இந்தத் திட்டம் சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் சூழல் அமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமின்றி, வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் முனையும் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கும் முத்ரா திட்டம் மிகப்பெரிய அளவில் பங்களித்துள்ளது.

சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறையில் மத்திய அரசு மேற்கொண்ட மற்றொரு முக்கிய நடவடிக்கை கடன் உத்தரவாத நிதியத்தின் மூலதனத்தை 2 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 8 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக உயர்த்தியதுதான். இத்திட்டத்தின்கீழ் 2018 19ஆம் ஆண்டில் சிறு, குறு நிறுவனங்கள் தொழில்துறை சூழல் அமைப்புக்கு வரலாறு காணாத வகையில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் 19,000 கோடி முதல் 20,000 கோடி வரை கடன் வழங்கப்பட்டிருந்த நிலையில், இத்திட்டத்தின்படியான கடன் உத்தரவாதம் நடப்பாண்டில் 40,000 கோடி ரூபாயைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சகம் அண்மையில் சூரிய சக்கர இயக்கத்தை தொடங்கியது. இப் புதிய திட்டத்தின் முதல்கட்டமாக 50 சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனத் தொகுப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள சுமார் 1 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களில் பெரும்பான்மையானோர் மகளிராக இருப்பார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் மற்றும் முயற்சிகள் புதிய தொழில் நிறுவனங்களை தொடங்க தொழில்

முனையும் எண்ணம் கொண்டவர்களுக்கு உதவி செய்வதுடன் ஊக்குவிக்கவும் செய்கின்றனர். இத்திட்டங்கள் பெரும்பாலும், பெண்களுக்கும், பட்டியலினம் மற்றும் பழங்குடியினர் போன்ற ஒதுக்கப்பட்ட சமுதாயப் பிரிவுகளுக்கும் பயனளிக்கும் நோக்கம் கொண்டிருப்பதால், இவை சமுதாய நோக்கம் கொண்டவையாகும்.

**மத்திய அரசின் உந்துதல்**

மத்திய அரசு அதன் பல்வேறு அமைச்சகங்கள் மூலம், குறிப்பாக சிறு, குறு, நடுத்தரத்தொழில்துறை அமைச்சகம் மூலம் அளித்து வரும் உந்துதல் காரணமாக, கடந்த 4 ஆண்டுகளில் இத்துறையில் ஏராளமான முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன. நிதி அடிப்படையில் பார்த்தால், இத்திட்டங்களுக்கான நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடு, கடந்த 2010 14 ஆண்டுகளைவிட, 2014 18ஆம் ஆண்டில் 41% அதிகரித்துள்ளது. இந்தக் காலத்தில் காதி மற்றும் கிராம தொழில் நிறுவனங்கள் ஒரு கோடியே 41 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து, அதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளன. கடன் உத்தரவாத நிதியம், பிரதம மந்திரியின் வேலை உருவாக்கத் திட்டம், பாரம்பரியத் தொழில்களை மீட்டுருவாக்கம் செய்வதற்கான திட்டநிதி ஆகியவை முறையே 51.11 இலட்சம், 14.78 இலட்சம், 60 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துள்ளன.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், சமூக உள்ளடக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பிரதம மந்திரியின் வேலை உருவாக்கத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புகளில் 30%, அதாவது 4.43 இலட்சம் வேலைவாய்ப்புகள் பெண்களுக்கானவை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், இத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் வேலை பெற்றவர்களில் 1.74 இலட்சம் பேர் பட்டிலினத்தவர்கள், 1.31 இலட்சம் பேர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சகம் மூலம் நாடு முழுவதும் 18 தொழில்துறை பயிற்சி அறைகளும், ஏற்கெனவே உருவாக்கப்பட்டவை தவிர, கூடுதலாக 15 தொழில்நுட்ப மையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிக எண்ணிக்கையில் தொழில் முனைவோர் மற்றும் வேலை தேடுவோருக்கு பயிற்சி அளிக்க இது உதவும். 18 தொழில் பயிற்சி அறைகளில் இப்போது 1.5 இலட்சம் பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் பலர் சொந்தமாக தொழில் நிறுவனங்களை அமைத்துள்ளனர். எனினும், இத்தகைய பயிற்சி பெற்றவர்களில் பெரும்பான்மையினர் மற்ற நிறுவனங்களில் வேலை பெற்றுள்ளனர். அண்மையில் இந்தியக் குடியரசுத் தலைவர் சிறு, குறு, நடுத்தரத்தொழில் தொடர்பு இணையதளத்தை அறிமுகம் செய்துவைத்தார். இந்த இணைய தளத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள் இருக்கும். இவற்றை தொழில் நிறுவனங்களை நடத்துவோர் பார்த்து, தங்களுக்குத் தேவையான பணியாளர்களை தேர்வு செய்யலாம். இதன் மூலம், தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்க இந்த இணையதளம் வகை செய்கிறது.

**நிறைவுரை**

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம் கடைசியாக நடத்திய கணக்கெடுப்பின் படி, இந்தியா முழுவதும் 6.34 கோடி சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவை பொருள்கள் மற்றும் சேவை வரி தளத்தில் தங்களை பதிவு செய்துகொள்வதன் மூலம் முறைசார்ந்த பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. பொருள்கள் மற்றும் சேவை வரித் தளத்தில் மிக அதிக அளவில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள், சிறு குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிறுவனங்கள் அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் பெறுவதற்குத் தகுதிபெற்றவையாகும். இந்தியாவின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கத்திற்கான புதிய கருவி சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தான் என்ற உண்மையை மத்திய அரசு அங்கீகரித்திருப்பதன் மூலம், இந்தியா புதிய பொருளாதார பயணத்தைத் தொடங்கியுள்ளது. புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு பண்ணை சாரா வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், உத்வேகத்தையும் மத்திய சிறு, குறு, நடுத்தரத்தொழில்துறை அமைச்சகம் வழங்கி வருகிறது. இது சிறு, குறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவது மட்டுமின்றி, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், அதன் சமத்துவ வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க வகையில் பங்களிக்கிறது.

– **அருண்குமார் பாண்டா,** செயலாளர், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சகம்

# சாலைகள் மேம்பாடு: மறைமுக வேலைவாய்ப்புகள்

- யுதிர் சிங் மாலிக்

1,26,000 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைந்திருக்கும் தேசிய நெடுஞ்சாலைகள் இந்தியப் பொருளாதரத்தின் உயிரோட்டமகத் திகழ்கின்றன. நாட்டில் உள்ள ஒட்டுமொத்த சாலைகளில் தேசிய நெடுஞ்சாலைகள் வெறும் 2 சதவீதம்தான் என்றாலும் இந்தியாவின் பயணிகள் போக்குவரத்தில் ஏறத்தாழ 70 சதவீதமும், சரக்குப் போக்குவரத்தில் 60சதவீதத்திற்கும் அதிகமான அளவிலும் இதன் மூலம் நடைபெறுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகள் வளர்ச்சித் திட்டம் (The National Development Program - NHDP) 1998இல் தங்க நாற்கரச்சாலைத் திட்டத்தைத் தொடங்கியது. இதனை அடுத்து வடக்கு தெற்கு, கிழக்குமேற்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப் பட்டன. இவை கடந்த 15 ஆண்டுகளில் தேசிய நெடுஞ் சாலைகள் அமைப்பதில் பெற்ற வெற்றிகளின் முக்கியமான தூண் போல ஆகியிருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகள்வளர்ச்சித் திட்டம் 1998 முதல் 2017 வரையான காலத்தில் எட்டு கட்டங்களைக் கடந்து முன்னேறியுள்ளது. அரசாங்கம் பாரத்மாலா பரியோஜனா முதற்கட்டத்தினை தொடங்க முடிவு செய்துள்ளது. இது மிகப்பெரிய இலட்சியத் திட்டமாகும். பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு (Cabinet Committee on Economic Affairs - CCEA) இந்தத்திட்டத்திற்கு அக்டோபர் 24, 2017இல் நடைபெற்றக் கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. கட்டமைப்பில் இருக்கும் இடை வெளிகளை நிரப்பி பயணிகள், சரக்குப் போக்குவரத்துக்களை நாடு முழுவதும் மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தி வருகிறது. மொத்தம் 24,800 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய நெடுஞ்சாலைப் பாதைகள் 2021-22க்குள் முதல் கட்டமாகப் புதிதாக அமைக்கப் படவுள்ளன. இதனோடு கூட, தேசிய நெடுஞ்சாலைத்திட்டத்தின் நிலுவையில் உள்ள 10,000 கிலோமீட்டர் சாலைகளும் இந்த காலகட்டத்தில் அமைப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. ஆக, மொத்தம் 34,800 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய சாலைகள் தற்போதிருக்கும் சாலை அமைப்புடன் சேரும். இதற்கு ரூ.5,35,00 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதோடு கூட, ரூ.1,57,324 கோடி செலவில் நடப்பில் உள்ள பிற திட்டங்களின் கீழ் 48,877 கிலோமீட்டர் நீள சாலைகளையும் போட்டு முடிக்கக் கருதப்பட்டுள்ளது. பாரத்மாலா திட்டத்திற்கும், அமலில் இருக்கும் பிற திட்டங்களுக்குமாக ஐந்தாண்டுகளில் ரூ.6,92,324 கோடி செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகத்தின் இந்தத் திட்டங்கள் போக்கு வரத்துத்துறையில் பெருமளவு முதலீட்டையும், ஏராளமான வேலை வாய்ப்பு களையும் அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதில் நேரடி வேலை வாய்ப்புகள், வடிவமைப்பு ஆலோசகர்கள், சிவில் எஞ் சினியர்கள், தரக்கட்டுப்பாடு பணிகள், ஆய்வகப் பணிகள், கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் இயந்திரவியல் பணியாளர்கள், கருவிகளை இயக்குவோர், கட்டுமான உருவாக்கம், ஆய்வகத் தொழில்நுட்பப் பணியாளர்கள், நில அளவையாளர்கள், வடிவமைப்பு மேற்பார்வை ஆகியவற்றில் திறன்கள் கொண்டுள்ள மனிதவளம், கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற பலவகையான வேலை வாய்ப்புகள் இதில் உருவாகும். முழுமையான திட்ட அறிக்கைகளை மிகவும் துல்லியமாகத் தயாரிப்பதற்கு பயன்படக்கூடிய LiDAR (Light Detection and Range) தொழில் நுட்பத்திற்குத் தேவைப்படக்கூடிய பயிற்சி பெற்ற மனித வளத்தேவை திடீரென அதிகரித்துள்ளது. தோராயமாக 14 கோடியே இரண்டு இலட்சம் மனித நாள்களுக்கான வேலைகள் 2022ஆம் ஆண்டு வரையிலான தேசிய நெடுஞ்சாலைக் கட்டுமான காலகட்டத்தில் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாலை அமைப்பது என்பது தளவாடப் பொருள்கள்,

உபகரணங்கள் வழங்குதல் போன்ற உப துறைகளில் மறைமுக வேலை வாய்ப்புகளைப் பெருக்கும். அதே சமயத்தில் தேசிய நெடுஞ் சாலைத்திட்டம் உள்ளூர் பொருளா தாரத்தையும் ஊக்குவிக்கும். நகர்ப்புற சந்தைகளை எளிதில் சென்றடைய முடியும் என்பதாலும், சாலை இணைப்பு பெருகுவதால் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

நெடுஞ்சாலை, போக்கு வரத்துத் துறைகளில் திறன் வளர்ப்பு களுக்கன பயிற்சிகளையும் அமைச்சகம் நடத்திவருகிறது. முன்பே அறிந்து வைத்துள்ள திறன்களை ஏற்றுகொள்வது என்ற புதிய முன் முயற்சியும் மேற்கொள்ளப் படுகிறது. முன்பே அறிந்துவைத்துள்ள திறன்களை ஏற்றுகொள்வது (Recognition of Prior Learning -RPL) என்பது பிரதம மந்திரி திறன் வளர்ப்புத்திட்டத்தின் (Piradhan Mantri Kaushal Vikas Yojana - PMKVY) ஒரு பகுதியாக இருக்கிறது. திறன் வளர்ப்பு, தொழில் முனைவு அமைச்சகத்தால் செயல் படுத்தப்படும் இந்தத் திட்டம் 2020 வாக்கில் 10 மில்லியன் இளைஞர் களுக்கு பயிற்சி அளித்திடும். கட்டுமானம் நடைபெறும் இடங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பயிற்சி தரும் அமைப்புகளின் மூலம் சாரம் அமைப்பது, நழுவி அடைக்கும் கதவுகள், கொத்துவேலை, கம்பிகளை வளைப்பது, வண்ணம் பூசுவது, குடிநீர், வடிநீர்க் குழாய்கள் அமைப்பது, ஆகிய ஆறு பிரிவுகளில் பயிற்சிகள் தரப்படும். பயிற்சிக்காகும் செலவு, தேவைப்படும் கருவிகள், மதிப்பீடு கட்டணம், பணியிடத்தி லிருந்து பணியாளர்களை அழைத்துச் சென்று திரும்பவும் கொண்டுவந்து விடுவதற்காகும் போக்குவரத்து செலவு ஆகியவை பயிற்சி செலவுகளில் அடங்கும். தேர்ச்சி பெறுபவர்களுக்கு தொழில் பயிற்சிக்கான தேசிய குழு (National Council for Vocational Training - NCVT) சான்றிதழ்களை வழங்கும். இதன் மூலம் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு பயிற்சி தருவதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதுவரையிலும் 63,000 தொழிலாளர்கள் பயிற்சி பெறுவதற்கு பதிவு செய்துகொண்டுள்ளனர். இதில் 33,023 பேர் பயிற்சியை முடித்துள்ளனர். 11,011 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஓட்டுநர் பயிற்சி, ஆராய்ச்சி நிறுவனங்களை (Institues of Driving Training and Research - IDTR) மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் அமைப்பதற்கு அமைச்சகம் திட்டங்களை வகுத்துள்ளது. சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தொடங்கப் பட்டுள்ள இந்த நிறுவனங்கள் ஓட்டுநரின் நடத்தையை சில வகை நுட்பங்களின் மூலம் மேம்படுத்துகிறது. வேலை இல்லாத இளைஞர்களுக்கு கனரக வாகனங்களை இயக்கும் பயிற்சி தருவதற்கு மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் ரூ.150 கோடி நிதியை அமைச்சகம் அளித்துள்ளது. நாடு முழுவதும் லாரி ஓட்டுநர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் வேலைவாய்ப்புகள் கிடைக்க இதுஉதவும்.

சாலைப் போக்குவரத்துப் பிரிவில் வேலைவாய்ப்பு பற்றியும், தற்போது பணிபுரிந்து வருபவர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றியும் மதிப்பிடுவதற்கு இதற்கு முன்பு வரை முறையான முயற்சிகள் இல்லாமல் இருந்தது. எனவே, அமைச்சகம் தற்போது இத்துறையின் வேலைவாய்ப்பளிக்கும் தன்மை, திறன் மேம்பாட்டுத்தேவைகள் ஆகியவை பற்றி தெரிந்துகொள்ள ஒரு ஆய்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஆய்வின் முடிவுகளும், பரிந்துரைகளும் எதிர்காலத்தில் சாலைப் போக்குவரத்துத் துறையில் செயல்படுத்தப்படும்.

- **யுதிர் சிங் மாலிக்,** செயலாளர், சாலைப் போக்குவரத்து, மத்திய அரசு.

அடுத்த இதழில்

# பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

பற்றிய கட்டுரைகள் இடம் பெறும்

# இந்தியத் தொழிலாளர் சந்தை: கொள்கை முடிவுகள்

- பிரவின் ஸ்ரீவஸ்தவா

2008-09இல் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை காரணமாக தொழிலாளர்கள் மீது ஏற்பட்ட தாக்கங்கள், சிக்கல்களைப் பொறுத்தவரை அவற்றில் இருந்து மீண்டு வருவதற்கு ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு வகையான சமூக அரசியல் பொருளாதார உபாயங்களைக் கடைபிடித்தன. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation - ILO) உலகத்தில் வேலைவாய்ப்பு, சமூக மனநிலை ஆகியவை பற்றிய அதன் பார்வையை 2015ஆம் ஆண்டு வெளியிட்டது. அதில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலகளாவிய வேலைவாய்ப்பு வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியுடன் ஒத்ததாக அமைந்திருக்காது என்று கூறப்பட்டிருந்தது. பொருளாதார மந்த நிலை ஏற்படுவதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் 31 மில்லியன் அதிகமாக 201மில்லியன் என்ற அளவில் உலக வேலைவாய்ப்பு நிலை இருக்கும் என்று கணிக்கப் பட்டிருந்தது. உலகம் தழுவிய அளவில் வேலைவாய்ப்பின்மை 2015 ஆம் ஆண்டில் மூன்று மில்லியன் அதிகரிக்கும் அதற்கடுத்த நான்கு ஆண்டுகளில் எட்டு மில்லியன் என்ற அளவை அது எட்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. உலக அளவில் வேலைவாய்ப்பில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை நிரப்புவதற்கு 2019 வாக்கில் 280 மில்லியன் வேலைவாய்ப்புகள் கூடுதலாக உருவாக்கப்பட வேண்டிய தேவை இருந்தது.

உலகமயம், சர்வதேச சந்தைகளை அளாவிய நிலை ஆகியவற்றால் பாதுகாப்புக் கவசங்கள் தகர்ந்தன. உள்நாட்டுத் தொழிலாளர் சந்தையில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்களை அறிந்து அளவளாவி முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கு சர்வதேசக் கூட்டுறவு இன்றியமையாத ஒன்றாகும். ஜி20, ப்ரிக்ஸ் (BRICS) போன்ற அமைப்புகளின் மூலம் பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்வது தொழிலாளர், வேலைவாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகளை ஒருமுகப்பட்ட முயற்சிகள் மூலம் தீர்ப்பதற்குத் துணைபுரியும். உதாரணமாக, ப்ரிக்ஸ் நாடுகளை எடுத்துக் கொள்ளலாம். இங்கு உலக மக்கள் தொகையில் 42 சதவீத மக்கள் வாழ்கின்றனர். ஒட்டுமொத்த உலக உற்பத்தியில் 20 சதவீத பங்களிப்பை இவை செய்கின்றன. உலகத் தேவைகளை எதிர்கொள் வதற்கான திறன் இந்த நாடுகளிடம் உள்ளது. இந்தியாவும் கூட ஒரே மாதியான பாதையில் பயணித்ததால் வேளாண்மையும் அது சார்ந்த பிரிவுகளிலுமான பங்களிப்பில் கடுமையான வீழ்ச்சியைக் கண்டது. 1950-51இல் 52 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 2017 -18இல் 17 சதவீதமாக சரிந்தது. சேவைத் துறைகளில் இதேகால கட்டத்தில் 35 சதவீதத்திலிருந்து 54 சவீதமாக உயர்வு ஏற்பட்டது.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (National Sample Survey) வேலைவாய்ப்பு, வேலை வாய்ப் பின்மை கணக்கெடுப்பு 2011-12இன் படி, 484.7 மில்லியன் தொழிலாளர் களில் 49 சதவீதத்தினர் இன்னமும் வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். 27 சதவீதத்தினர் சேவைத்துறையிலும், 24 சதவீதத்தினர் தொழிற்சாலை களிலும் பணிபுரிகின்றனர். தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் (74%) கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். முறைசாரத் துறைகளில் 93 சதவீதம் பேரும், சுய வேலைவாய்ப்பில் 52 சதவீதம் பேரும் ஈடுபட்டுள்ளனர். பெண் தொழிலாளர்கள் 22 சதவீதம் மட்டுமே. கட்டுமானத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக வேளாண் துறையில் இருந்து தொழிலாளர்கள் அதிகமாகச் சென்றுவிட்டனர். ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிக்கும் விதத்தை வைத்துப் பார்க்கும்போது தொழிற் சாலை களின் வளர்ச்சியும், அவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பும், பணியாளர் எண்ணிக்கை அதிகரிப்பும் மனதை ஈர்க்கின்றன. இந்த காலகட்டத்தில் ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன. எனினும், 98 சதவீத தொழில் அமைப்புகள் பத்திற்கும் குறைவான தொழிலாளர்களையே கொண்டுள்ளன. சிறு அமைப்புகளில் காணப்படும் ஏற்ற இறக்கமும், தொழிலாளர் இடப்பெயர்வும் இதனைப் பற்றி கணிப்பதற்கு முடியாமல் செய்துவிடுகின்றன. இந்தியாவின் தொழிலாளர் சந்தையின் வரையறையை இந்த அளவுகளே வெளிப்படுத்துகின்றன.

2004-2005 முதல் 2011-2012 வரையான காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1.8 மில்லியன்

தொழிலாளர்கள் புதிதாக இணைந்தனர். அநேகமாக அவர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்தது. வேலைவாய்ப்பு விகிதம் 2.2 சதவீதம் என்ற அளவில் நிலையாகவே இருந்தது. இந்தியாவின் வேலை வாய்ப்பு சந்தையைப் பொறுத்தவரை உலகப் பொருளாதார மந்த நிலை தனது மீட்டெழுச்சியைக் காட்டியது. எனினும், இந்தியாவின் மக்கள்தொகை ஈவுத்தொகை மிக அதிகம் என்பதால் இளைஞர்களை அணியப்படுத்தி இளைஞர்களின் வேலைவாய்ப்பு விகிதத்தை ஆறு சதவீத அளவுக்கு உயர்த்துவது அவசியமாகிறது.

இந்தப் பின்புலத்தில் இந்தியாவின் தொழிலாளர் சந்தையை மேம்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவம் அளித்துவருகிறது. அவைபற்றி விரிவாகக் காண்போம்.

### தொழிற்சாலைகளில் தனியார் மூலதனத்திற்கு ஊக்கமளித்தல்

சமீப ஆண்டுகளில் இந்தியாவில் உற்பத்தி, திறன் இந்தியா, தேசிய உற்பத்திக்கொள்கை 2015, எளிதாகத் தொழில் செய்தல், அடல் புதுமையாக்கத்திட்டம், 100 சீர்மிகு நகரங்கள், 500 அம்ருத் நகரத் திட்டங்கள் ஆகிய கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன. இத்தகைய முயற்சிகள் வேலை உருவாக்கத்தில் உத்வேகத்தை அளித்துள்ளன. வழங்கல், தேவை ஆகிய இரு புறங்களிலும் வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது.

### தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்

அரசாங்கம் தேசிய திறன் மேம்பட்டுத்திட்டத்தைத் தொடங்கியுள்ளது. 126 தொழில்களில் திறன் பயிற்சி 12000 தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் அளிக்கப் படுகிறது. இந்த மையங்களில் 1.71 மில்லியன் தொழிலாளர்கள் பயிற்சி பெறமுடியும். இந்தப் பயிற்சியின் தரத்தை உயர்த்துவதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தொழில் பழகுநர் பயிற்சி கணிசமாக அதிகரிக்கப் பட்டுள்ளது. தேசிய திறன் மேம்பாட்டு முகமை (National Skill Development Agency - NSDA) இந்தப் பயிற்சிகளை ஒருங்கிணைக்கிறது. பயிற்சிக்கான தேவைகள் இருக்கும் பகுதிகள் கண்டறியப்பட்டு அதற்கேற்ற வகைகளில் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

### வேளாண்மை அல்லாத வேலை வாய்ப்புகள்

கிராமப்புறங்களில் உள்ள மனித ஆற்றலை மேம்படுத்த தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டம், க்ருஷி விகாஸ் திட்டம், வேளாண் வணிக மையங்கள், சிறு விவசாயிகள் வேளாண் கூட்டுறவு சங்கம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், பெண்கள் கூட்டுறவு சங்கங்கள் போன்றவை அமைக்கப்படுகின்றன.

### பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவையை நவீனமயமாக்கல்

வேலைவாய்ப்பு சேவைகள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேம்படுத்தப் படுகின்றன. வேலை தேடுபவர்களுக்கென்று ஒரு தேசிய இணையதள நுழைவாயில் www.ncs.gov.in <http://www.ncs.gov.in> என்ற முகவரியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ளது. வேலை வழங்குபவர்கள், பயிற்சி தருபவர்கள் ஆகியோருக்கு பொதுவான தளம் இதுவாகும். பொருத்தமான வேலைகளையும், வேலைவாய்ப்புக் கண்காட்சிகள் பற்றிய தகவல்களையும், பயிற்சி, மறுதிறன் பெறும் வாய்ப்புகளையும் இந்த தளம் வழங்குகிறது.

### தொழிலாளர் நல சீர்திருத்தங்கள்

தொழிலாளர் சட்டங்களில் நிலவும் நிச்சயமின்மை, சிக்கல்கள் ஆகியவற்றைக் குறைப்பதற்கு தேவையான சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் நோக்கத்தோடு இவை கொண்டுவரப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் உரிமைகள், தாவாக்கள் தீர்வு, சிறந்த நிர்வாகத்திற்கான முறைகளை செயல்படுத்துவது ஆகியவை இதன் நோக்கங்கள். தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்கள் அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் ஊதியம், தொழிலக உறவுகள், சமூக பாதுகாப்பு, நலம் பாதுகாப்புப் பணி நிபந்தனைகள் என்ற நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன. இவற்றை எளிமைப்படுத்தி, ஒன்றிணைத்து, பொருத்தமான பிரிவுகளை நடைமுறைக்கு ஏற்றதாக மாற்றி அமைத்திட வரைவுகள் தயாராகி வருகின்றன.

### பெண் தொழிலாளர்கள் பங்கேற்பை அதிகரித்தல்

வேலைவாய்ப்புச் சந்தையில் பெண்களின் எண்ணிக்கை குறைவது கவலை அளிப்பதாக உள்ளது. 2004-05இல் 43 சதவீதமாக இருந்த பெண்களின் விகிதபாகம் 2011-12இல் 39.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் பெண்களின் பங்கேற்பு 29 சதவீதத்திலிருந்து 22.5 சதவீதமாக சரிவு கண்டிருப்பது கவலை தருகிறது. பெண்களின் பங்கேற்பை அதிகரிக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புப் பெருக்கத் திட்டம், திறன் மேம்பாட்டிற்கான தொழிற் பயிற்சி ஆகியவற்றில் பெண்கள் பங்கேற்பை அதிகரிக்க அரசு பல முயற்சிகளை செய்துவருகிறது. அரசுப் பணிகளில் இருக்கும் பெண்கள் தங்களின்

குழந்தைகளை பராமரித்து வளர்ப்பதற்கு இரண்டு ஆண்டுகள் வரை விடுமுறை அளிக்கப்படுகிறது. குடும்பக்காரணங்களுக்காக வேலையை விட்டுச் சென்றுவிட்ட பெண்களைத் திரும்பவும் அழைத்துக்கொள்ளும் முறைகளை தனியார் துறையும் கடைபிடிக்கிறது.

பணிபுரிபவர்களில் 52 சதவீதம் பேர் சுய வேலைவைப்புகளில் ஈடுபட்டுவருபவர்கள் ஆவர். இவர்கள் வீட்டில் இருந்தபடியே வேலை செய்கின்றனர். இவர்களுக்கும் பொருந்தக்கூடிய கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

### முறைசாராத் தொழில்களை முதன்மை நீரோட்டத்தில் இணைத்தல்

முறைசாராத் தொழில்களி லேயே மிக அதிகமானவர்கள் ஈடுபட்டுள்ளனர். சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் வாய்ப்புகளை மிகுவித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அதிகமானவர்களைச் சென்றடையச் செய்தல் ஆகிய முயற்சிகள் பலனளிக்கும். காப்பீடு, ஓய்வூதியத்துறைகளில் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா, பிரதம மந்திரி சுரக்ஷ பீம யோஜனா, அடல் ஓய்வூதியத்திட்டம் ஆகிய மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அரசு கொண்டு வந்துள்ளது.

இது குறிப்பாக ஏழைகள், சலுகைகள் அற்ற நிலையில் இருப்போர் ஆகியோருக்கு உதவுகிறது. அனைத்து குடிமக் களுக்கும் அவசியமான பாதுகாப்பை மிக குறைவான செலவில் அளிக்கிறது. அவர்களின் வங்கிக் கணக்குகளோடு இணைக்கப் பட்டதாக இந்தத் திட்டங்கள் செயல்படுகின்றன. எற்கனவே நடைமுறையில் இருக்கும் மருத்துவக் காப்பீடு (ESIC), நிதிக்கொடை/ ஓய்வூதியம் (EPFO) ஆகியவையும் முறைசார பிரிவில் பணிபுரிபவர்களையும், கட்டுமானப் பணியாளர்களையும், ஒப்பந்தப் பணியாளர்களையும் உள்ளடக்கிய தாக மாற்றப்பட்டு வருகிறது. நிதிக்கொடை/ஓய்வூதியம் (EPFO) தகவல்களில் இருந்து செப்டம்பர் 2017 முதல் ஜூன் 2018 வரை ஒவ்வொரு மாதமும் 8600 நிறுவனங்களும், 85000 புதிய ஊழியர்களும் புதிதாகச் சேர்ந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. ஒட்டுமொத்தமாக பத்து இலட்சம் புதிய பணிக்கொடை கணக்கு எண்கள் (Universal Account Number) வழங்கப் பட்டுள்ளன.

### தீவிர தொழிலாளர் சந்தைக் கொள்கைகள் (ALMPS)

தீவிரமான கவனம் தேவைப்படும் ஒரு பகுதி இதுவாகும். தீவிர தொழிலாளர் சந்தைக் கொள்கை களை அமலாக்கவும், நிதி உதவி அளிக்கவும், சுய வேலைவாய்ப்புக்கு நிதிஉதவி, ஊதிய மானியங்கள், பயிற்சித்திட்டங்கள், வேலைவாய்ப்பு உறுதித்திட்டங்கள் போன்றவற்றின் பயன்கள் கிடைக்கும் விதத்திலும் இதன் அமலாக்கம் அமைதல் வேண்டும். குறிப்பிட்ட சில சவால் களை எதிர்கொள்ளும் விதத்தில் இந்தக் கொள்கைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

தீவிர தொழிலாளர் சந்தைக் கொள்கைகளுக்கு போதுமான நிதி ஒதுக்குவது வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வளர்ந்துவரும் மற்ற பொருளாதாரங்களைக் காட்டிலும் பிரிக்ஸ் நாடுகள் இதற்கு அதிகமான நிதியை ஒதுக்குகின்றன என்பது 2000மாவது ஆண்டு முதற்கொண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் காட்டுகின்றன. நிதி ஒதுக்கீடு ஏற்படுத்தக்கூடிய விளைகள் பற்றி தீர ஆராய்ந்து அந்தந்த நாடுகளின் சூழல்களுக்கு ஏற்ப நிதி அளிப்பது அவசியமாகும்.

### முடிவுரை

இந்தியா போன்ற பரந்த தேசத்தில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய முதலீடுகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் நோக்கங்களை விரிவாக்குதல், தொழிலாளர் சீர்திருத்தம் போன்ற பலமுனை இடையீடுகள் மூலம் நிலைமைகளை மேம்படுத்த வேண்டும்.

### தொழில்களில் தனியார் மூலதனத்தை அதிகரித்தல்

வேலைவாய்ப்பை அதிகரிக்கும் விதத்தில் பொருளாதார வளர்ச்சி இருக்கவேண்டும். பொருளாதாரத் தையும், தொழிலாளர் சந்தையையும் முறைப்படுத்துவதற்கு மருத்துவக் காப்பீடு (ESIC), நிதிக்கொடை/ ஓய்வூதியம் (EPFO) ஆகியவை துணைசெய்யும். இவற்றினால் அதிகமானவர்கள் பயன் பெறும்படி செய்யவேண்டும். பெண்கள் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு வழிவகைகளைக் காணவேண்டும். தொழிலாளர்கள் பங்கேற்கும் தொழில் வளர்ச்சி, ஊதியப் பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு, ஆகியவை தொழிலாளர் சந்தையை வலுப்படுத்த உதவும். தரவுகள் சேகரிப்பை வலுப்படுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதுமையான தீர்வுகளைக் காண்பதன் மூலம் வேலைவாய்ப்பு சந்தையை வலுப்படுத்தலாம்.

**- பிரவின் ஸ்ரீவஸ்தவா,**
இணைச் செயலாளர், புள்ளியியல்,
திட்ட அமலாக்க அமைச்சகம்,
இந்திய அரசு

●

# தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விரிவாக்கப்படும் வேலைவாய்ப்பு சூழல் மற்றும் வாய்ப்புகள்

- ஆர்.வி.சஞ்சீவனா

பரந்து விரிந்த இந்தியா, புவியியல் மற்றும் சாதகமான தட்ப வெட்ப நிலையை தன்னகத்தே கொண்டுள்ளது. உலகப் பொருளாதாரத்தில் வீர நடை போட்டு முன்னேறிய நாடுகளுடன் விவசாயம், தொழில், ராணுவம், கலாச்சாரம் போன்ற பல்வேறு அம்சங்களில் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறது. உலகில், பொருளாதாரத்தில் அதிவேகமாக வளரும் நாடுகளில் 2018ஆம் ஆண்டில் முதலிடத்தை இந்தியா அடையும் என்று IMF நிறுவனம் கணித்திருக்கிறது.

பல்வேறு காரணிகளில் இந்தியப்பொருளாதாரம் சிறந்து விளங்கினாலும், அதிவேக மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்றவாறு முன்னேற்றத்தை மேற்கொள்ள பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, குறைந்த தனிநபர் வருமானம், வருமானப் பங்கீட்டில் சமநிலையற்ற தன்மை, மூன்றில் இரு பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே சார்ந்து இருப்பது, குறைந்த சேமிப்பு மற்றும் முதலீடு போன்றவைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

புள்ளிவிவரங்களின்படி ஏறத்தாழ 31மில்லியன் மக்கள் வேலையில்லாமல் வேலை தேடுபவர்களாக உள்ளார்கள். இந்திய மக்கள்தொகையில் 65% பேர் 35வயதிற்கு கீழ் உள்ளவர்களாகவும், 50% பேர் 25வயதிற்கு கீழ் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இப்புள்ளி விவரம், உலகின் வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத மனிதவள ஆற்றலைக் குறிக்கின்றது. உலகில் பெருமளவில் இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியா என்பது இப்புள்ளி விவரங்களின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது. இளைஞர்களிடம் இயற்கையாகவே இருக்கும் அதீத ஆர்வம், உந்துசக்தி, புதுமைக்கான தேடல் ஆகியவை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கான திறமை மற்றும் ஆற்றல் வளம் அதன் இளைஞர்களின் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயிக்கப் படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் அதிக எண்ணிகையில் தொழில்நுட்ப மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களை பெருமளவில் உருவாக்கி, தொழில்நுட்பங்களை கிடைக்கப் பெறச் செய்கின்றன. இதன் மூலம் இளைஞர்களுக்கான தொழில்முனைதலை ஊக்குவித்து வேலைவாய்ப்பைப் பெருக்கி நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல தொழில் முனைவோருக்கான பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக, புதிய தொழில்களை உருவாக்கி மாநிலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்கி வேலை தேடும் இளைஞர்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்து, சுயதொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு தொழில் முனைவோருக்கான மானியங்களுடன் கூடிய பல்வேறு கடன் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

எட்டு கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது. முக்கிய உற்பத்தி துறைகளான வாகனஉற்பத்தி, உதிரிபாகங்கள், பொறியியல், மருந்துஉற்பத்தி, ஜவுளி, ஆயத்தஆடை, தோல் மற்றும் ரசாயனத்தொழில்களில் சிறந்து விளங்குகிறது. உள்கட்டமைப்பில் முன்னோடியாக, துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்உற்பத்தி மற்றும் அனைத்துபகுதி இணைப்புடன் கூடிய நவீன சாலைவசதிகள் ஆகியவை தொழில்முனைவோர்களுக்கு சாதகமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில், பருத்திநூல் உற்பத்தியில் 41% தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப் படுகிறது. தகவல் தொழில் நுட்பத்துறையின் முன்னேற்றத்திற்கு 16 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையில் தொடர்ந்து அதிகபட்ச உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்து சக்தியாகத் திகழ்கின்றன. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு உருவாக்கம், குறைவான முதலீடு, புதுமையான முயற்சி, பிராந்திய வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கு முக்கிய பங்களிப்பு அளிக்கின்றன.

**தமிழ் நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்**

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அபரிதமான வளர்ச்சியும் தனித்தன்மை கொண்டு பல்வேறு விதமான பொருள்களை தயாரித்து வருகின்றது. சுமார் 17.79 இலட்சம் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி2 மற்றும் உத்யோக் ஆதார்

பதிவறிக்கை பதிவு செய்யப்பட்டு, சுமார் 113.57 இலட்சம் நபர்களுக்கு ரூ.1,93,704.90 கோடி முதலீட்டில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட உத்யோக் ஆதார் பதிவறிக்கையினைத் தொடர்ந்து 21.1.2016 முதல் உத்யோக் ஆதார் பதிவறிக்கை செயலாக்கத்திற்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் 31.3.2018 வரை 5,26,947 நிறுவனங்கள் உத்யோக் ஆதார் பதிவறிக்கைப் பெற்றுள்ளன. இவற்றில் முறையே 4,63,836 குறுந் தொழில் நிறுவனங்கள், 61,613 சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் 1,498 நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகும்.

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் ஜவுளி, பொறியியல் பொருள்கள், தானியங்கி, மின் பொருள்கள், தோல் பொருட்கள், நெகிழி பொருள்கள் (பிளாஸ்டிக்) மற்றும் ஆயத்த ஆடைகள் முதலான பொருள்கள் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. இந்நிறுவனங்களை வலுவூட்ட தமிழ்நாடு அரசின் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

**குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளரத் தீர்வுக்குழு**

தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை விரைவாக பெற்றுத் தருவதற்கு மாவட்டத் தொழில் மையத்தில் செயல்படும் ஒரு முனை தீர்வுக்குழு வாயிலாக விரைந்து பெற்று அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2017-18ஆம் ஆண்டு மாநில அளவில் 403 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், 371 விண்ணப்பங்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் / விதிகள் 2018**

தமிழ்நாட்டை இந்தியாவின் மிக முதன்மையான தொழில் முதலீட்டுக்களமாக மாற்றும் உயரிய நோக்கத்துக்கு துணைசெய்யும் விதமாக வணிக நடைமுறைகள் எளிதாக்கும் / மேம்படுத்தும் சட்டம் 2018 இயற்றப்பட்டுள்ளது.

இந்த ஒற்றைச் சாளர அமைப்பினை செயல்படுத்த மாவட்டத் தொழில் மையங்கள் / அரசுத்துறை தொழில் வழிகாட்டு நிறுவனம் ஆகிய இரு அலுவலகங்கள் முறையே குறு, சிறு, நடுத்தரத் தொழில் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு உரிய அமைப்புகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

**குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவன சலுகை திட்டங்கள்**

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு, அரசு கீழ்க்காணும் சலுகைத் திட்டங்களை வழங்கி வருகிறது:

**முதலீட்டு மானியம்**

தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் (அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை) வழங்கப்படுகிறது. மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25விழுக்காடு, (அதிகபட்சம் ரூ.3 இலட்சம்) கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு பெருக்க மானியத் திட்டத்தின் கீழ் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் 5 விழுக்காடு (அதிகபட்சம் ரூ.5 இலட்சம்) மானியம் வழங்கப் படுகிறது. 2011-12 முதல் 2017-18 வரை 10,504 பயனாளிகளுக்கு ரூ.57,000 இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



**குறைந்தழுத்த மின்மானியம்**

மாநிலத்தில் எப்பகுதியிலும் நிறுவப்படும் அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு 20% குறைந்த மின் மானியம், உற்பத்தி தொடங்கிய நாள் முதல் 36 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. 2011-12 முதல் 2017-18 வரை 7,308 பயனாளிகளுக்கு ரூ.4,264.16 இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**மின்னாக்கி மானியம்**

குறு உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் 25% (320KVA வரை)

அதிகபட்சமாக 5,00,000 வரை மின்னாக்கி மானியம் வழங்கப்படுகிறது. 2011-12 முதல் 2017-18 வரை 8,583 பயனாளிகளுக்கு ரூ.9,948.09 இலட்சம் மின்னாக்கி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் ஆகியவற்றிற்காக வாங்கும் ரூ.1 கோடி வரையிலான கடன்களின் மீது 5 ஆண்டுகளுக்கு 3 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

ஆற்றல் தணிக்கைக் கட்டணத்தில் 50 விழுக்காடு மானியமாக, அதிகபட்சம் ரூ.75,000/ வரை வழங்கப்படுகிறது. ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம் மற்றும் நிறுவப்படும் எந்திரங்களுக்கு 25 விழுக்காடு வரை மானியமாக, அதிகபட்சம் ரூ.2,00,000/ வரை வழங்கப்படுகிறது.

### வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Unemployed Youth Employment Generation Program)

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) நடைமுறை படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி/சேவை/வியாபார நிறுவனங்கள் தொடங்கிட திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் அரசு மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், 2011-12 முதல் 2017-18 வரை, 33,582 பயனாளிகளுக்கு ரூ.15,941.55 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneurs cum Enterprise Develepment Scheme (NEEDS))

படித்த முதல் தலைமுறை இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் 2012-13ஆம் ஆண்டு முதல், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) என்ற திட்டத்தினை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ், 1,000 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் (EDII) தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. உற்பத்தி மற்றும் சேவைத்தொழில் திட்டங்களுக்கு, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25 % முதலீட்டு மானியம் (ரூ 25 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்குவதோடு வங்கிக் கடனுக்காக வட்டியில் 3% பின்முனை மானியத்தை அரசே செலுத்தும். திட்ட மதிப்பீடு, குறைந்த பட்சம் ரூ.10 இலட்சத்திற்கு மேலும் அதிகபட்சம் ரூ.5 கோடிக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1 கோடிக்கு மிகும் திட்டங்களுக்கான மானியம், அதிக பட்சம் ரூ.25 இலட்சம் என்று வரையறுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31.3.2018 வரை 2,868 பயனாளிகள் வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக (TIIC), கிளைகள் மூலம் ரூ.300.04 கோடி அரசு மானியத்துடன் கூடிய ரூ.1,927 கோடி திட்ட மதிப்பீட்டில் கடனுதவி பெற்றுள்ளனர். அரசு, இந்த பயனாளிகள் தங்கள் நிறுவனங்களை தொடங்கும் நோக்கில் முதலீட்டு மானியமாக ரூ.246.592 கோடியும், 3 விழுக்காடு பின் முனை வட்டி மானியமாக ரூ.15.82 கோடியும் வழங்கியுள்ளது.

### பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Prime Minister's Employment Generation Program (PMEGP))

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தித் தொழில்களுக்கு அதிகபட்சமாக ரூ.25 இலட்சமும், சேவை தொழில்களுக்காக ரூ.10 இலட்சமும் திட்ட மதிப்பீடாக இருக்கவேண்டும். பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் 2011-12 முதல் 2017-18 வரை, 9,692 பயனாளிகளுக்கு ரூ.20,650.45 இலட்சம் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### சந்தை வாய்ப்பு உதவி

அரசு, குறு, சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகளை செய்துவருகிறது:

ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு வழங்கப்படும் முன்வைப்புத் தொகை செலுத்துவதி லிருந்து விலக்கு அளித்தல்

இம்மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் நடைபெறும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்துகொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

இவ்வாறாக தொழில் முன்னேற்றத்தின் மூலம் சுய வேலைவாய்ப்பினைப் பெருக்கி இளைஞர்கள் பெருமளவில் சொந்த காலில் முன்னேற தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII) மிகப்பெரிய பங்காற்றுகிறது.

### தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII)

இந்நிறுவனம், இலாப நோக்கமில்லா நிறுவனமாக தமிழக அரசால் 2001ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்கநிறுவனம், தொழில் துவங்குவது, முதல் தொழிலை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கிட பல்வேறு பயிற்சிகளை வழங்கி

வருகிறது. இவை மட்டுமின்றி ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் உருவாக்குவதற்கான வாய்ப்புகளை தொழில் முனைவோருக்கு ஏற்படுத்தித் தருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் இதுவரை பல்வேறு துறைகளில் 1.91 இலட்சம் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் விரிவான மேலாண்மைத் திட்டம் 2016-2021இல், தொழில் வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு சேவைகளை வழங்கி உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்ப நிலை தொழில்முனைவோர், தொழில் புரிவோர், தொழில் வழிகாட்டுநர்கள் மற்றும் தொழில் குழுமங்கள் உள்ளடக்கிய மொத்தம் 26,097 நபர்களுக்கு 2017-18ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில் இயங்கும் தொழில் உதவி மையம் 2015-16இல் துவங்கப்பட்டு இதுவரை தொழில் தொடங்க ஆர்வமுள்ள 6,210 நபர்கள் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் மூலம் உதவி பெற்றுள்ளனர்.

**குழும வளர்ச்சித் திட்டம்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழில் குழுமங்கள் மற்றும் அதனை சார்ந்த தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு பயிற்சி முகாம் / கருத்தரங்கங்கள் / பயிற்சிப் பட்டறைகள் நடத்திவருகிறது. இப்பயிற்சித் திட்டங்களின் மூலம் மேற்படி குழுமங்கள் மற்றும் குழும அங்கத்தினர்கள் தங்கள் திறனை வளர்த்துக்கொண்டு சந்தையில் தங்களை நிலை நிறுத்திக்கொள்ளும் தன்மையை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்**

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்க தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சட்டத்திட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மாநில புத்தாக்க மையமாக தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனம் விளங்கிவருகிறது.

**புத்தாக்க மற்றும் பொரிப்பகம்**

தொழில்முனைவு மற்றும் புத்தாக்கக்கொள்கை முடிவுகள் எடுப்பதில் ஆராய்ச்சியினை கருவியாகக் கொண்டு, ஆவண வெளியீடுகளில் ஆராய்ச்சி மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுப்பதற் கான வசதிகளை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் மாணவர்களுடன் சேர்ந்து ஆராய்ச்சி மாநாடுகளை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்திவருகிறது. தொழில்நுட்பப் பொரிப்பக மையங் களை உயர்கல்வி நிறுவனங்களில் நிறுவ தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

**தமிழ்நாடு உற்பத்தி வணிகக் காப்பக உள்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம்**

உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கூடங்களில் குறைந்த செலவில் உற்பத்திப் பொரிப்பகங்களை தமிழ்நாடு உற்பத்தி வணிகப் பொரிப்பக உள்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம் மூலம் அமைத்து நடப்பில் உள்ள தொழில்நுட்பம் சார்ந்த பொருள தாரத்தில் சாத்தியமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை எட்டு நிறுவனங்கள் தொழில்நுட்ப அடிப்படையில் இத்திட்டத்தில் தேர்வு பெற்றிருக் கின்றன.

**உயிரி தொழில்முனைதல்**

உயிரி தொழில்நுட்பம் அடிப்படையிலான தொழில்முனைவு முற்படுவோருக்காக கோயம்பத்தூர் வேளாண் பல்பலைக்கழகத்தில் 200 பேருக்கு 'உயிரி தொழில்முனைதலில் மூலிகை ஆராய்ச்சி' என்ற தலைப்பில் பயிலரங்கு மற்றும் மதுரை வேளாண் பல்கலைக் கழகத்தில் 'தோட்டக்கலைத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் பயிலரங்கு நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து FFDC, Kannauj, UP, உடன் இணைந்து அத்தியாவசிய எண்ணெய்கள்/வாசனை திரவியங்கள் பிரித்தெடுக்கும் வசதிகள் மற்றும் கட்டமைப்புகளை நிறுவுதல், தரக்கட்டுப்பாடுடன் கூடிய மல்லிகை மற்றும் வெட்டிவேரை சந்தைப் படுத்துதல் போன்ற முயற்சிகளை எடுத்து வருகிறது.

**மகளிர் தொழில்நுட்ப தொழில் முனைவோர்**

புதிய முயற்சியாக, மகளிர் தொழில்நுட்பத் தொழில் முனைவோர்களை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பம், பொறியியல், அறிவியல் மற்றும் கணிதம் படித்த பெண்கள் தொழில் நுட்பங்களின் துணை கொண்டு நிலைத்த நீடித்த தொழில்முனைதலுக்கு வழிவகுக்கப் படுகிறது. இதற்காக, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாடு மகளிர் உயிரித் தொழில்நுட்பப் பூங்காவோடு செப்டம்பர் 2017இல் ஒப்பந்தம் செய்துள்ளது.

**ஆராய்ச்சிகள்**

மாநிலத்தில் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், தொய்வை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து களையவும் முயற்சிகள் மேற்கொள்ளபட்டுள்ளன. இதன் துவக்கமாக, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் புதுமைகளின் எல்லைகளை விரிவுபடுத்த, சிறிய நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் முனைவுத் திறன்களை செயல்படுத்த ஒருநாள் மாநாடு நடத்தி முடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 250 நபர்கள் பங்கேற்று, உலகத் தயாரிப்பு மற்றும் கண்டுபிடிப்பு மையமாக தமிழ் நாட்டின் வளர்ச்சியை ஊக்கு விப்பதற்கான கூட்டு நடவடிக்கை குறித்து கலந்துரையாடப்பட்டது.

**மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவு வளர்ச்சித் திட்டம் (AIEDP)**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில், தொழில் முனைவு மற்றும் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒரு முழுமையான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல் படுத்தி வருகிறது. தொழில்முனைவு மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கு உயர் கல்வி நிறுவனங்களிலும் அதனைச் சார்ந்த இடங்களிலும் சாதகமான சூழலை உருவாக்குதல், பயிற்சி நடத்துநர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களின் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கத் திறமைகளை வளர்த்தல், புதிதாகத் தோன்றும் நிறுவனங்களின் வளர்ச்சியினை அளவிட்டுக் காட்டுவதுடன் அவற்றின் மேம்பட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல் மற்றும் அறிவுசார் சொத்துரிமையை உருவாக்கவும் அதனை வணிகமய மாக்கவும் உறுதுணையாக இருத்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

2016-17 இல் சென்னை, தஞ் சாவூர், மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள 6 முன்னோடி கல்வி நிறுவனங்கள் மண்டல மையங்களாக தெரிவு செய்யப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் உள்ள 2530 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள், கல்லூரி வளாகத்திற் குள்ளாகவோ அல்லது அருகிலோ புதிய தொழில் முனையங்களை அமைக்க உதவுகின்றன. தற்போது திருச்சி, திருநெல்வேலி மற்றும் காரைக்குடியை சேர்த்து 9 மண்டல மையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. மேற்படி மண்டல மையங்களின் உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 411 கல்லூரி மேலாண் உறுப்பினர்கள், 675 பயிற்றுநர்கள் மற்றும் 582 மாணவர்களுக்கு புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டம் குறித்த பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இந்த இணையதள பாடத்திட்டத்தில் 18,677 மாணவர்கள் தன்னார்வத்துடன் சேர்ந்து 1,783 பேர் முதல் நிலை பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளனர்.

**புதுத்தொழில்முனைவு இயக்கம்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாட்டிற்கான புதுத்தொழில் முனைவு குறித்த ஒரு வரைவு செயல்திட்டத்தினை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், புதிய தொழில் எண்ணங்களுக்கு உருவளிக்கும் போட்டிகளையும் குறிப்பிட்ட தலைப்புகளில் முன்வைக்கப்படும் பெருத்த சவால்களிலும் வெற்றி பெற்ற துவக்கநிலை தொழில்முனை வோர்களுக்கு ஆதார நிதி உதவி வழங்கி ஆதரவு அளிக்கிறது.

இந்தியாவில் நடைபெற்ற பல முன்னணி பன்னாட்டு கண்காட்சி களில் வெவ்வேறு தொடக்கநிலை தொழில்முனைவோர்/ கண்டுபிடிப் பாளர்களுடன் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பங்கேற்று அவர்களின் பொருட்களை/ தொழில்நுட்பங்களை பன்னாட்டளவில் சந்தைப்படுத்த உதவி செய்துள்ளது.

‘தொழிலும் வாழ்வும்’ என்ற தலைப்பில் அகில இந்திய வானொலியின் ரெயின்போ பண்பலையில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 4.45 5 மணி வரை 15 நிமிடம் ஒலிபரப் பாகிறது. இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு தொழில்முனைவு குறித்தும் அதற்காக அரசு வழங்கும் உதவிகள், சலுகைகள் பற்றியும் கூறப்படுகிறது. `நிமிர்ந்து நில்’ என்னும் தலைப்பில் பொதிகை தொலைக்காட்சியில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 11.30 முதல் 12 மணி வரை 52 வார நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

மேற்கூறிய வளர்ச்சித் திட்டங்களுடன் தொழில் முனைதலை மேம்படுத்த தமிழக அரசு பயிற்சிகள் மற்றும் கொள்கைகளை வடிவமைத்துள்ளது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களிடையே தொழில்முனைதலை ஊக்குவிக்கவும் இளையோரின் மனதில் கண்டுபிடிப்பு சார்ந்த தொழில்முனைவை உருவாக் கிடவும் கல்லூரி அளவிலான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தி அதில் சமுதாயத்தில் காணப்படும் பிரச்னைகளை அடையாளம் கண்டு இளைஞர்களை சுயதொழில் மூலம் நல்வழிப்படுத்த அரசு இயந்திரங்கள் தீவிரமாக முயன்று வெற்றியடைந் திருக்கின்றன.

- **ஆர்.வி.சஞ்சீவனா,** கூடுதல் இயக்குநர், தொழில்முனைவோர் மற்றும் புதுமையாக்க நிறுவனம், தமிழ்நாடு அரசு. ●